@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

நவம்பர் 2018

Vol.1, Issue 6 | Annual Subscription ₹ 420

Rotary



**சென்னை மாநாட்டில் RIPNஐ கௌரவித்தல்**

# சென்னை நிகழ்வுகள்

கே. விஸ்வநாதன்



சென்னை மாநாட்டில் RID C பாஸ்கர் மற்றும் இன்ஸ்டிட்யூட் தலைவர் PDG ISAK நாசருடன் அருமையான தருணம்.

# உள்ளே


**12 மாற்றத்துக்குத் தயாராகுங்கள்: பாரி ரஸ்ஸின்**
ரோட்டரி மண்டல இன்ஸ்டிட்யூட்டில் RI தலைவர் பாரி ரஸ்ஸின் ரோட்டரியினரிடம் ரோட்டரியை வலுப்படுத்த வலியுறுத்துகிறார்.

**22 கேரளாவை புனரமைப்போம்**
பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடு கட்டிக் கொடுக்க ரோட்டரியினருக்கு மண்டல மாநாட்டில் வேண்டுகோள்.

**26 சென்னை ரோட்டரியின் முன்முயற்சிகள், ஒருங்கிணைந்த பயிற்சிகள்**
4,5, 6A மண்டலங்களில் பல்வேறு நேர்மறை முயற்சிகளை RID C பாஸ்கர் முன்னிலைப்படுத்துகிறார்.

**32 மூன்று PRIP வாழ்த்து மழையில் RIPN குப்தா**
சுஷில் குப்தா அவர்கள் 2020-21 RI தலைவராக தேர்வு பெற்றதை PRIPs ராஜேந்திர சாபூ, கல்யாண் பானர்ஜீ மற்றும் KR ரவீந்திரன் கொண்டாடுகின்றனர்.

**44 அதிரடி பாய்ச்சலுக்கு இந்திய ரோட்டரி தயார்**
சென்னையில் நடந்த மண்டல மாநாட்டிலும், தில்லியிலும் RIPN சுஷில் குப்தாவிற்கு பாராட்டு விழா.

**54 TRFக்கான இந்தியாவின் அளப்பெரிய பங்களிப்பு**
இந்திய ரோட்டரியினரின் பெருந்தன்மையால் மூன்றாவது வருடமாக இந்தியா TRF நிதி திரட்டுவதில் இரண்டாவது இடத்தை தக்க வைத்துள்ளது.

**60 கொழும்பு சங்கத்துக்கு வயது 90**
RI தலைவர் பாரி ரஸ்ஸின் இலங்கை ரோட்டரியினருடன் கொழும்பு சங்கத்தின் 90வது வருடத்தை கொண்டாடுகிறார்.

**72 தீவிபத்திலிருந்து பிழைத்தவர்களுக்கு மறுவாழ்வு!**
RC கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ் தீக்காயமுற்றோருக்கு பிளாச்டிக் அறுவை சிகிச்சை அளித்து மறுவாழ்வு தருகின்றனர்.




















**அட்டை:** சென்னை மண்டல மாநாட்டில் RIPN சுஷில் குப்தா மற்றும் வினிதாவிற்கு பாராட்டு விழாவில் எஸ்தருடன் RIP பாரி ரஸ்ஸின்.

**படம்:** ரஷிதா பகத்

## PRIP MAT கேபராஸ் இந்திய ரோட்டரி, ரோட்டரி நியூஸுக்கு பாராட்டு

*முதலில், அதிகாரப்பூர்வமாக நியமிக்கப்பட்டுள்ள சுஷில் (குப்தா) அவர்களுக்கு வாழ்த்துக்கள். நான் பதவி வகித்த ஆண்டில் கவர்னராக இருந்த ஒருவர் இப்போது பிரசிடென்டாக பொறுப்பேற்க அழைக்கப்பட்டிருக்கிறார் என்பது எனக்கு பெருத்த மகிழ்ச்சியைத் தருகிறது. அதைவிட, நீங்கள் தற்போது சுற்றுமுற்றும் உள்ள தேவையுள்ளோருக்குத் தொண்டாற்றுவதில் களமிறங்கி இருக்கிறீர்கள், அதன் பலன்களையும் கண்கூடாகப் பார்க்க முடிகிறது என்பது அளப்பெரிய ஆனந்தத்தைத் தருகிறது.*

*மேலும், ரவி சங்கர்-பாவ்லா தம்பதியினர் நமது TRFக்கு வழங்கிய $14.7 மில்லியன் நன்கொடைக்காக நன்றி சொல்ல என்னிடம் வார்த்தைகளே இல்லை. ரோட்டரியின் முன்னணி வீரர்கள்-அதாவது நீங்கள்-இந்நாட்டு ரோட்டரிக்கு ஏற்படுத்திய முன்னேற்றமே அவர்களின் கொடை உள்ளத்தில் கிளர்ச்சியைத் தூண்டியது. உங்களை வளமார வாழ்த்துகிறேன்!*



*இது மட்டுமல்ல, ரோட்டரி நியூஸ் இதழுக்கும் இதில் முக்கியப் பங்கு இருக்கிறது என்பதை நாம் மறந்துவிடக் கூடாது, ரோட்டரியின் தொண்டுகளை நேர்மையோடு வெளிக்கொண்டு வந்ததால் தான் நமது உன்னத நன்கொடையாளர்கள் அதுபற்றிப் புரிந்துகொள்ள முடிந்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக இந்த இதழ் தொடர்ச்சியான முன்னேற்றம் கண்டுள்ளது, இதுவெல்லாம் இதன் புதிய இதழாசிரியரின் பங்களிப்பே என்று சொன்னால் மிகையாகாது. நமது அமைப்பின் ஒரு குரல் என்ற வகையில், ரோட்டரி நியூஸ் ஏற்கனவே நமது அதிகாரப்பூர்வ பத்திரிக்கையை விட சிறப்புற்று விளங்குகிறது எனலாம்.*

MAT *கேபராஸ்*, PRIP (1986–87),
*பிலிப்பைன்ஸ்,*

(PRIP *கேபராஸ் அவர்கள் அக்டோபர் 4 அன்று சில மூத்த ரோட்டரி தலைவர்களுக்கு எழுதிய கடிதம்)*

### ரொட்டேரியன்கள் கேரளாவுக்கு உதவி

ஜெய்ஸ்ரீ அவர்கள் எழுதிய கேரளத்துக்கு உதவ ரோட்டரி முழுவீச்சில் களமிறங்கியது என்ற கட்டுரையில், வெள்ளத்தின் பேரழிவால் எப்படி கேரள மக்கள் துன்பப்பட்டனர் என்பதையும், அவர்களின் துயர் துடைக்க ரோட்டரி எப்படிச் சேவையாற்றியது என்பதையும் விவரித்துக் காட்டியுள் ளார். பாதிக்கப்பட்டவர்களுக்கு உணவுப் பொட்டலங்கள், தண்ணீர் பாட்டல்கள், துணிமணிகள் வழங்கி முதன் முதலில் உதவிய தொண்டு நிறுவனம் ரோட்டரியே என்பது மகிழ்ச்சி அளிக்கும் செய்தி.

போலியோ ஒழிப்பில் ரோட்டரி யின் பங்கு பாராட்டத்தக்கது. மும்பையில் உள்ள ஒரு நடுத்தரக் குடும்பத்தைச் சேர்ந்த சேத்னா என்பவர் மன் தேசி மஹிலா சஹாகாரி பேங்க் தொடங்கியது பற்றி RID C பாஸ்கர் கூறிய கதை அருமை.

ஆதேஷ் சிக்ச்சி எழுதிய வெற்றிகரமான சங்கங்களுக்கு சிறந்த நடைமுறைகள் என்பதிலுள்ள குறிப்புகளைப் பின்பற்றினால் நம் சங்கங்கள் மேலும் நன்றாகச் செயலாற்ற முடியும். மன்கதாவில் தொட்டு, உணர்ந்து, கற்கும் குழந்தைகள் பூங்கா பற்றிய செய்தி, நமது சங்கங்கள் பின்பற்றத்தக்க ஒரு புதுமையான யோசனை. குழந்தைத் திருமணத்துக்கு எதிராக ராய்கர் ஸ்டீல் சிட்டி ரொட்டேரியன்கள் செய்த பிரச்சாரம் நிச்சயமாக ஓர் உன்னத நடவடிக்கை.

LN-4 க்ரம் மற்றும் ரோட்டரியின் காசநோய் ஒழிப்பு திட்டம் போன்ற எல்லா கட்டுரைகளும் வாசிக்கச் சுவையாக இருந்தன. ஆசிரியர் குழுவின் நன்முயற்சிக்கு நன்றி.

MT பிலிப், RC திருவனந்தபுரம்
சபர்பன் — D 3211

கேரளப் பிரளயத்தில், அரசு அமைப்புகளுக்கும் முன்பே, முதலில் களமிறங்கி நிவாரணப் பொருட்களை வழங்கியவர்கள் ரொட்டேரியன்கள். 3201, 3202 மற்றும் 3211 ஆகிய டிஸ்ட்ரிக்ட்களைச் சேர்ந்த ரொட்டேரியன்கள் கேரளத் தில் ஆற்றிய பணி அளப்பெரியது. வடா-பாவ் அற்புதம்! என்ற கட்டுரை, எப்படி LN-4 செயற்கைக் கைகள் பொருத்தப்பட்ட நபர்கள் மீண்டும் இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பினர் என்பதை எடுத்துரைக்கிறது. RC பூனா டவுன்ட்டவுன் உறுப்பினர்களுக்கு சபாஷ்! மகாராஷ்டிரா, மத்திய பிரதேசம், குஜராத், ராஜஸ்தான், தமிழ்நாடு, பிகார், கர்நாடகா, உபி, தெலுங்கானா, காஷ்மீர் மற்றும் இன்னபிற பகுதிகளில் வெற்றிகரமாக செயற்கை உறுப்புகள் முகாம் நடத்திய வீரர்கள் இவர்களே.

அசாமில் வெறும் 21 உறுப்பினர்களே கொண்ட RC திஸ்பூர் சங்கத்தினர் (வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு மிதக்கும் வீடுகள்) பிரம்மாதமான திட்டப் பணியை நடத்திக் காட்டினர். கவுஹாத்தியிலிருந்து 340 கிமீ தொலைவில் உள்ள மாஜூலி என்ற நதித் தீவில் வசிக்கும் மக்களுக்கு, வெள்ளம் ஏற்படும் காலங்களில் இந்தத் திட்டப்பணி பெரிதும் உதவும். அந்தச்

சமூகத்துக்கு மிகவும் பயனுள்ள இத்தகு திட்டப்பணியை சிந்தித்து உருவாக்கிய டிஸ்ட்ரிக்ட் கவர்னர் மற்றும் சங்கத்தி னருக்கு எனது உளமார்ந்த நன்றி.

S முனியாண்டி, RC திண்டுக்கல் மலைக்கோட்டை — D 3000

தன்னம்பிக்கை மீட்போம் என்ற அட்டைப்படச் செய்தி படு ஜோராக இருந்தது. முதலில், இது எங்கள் ஊர் ரோட்டரி சங்கத்தின் திட்டப்பணியை சித்தரிக்கும் படம் என்று நினைத்துக் கொண்டேன். ஏனென்றால், சமீபத்தில் RC பூனா டவுன்ட்டவுனுடன் கைகோர்த்து RC பெர்ஹாம்பூர் ஈஸ்ட் ஒரு LN-4 திட்டப்பணியை நடத்தியது. தலை சிறந்த நிகழ்ச்சியாக விளங்கிய அதற்கு, முழு ஒடிஸாவிலிருந்தும், அண்டை மாநிலமான ஆந்திர பிரதேச த்திலிருந்தும் பலர் வந்து உறுப்புகள் பெற்று பயனடைந்தனர்.

போலியோ ஒழிப்பு என்ற கனவை நனவாக்குவோம், இன்று பெரும்பாலான நாடுகளில் போலியோ அறவே இல்லை. இலட்சியக் கனவோடு பாடுபட்ட ரோட்டரி தலைவர்களுக்கு வாழ்த்துக்கள். கேரள வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவ பரந்த மனதுடன் ரொட்டேரி யன்கள் முழுவீச்சில் களமிறங்கினர். மனித குலத்துக்குத் தொண்டாற்ற நாம் எடுத்த துரித நடவடிக்கையை இது கோடிட்டுக் காட்டுகிறது. இதிலுள்ள செய்திகள் ஊக்கம் கொடுக்கும் கட்டுரைகள். உலக மக்களுக்கு சேவை செய்ய நல்லதை பார்ப்போம், யோசிப்போம், செய்வோம் என்பது ரொட்டேரியன்களின் மூல மந்திரம்.

PRN சந்திர மௌலி
RC பெர்ஹாம்பூர் மிட்டவுன் — D 3262

RC நவி மும்பை, D 3142 மேற்கொண்ட செயல்பாடுகள் என் உள்ளத்தைக் கவர்ந்துவிட்டது. வருகைதரும் பிரமுகர்களுக்கு உணவுக் கூப்பன்களைப் பரிசளித்து, அவர்களிடம் கையெழுத்து வாங்கி, அவற்றை ஏழை எளிய மக்களுக்கு வழங்கியது ஒரு சமயோசிதமான செயல். மரங்கள் நட்டு வளர்ப்பதும் பராமரிப்பதும் இயற்கை அன்னையை பேணிக்காக்க தலைசிறந்த வழி. சங்கக் கட்டிடங்களை வேறு சங்கங்களுக்கு வாடகைக்கு விடுவதும் கூட, நமக்கு வருவாய் ஈட்டித்தரும் ஒரு புதுமையான யோசனை. எல்லா சங்கங்களும், நடைமுறை ரீதியாகச் சமூகத்துக்குத் தொண்டாற்றும் இவர்களின் உதாரணத்தைப் பின்பற்ற வேண்டும். மற்ற சங்கங்களின் புதுமைத் திட்டப்பணிகள் பற்றி மேலும் பல கட்டுரைகள் வரும் என்று நம்புகிறேன்.

சோபனா நாராயணன்
RC கலமச்சேரி — D 3201

பேரார்வம் கொண்ட சேலம் ரொட்டேரியன்கள் பட்டாயா அநாதை இல்லத்துக்கு உதவிக்கரம் என்ற கட்டுரையை நான் வாசித்தேன். RC சேலம் யங் டவுன் உறுப்பினர்கள் இரண்டு பிரயோஜனமான திட்டப்பணிகளைச் செய்தனர்: தாய்லாந்து நாட்டு பட்டாயாவில் உள்ள 150 அநாதை இல்லக் குழந்தைகளுக்கு ரூ.50,000 நன்கொடை அளித்தனர், மேலும் யாழ்ப்பாணத்தில் உள்ள கிளிநொச்சி நகரின் குழந்தைகளுக்கு ரூ.1 லட்சம் மதிப்புள்ள நோட்டுப் புத்தகங்களும் சீருடைகளும் வழங்கினர்.

பொதுவாக, ரொட்டேரியன்கள் சுற்றுலா நிமித்தமாகவே பட்டாயா வுக்கும் இலங்கைக்கும் செல்வார்கள், அப்போது அங்கேயுள்ள ரோட்டரி சங்கங்களின் கூட்டங்களில் பங்கெடுத்து, கொடிகளை பரிமாறிக் கொள்வார்கள். ஆனால் இந்தச் சங்கத்தினர், அநாதை இல்லத்தின் குழந்தைகளுக்கு உதவிக்கரம் நீட்டி நூதனமானதொரு உதாரணம் படைத்துள்ளனர்.

S. மோகன்
RC மதுரை வெஸ்ட் — D 3000

சந்தியா ராவ் எழுதிய தற்செயலான புத்தகங்கள் எனது கற்பனையைத் தூண்டிவிட்டது, பல்லாண்டுகளுக்கு முன்பு பால் புருண்டனின் தி சேர்ச் இன் சீக்ரட் இந்தியா என்ற புத்தகத்தை வாசித்த பசுமையான நினைவுகள் எனக்குத் திரும்பிவந்தது.

மௌன முனிவர் ரமணா மஹரிஷியின் இலட்சிய சிந்தனைகளும் அற்புதமான எண்ணங்களும் அடங்கிய அந்தப் புத்தகம் என் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. இந்தக் கட்டுரையை படித்த பின், சோமர்செட் மௌகமின் 'ஏ ரேஸர்ஸ் எட்ஜ்' என்ற நூலை வாங்கிப் படிக்க வேண்டும் என்ற துடிப்பு எனக்குள் உருவானது.

தீபக் அகர்வால், RC சிலிகுரி மிட்டவுன் — D 3240

செப்டம்பர் இதழில் நமது புதிய திட்டப்பணி பற்றி வந்த அவர்களுக்குக் கை-கால்களை மீட்டுத்தருவோம் என்ற கட்டுரையை படிக்கும்போது சந்தோசமாக இருந்தது. இது நமக்கு மட்டுமல்லாமல், குறிப்பாக சமீபத்தில் இணைந்த புதிய ரொட்டேரியன்களுக்கும் நமது திட்டப்பணியின் விசாலத்தைப் புரியவைத்து ஊக்கம் தந்துள்ளது.

சுரேஷ் கோகுல்தாஸ்,
RC கோயம்புத்தூர் மிட்டவுன் — D 3201

## தரமான பத்திரிகை

அரசியல்வாதி என்பதற்கும் மேல், தோழமையும் தொலைநோக்கும் தாராளமும் குடிகொண்ட மனிதராக விளங்கிய நமது முன்னாள் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாயி குறித்து ஷக்திசின்ஹா எழுதிய கட்டுரை நெஞ்சை நெருடியது.

டேனியல் சிட்டிலப்பள்ளி
RC கள்ளூர் — D 3201

## ரொட்டேரியனாக விரும்புகிறேன்

ரோட்டரி செய்யும் நற்பணிகள் பற்றி ரோட்டரி சமாச்ச ார் இதழில் படித்தேன், நானும் ரொட்டேரியன் ஆகவேண்டும் என்ற ஆசை ஏற்பட்டுள்ளது. தயவுசெய்து இதற்கு என்ன செய்யவேண்டும் என்று சொல்லுங்கள்.

தேவதாஸ், தாராகஞ்சு (அலஹாபாத்)

*உங்களுடைய கருத்துக்களை நாங்கள் வரவேற்கிறோம். ஆசிரியருக்கு எழுதுங்கள்:* rotarynews@rosaonline.org; rushbhagat@gmail.com

## Governors Council

| | | |
|---|---|---|
| RI Dist 2981 | DG | S Piraiyon |
| RI Dist 2982 | DG | Nirmal Prakash A |
| RI Dist 3000 | DG | RVN Kannan |
| RI Dist 3011 | DG | Vinay Bhatia |
| RI Dist 3012 | DG | Subhash Jain |
| RI Dist 3020 | DG | Guddati Viswanadh |
| RI Dist 3030 | DG | Rajiv Sharma |
| RI Dist 3040 | DG | Gustad Anklesaria |
| RI Dist 3053 | DG | Priyesh Bhandari |
| RI Dist 3054 | DG | Neeraj Sogani |
| RI Dist 3060 | DG | Pinky Patel |
| RI Dist 3070 | DG | Barjesh Singhal |
| RI Dist 3080 | DG | Praveen Chander Goyal |
| RI Dist 3090 | DG | Dr Vishwa Bandhu Dixit |
| RI Dist 3100 | DG | Deepak Jain |
| RI Dist 3110 | DG | Arun Kumar Jain |
| RI Dist 3120 | DG | Stuti Agrawal |
| RI Dist 3131 | DG | Dr Shailesh Palekar |
| RI Dist 3132 | DG | Vishnu S Mondhe |
| RI Dist 3141 | DG | Shashi Sharma |
| RI Dist 3142 | DG | Dr Ashes Ganguly |
| RI Dist 3150 | DG | Ramesh Vangala |
| RI Dist 3160 | DG | Konidala Muni Girish |
| RI Dist 3170 | DG | Ravikiran Janradan Kulkarni |
| RI Dist 3181 | DG | Rohinath P |
| RI Dist 3182 | DG | Abhinandan A Shetty |
| RI Dist 3190 | DG | Suresh Hari S |
| RI Dist 3201 | DG | A Venkatachalapathy |
| RI Dist 3202 | DG | Dr E K Ummer |
| RI Dist 3211 | DG | E K Luke |
| RI Dist 3212 | DG | K Raja Gopalan |
| RI Dist 3231 | DG | C R Chandra Bob |
| RI Dist 3232 | DG | Babu Peram |
| RI Dist 3240 | DG | Dr Sayantan Gupta |
| RI Dist 3250 | DG | Kumar Prasad Sinha |
| RI Dist 3261 | DG | Nikhilesh M Trivedi |
| RI Dist 3262 | DG | Bhabani Prasad Chowdhury |
| RI Dist 3291 | DG | Mukul Sinha |

## Board of Permanent Trustees & Executive Committee

| | | |
|---|---|---|
| PRIP | Rajendra K Saboo | RI Dist 3080 |
| PRIP | Kalyan Banerjee | RI Dist 3060 |
| PRID | Sudarshan Agarwal | RI Dist 3011 |
| PRID | Panduranga Setty | RI Dist 3190 |
| PRID | Sushil Gupta | RI Dist 3011 |
| PRID | Ashok Mahajan | RI Dist 3141 |
| PRID | Yash Pal Das | RI Dist 3080 |
| PRID | Shekhar Mehta | RI Dist 3291 |
| PRID | P T Prabhakar | RI Dist 3232 |
| PRID | Dr Manoj D Desai | RI Dist 3060 |
| RID | C Basker | RI Dist 3000 |
| TRF Trustee | Gulam A Vahanvaty | RI Dist 3141 |
| RIDE | Dr Bharat Pandya | RI Dist 3141 |
| RIDE | Kamal Sanghvi | RI Dist 3250 |

### Executive Committee Members (2018–19)

| | |
|---|---|
| DG Rajiv Sharma<br>Chair – Governors Council | RI Dist 3030 |
| DG Pinky Patel<br>Secretary – Governors Council | RI Dist 3060 |
| DG Subhash Jain<br>Secretary – Executive Committee | RI Dist 3012 |
| DG A Venkatachalapathy<br>Treasurer – Executive Committee | RI Dist 3201 |
| DG Shashi Sharma<br>Member – Advisory Committee | RI Dist 3141 |



## ROTARY NEWS / ROTARY SAMACHAR

**Editor**
Rasheeda Bhagat

**Senior Assistant Editor**
Jaishree Padmanabhan

## Send all correspondence and subscriptions to

ROTARY NEWS TRUST
3rd Floor, Dugar Towers, 34 Marshalls Road, Egmore
Chennai 600 008, India. Phone : 044 42145666
e-mail: rotarynews@rosaonline.org
Website : www.rotarynewsonline.org

Printed by P T Prabhakar at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah, Chennai - 600 014, India, and published by P T Prabhakar on behalf of Rotary News Trust from Dugar Towers, 3rd Flr, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.



The views expressed by contributors are not necessarily those of the Editor or Trustees of Rotary News Trust (RNT) or Rotary International (RI). No liability can be accepted for any loss arising from editorial or advertisement content. Contributions – original content – is welcome but the Editor reserves the right to edit for clarity or length. Content can be reproduced, but with permission from RNT.



# குதூகல உணர்வில் திளைத்த சென்னை மண்டல இன்ஸ்டிட்யூட்

ரோட்டரி மண்டல நிறுவனங்களில் ஏதாவது மகிழ்ச்சியுடன் குதூகலமாக இருந்தது என்றால், அது Passion to Serve என்ற கருப்பொருளுடன் நடைபெற்ற Chennai Zone Institute அதிகமான குதூகலம் மகிழ்ச்சி நிரம்பியிருந்தது என்று சொல்லலாம். அது பாரி ரஸ்ஸின் தலைமையிலான ரோட்டரி இன்டர்நேஷனல் குழுவோ ரோட்டரி மண்டலத் தலைமைகளோ பங்கேற்ற அனைவருக்கும் மகிழ்ச்சி தொற்றிக் கொண்டது. அது மட்டுமல்ல, PRIP ராஜேந்திரா K சாபூ, KR ரவீந்திரன், RID C பாஸ்கர், ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் குலாம் வாஹன்வதி, RIDE பரத் பாண்டியா மற்றும் கமல் சங்வி ஆகியோருக்கும் மகிழ்ச்சி ஆனந்த வெள்ளத்தில் மிதந்தனர். வருங்கால ஆளுநர்கள், பயிற்றுநர்கள், இதர ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் அலுவலர்கள் ஆகியோருக்கும் இதே உணர்வு தான்.

அங்கே ஒவ்வொருவரிடமும் மகிழ்ச்சியே பொங்கியது என்றால், அதற்கு மிக முக்கியமான காரணம் கடந்த ஜூலை 1ம் தேதி பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த D ரவிசங்கரும் அவரது மனைவி பவோலாவும் அளித்த ரூ.100 கோடி நன்கொடையாகும். அந்தத் தம்பதிக்கு சென்னை இன்ஸ்டிட்யூட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மிகப் பெரிய பாராட்டும், கௌரவமும் அளிக்கப்பட்டன. ரவிசங்கருடன் D 3190 ஆளுநர் சுரேஷ் ஹரி நடத்திய கேள்வி - பதில் நிகழ்ச்சியில் ரவிசங்கரின் எளிமை, நேர்மையான போக்கு அனைவரது உள்ளத்தையும் கொள்ளை கொண்டு விட்டது. ரவிசங்கர் இந்த தொகையை TRFக்கு நன்கொடையாக அளிக்கத் தூண்டியவர் சுரேஷ் ஹரி ஆவார்.

ரவிசங்கரின் நன்கொடைதான் எங்கும் பேச்சாக இருந்தது. இது குறித்து PRIP MAT கேபரஸ் அவர்களும் குறிப்பிட்டுள்ளார். (கடிதப் பகுதியைப் பார்க்க) RI தலைவர் ரஸ்ஸின், RID C பாஸ்கர், அறங்காவலர் வாஹன்வதி இது மற்ற ரோட்டரியினருக்கும் தூண்டுகோலாக இருக்கும் என்றனர். இந்தியாவின் தலை நிமிர்ந்து இருக்கட்டும். இதன் தொடர்ச்சியாக உலக அளவில் சுகாதாரம், சத்துணவு, குடிநீர், சுகாதார வசதி, எழுத்தறிவு, வாழ்க்கை ஆகியவற்றுக்கு உதவும் வகையில் ஆயிரக் கணக்கானோரின் வாழ்க்கைத் தரம் உயரட்டும்.

பயிற்சி, காரசார விவாதம், PRIP ரவீந்திரன் நடத்திய Frankly Speaking என்ற அமர்வு போன்றவை. (பக்கம் 16) மற்றும் சென்னை இரவு (Chennai Nite) என்ற இசை, கலை நிகழ்ச்சி என அனைத்து நிகழ்வுகளிலும் ISAK நாஸர் தலைமையிலான Chennai Institute கலைக்கட்டியது.

நிகழ்ச்சியில் அழகுக்கு அழகு சேர்த்தது RIPE சுசீல் குப்தாவுக்கும் அவரது மனைவி வினிதாவுக்கும் அளிக்கப்பட்ட சிறப்பான வரவேற்பு ஆகும். அவர்கள் இருவரும் இவான்ஸ்டனில் உள்ள ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைமையகத்தில் பயிற்சி பெற்று இந்தியா திரும்பியதும் நேரடியாக சென்னை இன்ஸ்டிட்யூட்டின் நிகழ்ச்சிக்கு வந்திருந்தனர். குப்தா தனக்கு அளிக்கப்பட்ட பணி குறித்து பேசியபோது, குருவி தலையில் பனங்காய் வைத்திருப்பது போல் பணிகள் இருக்கின்றன என்று குறிப்பிட்டார் (பக்கம் 47), அவருக்கு திருப்பதி ஸ்ரீ வெங்கடேச பெருமாளின் அனுக்கிரகத்துடன் அர்ச்சனை பிரசாதமும் கிடைத்தது.

சமுதாயத்திற்குச் சேவை புரிவதற்கு ரோட்டரி ஒரு சிறந்த அமைப்பு ஆகும். சென்னை கூட்டத்தில் மாவட்ட ஆளுநர்கள், DGN கள், இதர தலைவர்கள் பலர் கலந்து கொண்டனர். இந்த வாய்ப்பைச் சரியாகப் பயன்படுத்திக் கொண்ட RID C பாஸ்கர், கேரளம் மற்றும் கர்நாடக மாநிலங்களில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு, வீடிழந்தவர்களுக்கு புதிதாகக் கட்டித் தருவதற்கு உதவி செய்யுங்கள் என்று கேட்டுக் கொண்டார். PRIP கல்யாண் பானர்ஜி தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது. குஜராத்தில் நடந்த நிலநடுக்கத்தால் சேதமடைந்த வீடுகளுக்கு மாற்றாக நல்ல வீடுகளைக் கட்டித் தந்த அனுபவத்தின் அடிப்படையில் குறைந்த செலவில் தரமான வீடுகளைக் கட்டித் தரும் பணியை அந்தக் குழு மேற்கொள்கிறது.

இவையெல்லாம் சமுதாயத்தில் நல்ல மதிப்பை ஏற்படுத்துவதற்கு ரோட்டரிக்கு இது பெரிய வாய்ப்பாகும். எனினும், எல்லாமே உங்களது தாராள மனத்தில்தான் இருக்கிறது.

ரஷீதா பகத்



# வாருங்கள் ஹேம்பர்க் செல்வோம்

BE THE INSPIRATION

அன்பு சக ரோட்டேரியன்களே,

முப்பது ஆண்டுகளுக்கு முன் ஜூன் மாதத்தில் அமெரிக்காவின் லாஸ் வெகாஸுக்குத் தொழில் காரணமாகப் புறப்பட்டேன். அப்போது ரோட்டரி அமைப்பில் இணைந்து ஆறு ஆண்டுகள் ஆகியிருந்தது. ரோட்டரி சங்க செயலாளராகவும் இருந்ததால், ரோட்டரி சங்கம் குறித்து அனைத்தும் அறிந்திருந்தேன். அதே சமயம் நான் பஹாமாஸ் தீவையும் அதன் தலைநகர் நாஸவையும் தாண்டி எந்தத் தொடர்பும் எனக்கு அப்போது இல்லை.

பஹாமாஸ் தீவைத் தாண்டி நான் எதிலும் கவனம் செலுத்தியதில்லை. ஆனால், அதே ஆண்டு லாஸ்வெகாஸ் ரோட்டரி மாநாட்டில் பங்கேற்பது என முடிவு செய்தேன். பயணத்துக்குப் பதிவு செய்து, உரிய கட்டணத்தையும் செலுத்தினேன். அந்தப் பயணம் என் வாழ்க்கையில் பெரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்று அப்போது தோன்றவேயில்லை.

அந்த மாநாட்டில் பல வியப்பான அனுபவங்கள் ஏற்பட்டன. உலகம் முழுவதும் 10 லட்சம் உறுப்பினர்களுடன் பரந்து விரிந்த ஒரு பிரம்மாண்டமான அமைப்பில் அங்கமாக இருப்பதை உணர ஆரம்பித்தேன். ஒவ்வொரு பொது குழுக் கூட்டத்திலும் பங்கேற்றேன். ரோட்டரி மூலமாக எவ்வளவோ திட்டங்களில் ஈடுபடலாம் என்பதை அறிந்துகொண்டேன். லாஸ் வெகாஸ் மாநாடு என் கண்களை மட்டுமல்ல, இதயத்தையே திறந்துவிட்டது. எனக்குப் புது உத்வேகம் அளித்தது. ரோட்டரி குறித்த எனது பார்வையையே மாற்றிவிட்டது. ரோட்டரி எனக்கு என்ன செய்யவேண்டும் என்ற எண்ணம் மாறி, ரோட்டரி மூலம் நாம் என்ன செய்யலாம் என்று யோசிக்க வைத்தது. அது முதல் அந்த நோக்கமே மனத்தில் நிறைந்திருக்கிறது.

இதோ, ஜெர்மனியின் ஹம்பர்க் நகரில் 2019ம் ஆண்டு ஜூன் மாதம் நடைபெறும் மாநாட்டில் உலகம் முழுவதுமிருந்து ரோட்டரி உறுப்பினர்கள் கூடப் போகிறோம். அங்கு நடைபெறும் 110வது ஆண்டு சர்வதேச மாநாட்டின் நிகழ்ச்சியில் பங்கேற்று திளைக்கப் போகிறோம். பல பேர் என்னைப் போல் பல ரோட்டரி மாநாடுகளில் பங்கேற்றிருப்பார்கள். பலர் முதல் முறையாக ஒரு மாநாட்டில் பங்கேற்க வருவார்கள். இந்தப் புதிய ரோட்டரி ஆண்டில் புதிய புதிய நண்பர்களை அவர்கள் பெறுவார்கள். புதிய தொடர்புகள் ஏற்படக் கூடும். ஹம்பர்க் மாநாட்டில் ஒவ்வொருவருக்கும் தனித்தனி அனுபவம் காத்திருக்கும்.

ஹம்பர்க் துறைமுகநகரம் ஜெர்மனியையும் இதர பகுதிகளையும் இணைக்கும் இடமாகும். பல நூற்றாண்டுகளாக பொருளாதார, கலாசார தளமாக அமைந்துள்ளது. எல்பீ நதிக் கரையில் உல்லாசமாக இருக்கவும் நதியில் படகு சவாரி செய்யவும் உற்சாகமான சுற்றுலாத் தலமாகும். கரையில் அமர்ந்து எல்பீ நதியின் எழிலை ரசித்தபடியே விருந்துண்ணலாம். இசை கேட்டு இன்புறலாம். அருங்காட்சியகம் சென்று அனுபவிக்கலாம். ஐரோப்பாவில் விடுமுறை நாளை இன்பமாகக் கழிக்க உகந்த இடம் அது.

நீங்கள் வாடிக்கையாக மாநாடுகளில் பங்கேற்பவர் என்றால், ஹம்பர்க் மாநாட்டில் புதிய நட்பையும் தொடர்பையும் உத்வேகத்தையும் இழக்க விரும்ப மாட்டீர்கள்.

ஒரு வேளை எந்த மாநாட்டிலும் நீங்கள் பங்கேற்றதேயில்லையா? ஹம்பர்க் மாநாட்டில் பங்கேற்கும்படி நான் விடுக்கும் தனிப்பட்ட அழைப்பை ஏற்றுக் கொள்ளுங்கள். டிசம்பர் 15ம் தேதிக்குள் பதிவுசெய்துகொள்ளுங்கள். உங்களது ரோட்டரி பயணம் உத்வேகம் அளிக்கட்டும்!



பேரி ரஸின்
தலைவர், ரோட்டரி இண்டர்நேஷனல்



# ரவி சங்கரின் பெருந்தன்மையை பாராட்டுவோம்

கொடுப்பது எப்போதும் நல்ல காரியம் என்றே உணர்கிறோம். அதனால், காரணம் ஏதுமில்லாமல் செய்யும் நல்ல காரியங்களும் உலகத்தை மாற்றிவிடுகின்றன.

பெங்களூரைச் சேர்ந்த ரோட்டரி உறுப்பினர் D ரவிசங்கர் TRFக்கு ரூ.100 கோடி நன்கொடையை வாரி வழங்கியதைப் பாராட்டி மகிழ்கிறேன். ரவிசங்கரிடம் கேட்டதற்கு, கொடுக்க வேண்டும் என்று நினைத்தேன் அவ்வளவுதான் என்றார்.

ரவிசங்கர், நீங்கள் அனைத்து ரோட்டரி உறுப்பினர்களுக்கும் ஓர் உத்வேக சக்தி! CNN தொலைக்காட்சி நிறுவனத்தின் முன்னாள் உரிமையாளர் Ted Turner ஐ.நா. ஃபவுண்டேஷனுக்கு 100 கோடி டாலர் நன்கொடையாக அளித்தார். தொலைக்காட்சிக்கு பேட்டி அளித்த போது, நான் நிறைய கொடுக்கும் போது, நிறைய கிடைக்கிறது என்பதை உணர்ந்தேன். கொடுப்பதற்குப் பழக வேண்டும். நாமெல்லாம் சுயநலத்துடன் பிறந்து விட்டோம். கொடுத்த பிறகு இப்போது எனக்குக் கிடைத்துள்ள மகிழ்ச்சி முன் எப்போதும் கிடைத்தில்லை என்றார்.

இந்த இடத்தில் ஒரு சுவையான கதையைக் கூற விரும்புகிறேன்: கோடீஸ்வரர் ஒருவர் சுவாமிஜியின் ஆன்மிக உரையை கேட்க நேர்ந்தது. அங்கே, சுவாமிஜி, எல்லோரும் பணத்தையே நாடுகிறார்கள். ஆனால், இறந்து போகும் போது சல்லிக் காசைக் கூட எடுத்துச் செல்ல முடியாது என்பதை அறிவதில்லை என்று கூறினார்.

இதைக் கேட்ட அந்த கோடீஸ்வரர், “இந்த சாமியாரிடம் காசு இல்லை. அதனால் இப்படிப் பேசுகிறார்” என்று தனக்குள் நினைத்துக் கொண்டார். மறுநாள் தனது ஊழியர்களிடம் “இறந்த பிறகு பணத்தை எப்படி எடுத்துச் செல்வது?” என்று கேட்டார். யாராலும் சரியாகப் பதில் கூற முடியவில்லை.

இதை அறிந்த யாரோ ஒரு நபர் சில வாரங்கள் கழித்து அந்தக் கோடீஸ்வரரைச் சந்தித்தார். “நாம் இறந்த பிறகு பணத்தை எடுத்துச் செல்வதற்கான வழி எனக்குத் தெரியும்” என்று கூறிவிட்டு, நீங்கள் எத்தனை நாடுகளுக்குப் பயணம் செய்திருக்கிறீர்கள்? என்று கேட்டார். அதற்கு கோடீஸ்வரர், உலகிலுள்ள எல்லா நாடுகளுக்கும் சென்றிருக்கிறேன் என்று பதிலளித்தார்.

அப்போது அந்த நபர், அப்படி சென்ற நாடுகளில் பயன்படுத்துவதற்காக இந்திய ரூபாய் நோட்டுகளை எடுத்துச் சென்றீர்களா? என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த கோடீஸ்வரர், கையிலுள்ள ரூபாயை மாற்றிக் கொண்டு எந்த நாட்டுக்குச் செல்கிறேனோ அந்த நாட்டின் கரன்சியாக மாற்றிக் கொண்டு பயன்படுத்துவேன் என்றார்.

நீங்கள் சொல்வது மிகவும் சரியானது. நீங்கள் இறந்த பின் சொர்க்கத்துக்குச் செல்ல விரும்புகிறீர்களா? என்று கேள்வி கேட்டார். அதற்கு கோடீஸ்வரர் ஆமாம் என்று பதிலளித்தார்.

வந்தவர் கூறினார்: ஒரு நாட்டுக்குச் செல்லும்போது, நமது பணத்தை மாற்றிக் கொள்வதைப் போல இறந்த பின் சொர்க்கம் சென்றால், அங்கே நம்மிடம் உள்ள பணத்தை மாற்றிக் கொள்ளலாம். அதற்குப் பெயர் புண்ணியம் என்றார். ஒருவர் பெரிய தொகையை நன்கொடையாக அளித்தால், அது மற்றவர்களுக்கு உந்துதலாக அமையும். அந்த நபரைக் காணும் போது அடுத்தவருக்கும் அதைப் போன்ற குணம் உருவாகும் என்று ஆய்வுகள் கூறுகின்றன. அதன் விளைவாக இந்த இணைப்பில் உள்ள ஒவ்வொரு மனிதரும் ஏராளமானோருக்குத் தூண்டுகோலாக அமையும். இவர்களில் யாருக்கும் யாரையும் தெரியாது. ஆனால், நல்லெண்ணம் மட்டுமே பரவும்.

அப்படி பெயர் தெரியாமல் TRFக்கு அள்ளிக் கொடுத்த ரோட்டரியினருக்கு என் தலைதாழ்ந்த வணக்கம். ரவிசங்கரைப் போன்றவர்கள் நாம் ஒவ்வொருவரும் முக்கியப் பங்களிப்பு செலுத்தவேண்டும் என்பதை நினைவூட்டுகிறார்கள். நமது காலத்தில் சவால்களை நம் சக்திக்கு ஏற்ப எதிர்கொள்வோம். சிறந்த உலகத்தைக் கட்டியமைக்க உதவுவோம். கொடுப்பதற்குத் தூண்டுகோலாக இருப்போம்.



C பாஸ்கர்
டைரக்டர், ரோட்டரி இன்டர்நேஷனல்.

# District Wise TRF Contributions as on September 2018

(in US Dollars)

| District Number | APF | PolioPlus | Other Restricted | Endowment Fund | Total Contributions | EREY Donors (in numbers) | EREY % |
|---|---|---|---|---|---|---|---|
| **India** | | | | | | | |
| 2981 | 13,688 | 2,444 | 0 | 8,000 | 24,132 | 34 | 2 |
| 2982 | 17,014 | 59 | 0 | 243 | 17,316 | 91 | 2 |
| 3000 | 9,377 | 1,000 | 5,265 | 4,265 | 19,907 | 188 | 7 |
| 3011 | 34,253 | 0 | 25,462 | 15,072 | 74,787 | 50 | 1 |
| 3012 | 106,911 | 0 | 160,200 | 8,800 | 275,911 | 58 | 2 |
| 3020 | 6,441 | 12,794 | 0 | 5,000 | 24,234 | 78 | 2 |
| 3030 | 3,094 | 0 | 0 | 0 | 3,094 | 28 | 1 |
| 3040 | 2,009 | 0 | 9,930 | 0 | 11,939 | 2 | 0 |
| 3053 | 35,457 | 0 | 0 | 0 | 35,457 | 4 | 0 |
| 3054 | (22,896) | 0 | 30,714 | 0 | 7,818 | 2 | 0 |
| 3060 | (11,864) | 43 | 81,977 | 0 | 70,156 | 18 | 0 |
| 3070 | 47,034 | 300 | 0 | 0 | 47,334 | 225 | 5 |
| 3080 | 15,979 | 3,944 | 4,735 | 0 | 24,658 | 123 | 4 |
| 3090 | 15,201 | 0 | 0 | 0 | 15,201 | 28 | 1 |
| 3100 | 12,601 | 0 | 0 | 0 | 12,601 | 43 | 2 |
| 3110 | 19,474 | 993 | 1,835 | 0 | 22,302 | 37 | 1 |
| 3120 | 19,183 | 0 | 148,057 | 0 | 167,240 | 31 | 1 |
| 3131 | 125,195 | 973 | 107,653 | 33,203 | 267,023 | 366 | 7 |
| 3132 | 5,752 | 0 | 0 | 20,000 | 25,752 | 48 | 1 |
| 3141 | 410,762 | 7,782 | 197,899 | 1,000 | 617,442 | 448 | 9 |
| 3142 | 172,409 | 0 | 0 | 0 | 172,409 | 361 | 11 |
| 3150 | 21,547 | 0 | 58,340 | 239,038 | 318,925 | 258 | 7 |
| 3160 | 3,842 | 580 | 0 | 0 | 4,422 | 13 | 1 |
| 3170 | 26,466 | 1,246 | 4,679 | 0 | 32,390 | 136 | 3 |
| 3181 | 16,109 | 441 | 0 | 0 | 16,550 | 98 | 3 |
| 3182 | 23,265 | 0 | 6,516 | 0 | 29,781 | 113 | 4 |
| 3190 | 39,588 | 3,512 | 6,348 | 1,449,304 | 1,498,751 | 198 | 4 |
| 3201 | 25,431 | 1,029 | 104,627 | 0 | 131,087 | 69 | 1 |
| 3202 | 7,129 | 317 | 0 | 0 | 7,446 | 7 | 0 |
| 3211 | 13,003 | 0 | 0 | 1,515 | 14,518 | 153 | 3 |
| 3212 | 42,156 | (251) | 0 | 2,000 | 43,905 | 41 | 1 |
| 3231 | 1,494 | 0 | 0 | 0 | 1,494 | 20 | 1 |
| 3232 | 68,130 | 100 | 26,713 | 1,000 | 95,944 | 72 | 2 |
| 3240 | 25,299 | 110 | 0 | 0 | 25,410 | 51 | 2 |
| 3250 | 2,454 | 0 | 4,444 | 0 | 6,898 | 6 | 0 |
| 3261 | 8,983 | 1,000 | 100 | 2,000 | 12,083 | 7 | 0 |
| 3262 | 6,928 | 1,000 | 900 | 3,000 | 11,828 | 22 | 1 |
| 3291 | 41,714 | 0 | 35,988 | 800 | 78,503 | 95 | 3 |
| **India Total** | **1,410,614** | **39,415** | **1,022,382** | **1,794,240** | **4,266,652** | **3,622** | **3** |
| 3220 **Sri Lanka** | 29,557 | 0 | 1,050 | 5,000 | 35,607 | 198 | 11 |
| 3271 **Pakistan** | 21,258 | 13,209 | 0 | 0 | 34,466 | 5 | 0 |
| 3272 **Pakistan** | 986 | 611 | 0 | 0 | 1,598 | 4 | 0 |
| 3281 **Bangladesh** | 41,919 | 2,300 | 7,715 | 0 | 51,934 | 46 | 1 |
| 3282 **Bangladesh** | 3,950 | 550 | 0 | 0 | 4,500 | 10 | 0 |
| 3292 **Nepal** | 34,574 | 5,012 | 70,367 | 0 | 109,952 | 111 | 3 |
| **South Asia Total** | **1,542,858** | **61,097** | **1,101,514** | **1,799,240** | **4,504,710** | **3,996** | **3** |
| **World Total** | **21,293,219** | **5,059,612** | **3,923,879** | **5,272,071** | **35,548,780** | | |

Source: RI South Asia Office




# A PART OF HISTORY

The german kitchen.
Since 1898.

Head Office and Showroom:
A- 248, Mahipalpur Extension, NH-8,
Delhi-Gurgaon Road, New Delhi-110037
[T] +91-11-46102000 [E] info@hacker-kitchens.com

**Häcker**
kitchen.germanMade.

www.haecker-india.com
www.haecker-kuechen.com

| AHMEDABAD | BANGALURU | CHENNAI | COIMBATORE | DELHI |
|---|---|---|---|---|
| 9879538977 | 9740999350 | 9442081111 | 9500210555 | 9313134488 |

| HYDERABAD | INDORE | JAIPUR | KOCHI | LUDHIANA | MUMBAI | MANGALURU | THRISSUR |
|---|---|---|---|---|---|---|---|
| 9700058285 | 9425803599 | 9414058718 | 9895058285 | 9815048222 | 9322987229 | 7899119955 | 7025991000 |

# மாற்றத்துக்குத் தயாராகுங்கள்: பாரி ரஸ்ஸின்

ரஷீதா பகத்

ரோட்டரி அமைப்பின் இன்றைய சூழ்நிலையில் நாம் புதிய திசையை நோக்கிப் பயணம் செய்ய வேண்டும். ரோட்டரி தொடங்கி 113 ஆண்டுகள் ஆகின்றன. அதே போல் இன்னும் 113 ஆண்டுகளுக்கு என்னவெல்லாம் செய்யப் போகிறோம் என்பதைத் திட்டமிடவேண்டும். எதிர்காலத்தில் இன்னும் வலிமையான இயக்கமாக இருக்க வேண்டும்; இல்லையேல் வெற்றி இல்லை என்று RI தலைவர் பாரி ரஸ்ஸின் கூறினார்.

சென்னையில் ரோட்டரியின் 4, 5 மற்றும் 6A மண்டலங்களின் ரோட்டரி மண்டல மாநாட்டை ரஸ்ஸின் தொடங்கிவைத்தார்.

பாரி ரஸ்ஸின் ஆற்றிய தொடக்க உரை: ரோட்டரி உறுப்பினர்களின் எண்ணிக்கை பல ஆண்டுகளாக 12 லட்சம் என்ற அளவிலேயே நீடித்து வருகிறது. கடந்த இரு ஆண்டுகளில் 3 லட்சம் பேர் ரோட்டரியில் இணைந்தனர். ஆனால், 3 லட்சம் பேர் ரோட்டரியிலிருந்து விலகிவிட்டனர். இது அதிர்ச்சி தருகிறது. அவர்கள் ஏன் விலகிப் போகிறார்கள் என்று சிந்திக்க வேண்டும். நமது ரோட்டரி சங்கங்களில் என்ன தவறு நடந்தது? ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினருக்கும் உரிய மதிப்பு தரப்படுகிறதா? நாம் செய்யும் சமூகப் பணி மிகச் சிறப்பாக இருக்கிறதா? சமுதாயத்திற்கு நாம் உண்மையான பிரதிநிதியாக இருக்கிறோமா?

ரோட்டரி நியூஸ் பத்திரிகையின் ஜூலை மாத இதழின் அட்டைப் படத்தை நினைவுபடுத்துகிறேன். அதில் இருவரது (ரஸ்ஸின், எஸ்தர்)



படங்கள் இருக்கும். அத்துடன் ஏழு செங்கால் நாரைகள் (Flamingos) இடம்பெற்றிருக்கும். அந்தப் பறவைகளில் ஆறு பறவைகள் ஒரே திசையைப் பார்த்துக் கொண்டிருக்கும். ஒரு பறவை மட்டும் வேறு திசையில் பார்க்கும். அதுதான் நாரையின் வித்தியாசம் (Flamingo of change) என குறிப்பிடுவார்கள். நீங்கள் அப்படி வித்தியாசமாகப் பார்க்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அப்படி வித்தியாசமாக இருக்க 'நாம் யார், எங்கே செல்கிறோம், என்ன செய்ய வேண்டும்' என்று வித்தியாசமாக சிந்திக்க வேண்டும். வித்தியாசமான பாதையில் எப்படிச் செல்வது என்று நமது ரோட்டரி சங்கத்தினருக்கு எடுத்துரைப்பது ரோட்டரி சங்கத்தினருக்கும் ரோட்டராக்ட் இளைஞர்களுக்கும் முக்கியமானது. அதுதான் மாற்றம்.

ரோட்டரி சங்கத்தினர் 'நாம் வெளிப் படையாகவும் பொறுப்புணர் வோடும் இருக்கிறோமா?' 'முறைகேடுகளிலிருந்தும் வேறு வகை தவறுகளிலிருந்தும் விலகி யிருக்கிறோமா?' என்று நமக்கு நாமே கேட்டுக் கொள்ள வேண்டும். நமக்கு இருக்கும் வியக்கத் தக்க நன்மதிப்பை யாரோ சிலர் கெடுத்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

வெற்றி தோல்வியை ஏற்றுக் கொள்ள வேண்டும். முதல் முறையாக RI அமைப்பின் தலைமைப் பதவிக்குப் போட்டியிட்ட போது, நான் தோற்றுப் போனேன். முதலில் ஏமாற்றம் இருந்தாலும், தோல்வியை ஏற்றுக் கொண்டு, வெற்றி பெற்றவரை மனமார வாழ்த்தினேன். தோல்வியடையும் போது அதிக பெருந்தன்மையுடன் வெற்றி பெற்றவரைப் பாராட்ட வேண்டும்.

இந்த மண்டலங்களில் உள்ள ரோட்டரியினர் இயக்குநர் C பாஸ்கர் உள்ளிட்ட மூத்த தலைவர்களைப் பெற்றதற்கு கொடுத்துவைத்தவர்கள். உங்களது மண்டலங்களில் செய்யும் சேவைகள், எழுத்தறிவுத் திட்டம், சுகாதாரத் திட்டங்கள் ஆகியவற்றைச் செயல்படுத்துவது, குடிநீர் வசதி, சுகாதார வசதி திட்டங்கள் ஆகியவை சிறந்த பணிகள் ஆகும். சண்டிகரில் பள்ளியில் கை கழுவு திட்டம் (WinS project) செயல்படுவதைக் கண்டேன்.

அங்கே சிறுவர்களை அது குறித்துக் கேட்டேன். அதற்கு அவர்கள், 'நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து பாட்டுப்பாடி குஷியாகக் கையைக் கழுவுவது மிகவும் பிடித்திருக்கிறது. வீட்டுக்குப் போய் குடும்பத்தினருக்கும் கையைக் கழுவுவதன் அவசியத்தை விளக்குவோம்' என்று பதிலளித்தனர். இப்படி நல்ல விளைவை ஏற்படுத்தக்

*RI தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் எஸ்தர் கௌரவிக்கப்படுகின்றனர். அஃபசலுநிஸா நாசர், மாலா, லலிதா சுப்ரமணியன், DG பாபு பேரம், RID C பாஸ்கர், PDG ISAK நாசர் மற்றும் PDG N சுப்ரமணியன் அவர்கள் உடன் உள்ளனர்.*



கூடிய திட்டங்கள் உங்கள் பகுதியில் மாற்றத்தை ஏற்படுத்தும். நீங்கள் என்ன பணியாற்றுகிறீர்களோ அதற்காகப் பெருமைப்பட வேண்டும்.

போலியோ ஒழிப்பில் மகத்தான சாதனை நடத்தப்பட்டுள்ளது. பல சந்தேகங்கள் எழுப்பப்பட்டாலும் இந்திய ரோட்டரி அமைப்பினர் இந்தியாவை போலியோ இல்லாத நாடாக மாறப் பாடுபட்டனர். இந்தப் பணியில் இந்தியா கடைசி நாடாக இருக்கும் என்று பலர் கூறினர். ஆனால், அதை முறியடித்துவிட்டீர்கள். மற்றவர்களை விட வேகமாக இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கு எல்லா வழிகளையும் கையாண்டீர்கள். உங்களது தலைமையே இதற்குக் காரணம். அதற்காக உங்களைப் பாராட்டுகிறேன்.

உறுப்பினர்களைச் சேர்ப்பதில் ரோட்டரி உலகத்தில் நீங்கள் தான் முதலிடம். ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை அளிப்பதில் இரண்டாவது இடம். சென்ற ஆண்டு இங்கே வந்தபோது, என்னுடன் தொடர்பு கொண்ட அனைவரிடமும் ஃபவுண்டேஷனுக்கு நன்கொடை அளிப்பதில் முதலிடம் வகிப்பீர்களா என்று சவால் விடும்படி கேட்டேன். ஆனால், வருட ஆரம்பத்திலேயே மிகப்பெரிய நன்கொடையாளர்கள் மூலம் காட்டிவிட்டீர்கள். அத்தகைய கொடையாளர்கள் (பெங்களூர் ஆர்ச்சர்டஸ் ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ரவிசங்கர், அவரது மனைவி பயோலா) இன்று சிறப்பிக்கப்படு கிறார்கள். அடக்கமான அற்புதமான மனிதர்கள் அவர்கள்.

அதே சமயம் ரோட்டராக்ட் இளைஞர்களின் வளர்ச்சி என்னை வெகுவாகக் கவர்ந்துவிட்டது. ரோட்டராக்ட் இளைஞர்கள் தகவல் பகிர்ந்து கொள்வது முன்பு 9 சத வீதமாக இருந்தது. அது 72 சத வீதமாக குறுகிய காலத்தில் வளர்ச்சி பெற்றிருப்பது மகத்தான முன்னேற்றம். இப்போது வெளியான ரோட்டராக்ட் நியூஸ் (Rotaract News) இதழை பார்த்தீர்களா? அதில் 9ம் பக்கத்தில் உள்ள குறிப்பு நம்மிடம் எத்தனை இன்டராக்டர்கள், ரோட்டராக்டர்கள் இருக்கின்றனர் என்பதைக் காட்டும். உலக அளவில் 2,57,000 ரோட்டராக்டர்கள் இருக்கின்றனர். அவர்களில் 1,45,000 பேர்தான் தகவல்களைப் பகிர்ந்து தொடர்பில் இருக்கிறார்கள். மீதிப் பேர் எங்கே இருக்கிறார்கள் என்றே தெரியவில்லை. இது அனைவரது தவறு. ரோட்டரி அமைப்பு அவர்கள் குறித்து ரோட்டரி இன்டர்நேஷனல் உலக அளவில் ஆய்வு செய்து வருகிறது.

இது விஷயத்தில் மாவட்ட ரோட்டரி அமைப்புகள் தகவல் சேகரிக்க வேண்டும். அப்போதுதான் ரோட்டராக்டர்களை ரோட்டரியினருக்கு இணையான நிலைக்குக் கொண்டு வர இயலும். அவர்கள்தான் ரோட்டரியின் எதிர்காலம். அவர்கள் நம்முடன் இணைந்துவிட்டால், ரோட்டரி அமைப்பில் உள்ளவர்களின் சராசரி வயதைக் குறைக்கலாம். ரோட்டரி அமைப்பு தங்களது வாழ்க்கைக்குத் தேவை என்பதை இளைஞர்கள் உணரும்படி செய்தாக வேண்டும். இப்போது அப்படியில்லை. நமது விதிகளின்படி நாம் சமுதாயத்தின் அனைத்துப் பிரிவினருக்கும்



RC *பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் தலைவர்* D *ரவிசங்கர் மற்றும் அவர் மனைவி பவோலா.*

பிரதிநிதிகளாகச் செயல்படுகிறோமா என்று நமக்குள்ளேயே கேட்டுக் கொள்ள வேண்டும். நாம் ஒட்டுமொத்த சமுதாயத்தின் நுண்ணுயிரை (Microcosm) போல் இருக்க வேண்டும். எனவே, அத்தகைய இளைஞர்களை அடையாளம் காணுங்கள். நாம் கடுமையாக உழைத்தால், வளர்ச்சி பெறுவதற்கான வாய்ப்புகள் ஏராளம். இலக்கை நோக்கி கவனம் செலுத்துங்கள்.

ஆப்பிரிக்காவில் ஒரு பழமொழி உண்டு: 'ஒரு பாறையை எடுத்தால், கடந்த காலத்தைத் தொடுகிறீர்கள் என்று அர்த்தம். ஒரு பூவை எடுத்தால், நிகழ்காலத்தைத் தொடுகிறீர்கள். ஒரு உயிரை (வாழ்க்கையைத்) தொட்டால், எதிர்காலத்தையே மாற்றுகிறீர்கள் என்பது பொருள்' (When you pick up a rock you touch the past, when you pick a ower you touch the present when you touch a life, you change the future) என்பது அந்தப் பழமொழி. உங்களது ரோட்டரி சங்கங்கள், எத்தனை பேரின் வாழ்க்கையை அன்போடு தொட்டு, மாற்றத்தை ஏற்படுத்தியிருப்பீர்கள்? நமது ரோட்டரி உலகத்துக்கு இங்கு மட்டுமல்ல, உலக நாடுகளிலும் நல்ல நிலை கிடைக்கச் செய்திருக்கிறீர்கள். தனிப்பட்ட முறையிலும் ஒட்டு மொத்தமாகவும் நீங்கள் பலம் பெருந்தியவர்கள். அந்த பலத்தை மாற்றத்துக்குப் பயன்படுத்துங்கள்.



RI *தலைவர் பாரி ரஸ்ஸின்*

### நெஞ்சைத் தொட்ட டேனியல்:

ஹைதி நாட்டுச் சிறுவனுக்கு வெற்றிகரமாக நடத்தப்பட்ட சிகிச்சை யைக் குறிப்பிட விரும்புகிறேன்.

சில ஆண்டுகளுக்கு முன் சிகிச்சைக்கு நிதியுதவி கோரி ஹைதி நாட்டைச் சேர்ந்த டேனியல் என்ற சிறுவனுடன் சில மூத்த ரோட்டரி உறுப்பினர்கள், கிரேக் பால் என்ற ரோட்டரி உறுப்பினர் ஆகியோர் வந்தனர். அவர்களிடம் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் நிதியுதவி அளிக்கும் குழு (Investment committee of RI) ஆய்வு நடத்தியது. அப்போது கிரேக் பால், 'இந்தச் சிறுவனுக்கு இதயம் பாதிக்கப் பட்டுள்ளது. சில மாதங்கள்தான் உயிர் வாழ்வான் என்று டாக்டர்கள் கூறிவிட்டனர். அதற்கு சிகிச்சை செய்ய வேண்டுமானால், அமெரிக்கா செல்ல வேண்டும். அதற்குரிய விசா கிடைக்க உதவி செய்யமுடியுமா?' என்று கேட்டார். அதற்கு, 'ஹைதி நாட்டிலேயே வாழ்க்கையின் வெகுமதி திட்டம் (Gift of Life programme in Haiti) என்ற திட்டம் இருக்கிறதே' என்று சுட்டிக் காட்டினேன். அத்துடன் சிறுவன் டேனியலின் மருத்துவ ஆவணங்களையும் கொண்டுவரச் சொன்னேன்.

ஹைதி நாட்டுக்கு ஒரு இதய சிகிச்சை நிபுணர் மாதம் இரு முறை வருவதுண்டு. அவர் அப்போது ஹைதியில் இருந்தார். அது புதன்கிழமை. உடனே அவரிடம் டேனியலின் மருத்துவ ஆவணங்கள் தரப்பட்டன. அவர் அதை முழுமையாக ஆய்வு செய்துவிட்டு, சிறுவனை வியாழக்கிழமையே மருத்துவமனையில் சேர்த்துவிடுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

சிறுவனை மருத்துவமனையில் வியாழன் அன்று சேர்க்க வேண்டும் என்பதால், உரிய வாகனம் இல்லாத நிலையில், டேனியலை அவரது தாய், தந்தை ஒரு சாதாரண ஸ்கூட்டரில் ஏற்றிக் கொண்டு, 90 நிமிட நேரம் பயணம் செய்து மருத்துவமனையில் சேர்த்தனர். உயிருக்குப் போராடிய சிறுவன் ஸ்கூட்டரில் மருத்துவ மனைக்கு வரவேண்டிய சூழல்!

சிகிச்சை வெற்றிகரமாக முடிந்தது. சிறுவன் உயிர் காப்பாற்றப்பட்டது. ரோட்டரி அமைப்பினர் திருப்தியோடு அடுத்த பணியில் ஈடுபடத் தொடங்கி விட்டனர்.

சில மாதங்கள் கழித்து டேனியலி டமிருந்து எனக்கு மின்னஞ்சல் வந்தது. அதில் நெஞ்சில் அறுவைச் சிகிச்சை செய்த தழும்புடன் தோன்றும் அவனது காட்சி இருந்தது. ஆனால், அவனது முகத்தில் பரம சந்தோஷம்! நீங்கள் எனக்கு உதவி செய்தீர்கள் என்பதை அறிவேன். மிகுந்த நன்றி என்று நெகிழ்ச்சியோடு குறிப்பிட்டிருந்தான் டேனியல்.

இப்படி உயிர்களைக் காப்பாற்று வதற்கு நாம் ஒருவருக்கு ஒருவர் பேசிக் கொள்ள, தொடர்பில் இருந்து, தகவல்களைப் பரிமாறிக் கொள்ள வேண்டும். டேனியல் தெரிவித்த நன்றியை உங்களுக்குத் தெரிவிக்கிறேன். இதைப் போல் பல சிறுவர்களைக் காப்பாற்றியதற்காகவும், காப்பாற்றப் போவதற்காகவும், இப்போதும் காப்பாற்றி வருவதற்காக வும் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறிக்கொள்கிறேன். எழுத்தறிவு, கல்வி, சுகாதாரம், குடிநீர் எனப் பல்வேறு சமூகப் பணிகளின் பல சிறுவர்களைக் காப்பாற்றினீர்கள். இன்னும் காப்பாற்றப் போகிறீர்கள். இப்போதும் காப்பாற்றி கொண்டு இருக்கிறீர்கள். அதற்கெல்லாம் எனது நன்றி.

இவ்வாறு பாரி ரஸ்ஸின் பேசினார்.

புகைப்படங்கள்: K விஸ்வநாதன்

Rotary Institute 2018

# வெளிப்படையான ஒரு கேள்வி-பதில் நேரம்

ரஷீதா பகத்

ரோட்டரியின் சென்னை மாநாட்டில் 'வெளிப்படையாக சொன்னால்' (Frankly Speaking) என்ற கருத்தரங்கம் நடைபெற்றது. மாவட்ட ஆளுநர்கள், முன்னாள் இந்நாள் தலைவர்கள், ஆளுநர்கள் பங்கேற்றனர். பேச்சுக்கு பேச்சு, நகைச்சுவை, சாதுர்யமான விவாதம், நட்பு ரீதியிலான கருத்துப் பரிமாற்றம், சில சமயம் காரசாரம் என்று களைகட்டியது. இந்நிகழ்ச்சியை முன்னாள் தலைவர் KR ரவீந்திரன் ஏற்பாடு செய்தார்.

ரவீந்திரன் இந்தக் கூட்டம் முழுவதும் இதெல்லாம் சாதாரண கேள்வி என்ற பீடிகையுடன் பங்கேற்றவர்கள், RI தலைவர் பாரி ரஸ்ஸின், PRIP ராஜேந்திரா K சாபூ, TRF அறங்காவலர் மைக் வெப் ஆகியோர் உள்பட இப்படித்தான் கேள்வி கேட்டார்.

### ரோட்டரியின் குறைபாடுகள்

இந்த விவாதத்தில் இரு முக்கிய பிரச்சினைகள் எழுப்பப்பட்டன. அமைப்பில் உள்ள குறைபாடுகள் குறித்த பிரச்சினைகள் அவை. அதை எழுப்பியவர் RI தலைவர் பாரி ரஸ்ஸின் தான்! கூட்டங்களை நடத்துவதிலும், வகைப்படுத்துவதன் நடைமுறையிலும் தாராளமான முறையைக் கடைப்பிடிக்கலாம் என்று சிலர் சுட்டிக் காட்டியதற்கு, ரஸ்ஸின், மாற்றங்கள் குறித்து நான் நிறைய பேசி வருகிறேன். ஆனால், ரோட்டரியின் ஐந்து முக்கிய கோட்பாடுகளான சகமனித உணர்வு (Fellowship), தலைமைத்துவம் (Leadership), நேர்மை (Integrity), பன்முகத் தன்மை (Diversity), தொண்டு மனப்பான்மை (Service) ஆகியவற்றைக் கைவிடக் கூடாது என்று கருதுகிறேன். அதுதான் நமது இயக்கம். பன்முகத் தன்மை விஷயத்தில் கொஞ்சம் போதாது. அனைத்து வயதினர், அனைத்து பாலினம், அனைத்து வகுப்பினர் என்று எல்லா வகையிலும் பலதரப்பட்டவர்களைச் சேர்க்கவேண்டும். அதில் எந்தவித பிடிவாதமும் இல்லாமல் காட்டாமல், எல்லா ரோட்டரி சங்கமும் அனைத்து தொழில்களையும் சார்ந்த, அனைத்துப்



*TRF அறங்காவலர் மைக் வெப், RI தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் PRIP ராஜேந்திர சாபூ.*

பிரிவினரையும் கொண்டதாக இருக்க வேண்டும். அப்போதுதான் சமுதாயத்துக்கு உண்மையில் எது தேவை என்று அறிந்து அதற்கேற்ப செயல்பட முடியும் என்று குறிப்பிட்டார்.

இன்னொரு குறைபாடு என்று ரவீந்திரன் பட்டவர்த்தனமாக கேள்வியை எழுப்பினார். மாவட்ட ஆளுநர்களுக்கு விருதுகள் வழங்குவதற்கு இரு அளவுகோல்கள் மட்டுமே கடைப்பிடிக்கப்படுகின் றன. ஒன்று ஆளுநர் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு எவ்வளவு நிதியைத் திரட்டித் தருகிறார் என்பதன் அடிப்படையிலும் எத்தனை உறுப்பினர்களைத் திரட்டி வருகிறார் என்பதன் அடிப்படையிலும்தான் விருதுக்கான தகுதி நிர்ணயிக்கப் படுகிறது. பல ரோட்டரி உறுப்பினர்கள் சமூகப்பணியை ஆற்றிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களெல்லாம் கணக்கில் கொள்ளப் படுவதில்லை என்று கேட்டார்.

அதை ரஸ்ஸின் ஏற்றுக் கொண்டார். ஆளுநரின் செயல்பாடுகளை மதிப்பிடுவதற்கு அவருக்கு மக்களிடம் இருக்கும் புகழ், செல்வாக்கு, ரோட்டரி சங்க அளவில் சரியான தலைமையை உருவாக்குதல் ஆகியவை அளவு கோல்களாகக் கருதப்படும் என்றார்.

அப்போது குறுக்கிட்ட ரவீந்திரன், தலைவர் அவர்களே, இந்த மாநாட்டில் கூட மனிதாபிமான சேவைகளை ஆற்றியதன் அடிப்படையில் யாரும் அங்கீகரிக்கப்படவில்லையே என்றார்.

PRIP சாபூவும் இது தவறான நடைமுறை. அதற்கு மாற்று வழியைக் காண வேண்டும். மாவட்ட அளவிலான பணிகளுக்காக அவர்கள் எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள், மாதாந்திர கடிதங்களை வெளியிடு வதில் எந்த அளவுக்கு நேரம் தவறாமல் இருக்கிறார்கள் போன்றவை அளவுகோல்களாக இருக்க வேண்டும் என்றார்.

இதை ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் மைக் வெப் ஏற்றுக் கொண்டார். சமுதாயப் பணிகளுக்கு எவ்வளவு நேரம் செலவிடுகிறார்கள் என்பதுடன், மாவட்டத்துக்கு ஒதுக்கப்பட்ட நிதியை (District Designated Fund) அதற்கான ஆண்டில் எந்த அளவுக்குப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்பதும் கணக்கிடப்படவேண்டும். அத்துடன், 'எனது ரோட்டரி' (My Rotary) இணையத்தில் எந்த அளவுக்குப் பங்கெடுத்துக் கொள்கிறார் என்பதும் ரோட்டரி சமுதாயப் பணியில் எவ்வளவு நேரம் ஈடுபடுகிறார்கள் என்பதும் மதிப்பிடப்படவேண்டும். அவர்கள் முழு நிதியையும் பயன்படுத்த வேண்டும். காரணம் அந்த நிதி பயன்படுத்துவதற்காகத் தான் தரப்படுகிறதே ஒழிய வங்கியில் சேமித்து வைக்கவோ அடுத்து வருபவருக்கு வைத்துச் செல்வதற்கோ அல்ல என்றார். உறுப்பினர்களைச் சேர்ப்பதை விட இருக்கிற உறுப்பினர்களை எந்த அளவுக்குத் தக்க வைத்துக் கொள்கிறார் என்பதன் அடிப்படையிலும் மாவட்ட ஆளுநர்களின் செயல்பாட்டை மதிப்பிட வேண்டும் என்றும் அவர் கூறினார்.



### தனது அடுத்த கேள்வியின் நோக்கத்தை விவரித்த ரவீந்திரன் கூறினார்:

சர்வதேச அளவில் ரோட்டரியில் உள்ள உறுப்பினர்களில் 35 சதவீதம் பேர் இந்தியா, ஜப்பான், தைவான், கொரியா, பிலிப்பின்ஸ் உள்ளிட்ட ஆசிய நாடுகளைச் சேர்ந்தவர்கள். ரோட்டரி ஃபவுண்டேஷனின் 23 சதவீத தொகை ஆசிய நாடுகளிலிருந்துதான் பெறப்படுகிறது. உலக அளவில் 2050ம் ஆண்டு பொருளாதார வள நாடுகள் குறித்து பிரைஸ் வாட்டர்ஹவுஸ் கோப்பெர்ஸ் (Price Waterhouse Coopers) நிறுவனம் அறிக்கை வெளியிடுகிறது. அதில், உள்நாட்டு மொத்த உற்பத்தியில் தற்போது அமெரிக்கா, ஜப்பான், ஜெர்மனி, பிரான்ஸ், பிரிட்டன் ஆகிய நாடுகள் உள்ளன. 2050ம் ஆண்டு கணிப்பின்படி பொருளாதார நாடுகள் பட்டியலில் சீனா முதலிடம் வரும் என மதிப்பிடப்படுகிறது. அதன் மொத்த உள்நாட்டு உற்பத்தி 50 லட்சம் கோடி டாலர் ஆகும். அதையடுத்து, 34 லட்சம் டாலருடன் அமெரிக்கா இரண்டாம் இடத்திலும் 28.3 லட்சம் கோடி டாலருடன் இந்தியா மூன்றாவது இடத்திலும் வர இருக்கின்றன. அதைத் தொடர்ந்து இந்தோனேசியா (7.3 லட்சம் கோடி டாலர்), ஜப்பான் (6.8 லட்சம் கோடி டாலர்) உள்ளன.

இவற்றில் பல நாடுகள் ஆசியாவைச் சேர்ந்தவை. இந்த நிலையில் ஏன் ரோட்டரியின் தலைமையகமான இவான்ஸ்டின் அலுவலகத்தை ஆசியாவுக்கு மாற்றக் கூடாது? என்று கேள்வி எழுப்பினார். பார்வையாளர்கள் கரவொலியுடன் அதை வரவேற்றனர்.

அதற்கு ரஸ்லின், ரோட்டரி அமைப்பு ஒரு கார்ப்பரேட் அமைப்பாகும். 200 நாடுகளில் பரவியுள்ளது. ஃபவுண்டேஷனின் நிதியையும் உறுப்பினர்களின் எண்ணிக்கையை மட்டும் கணக்கில் எடுத்துக் கொண்டால், நீங்கள் கூறுவது சரியானது என்பதில் சந்தேகமில்லை. ஆனால், ஒரு கார்ப்பரேட் அமைப்பு என்ற நிலையில் இருந்து பார்த்தால் உலகின் பல நாடுகளில் இயங்கும் நிறுவனம் அதற்கு உகந்த சூழல் இருக்கும் இடத்தில்தான் தலைமையகம் இருக்க முடியும். சிறந்த சட்ட சேவைகள் கிடைக்கும் இடம், நிதியைப் பல்வேறு நாடுகளிலிருந்து பெறுவது, பகிர்ந்து அளிப்பது ஆகியவற்றைச் சுலபமாக நடத்தும் இடமாக இருக்க வேண்டும். வரி விதிப்பும் எளிதாக இருக்க வேண்டும். அத்தகைய இடமே பொருத்தமானது என்று பதிலளித்தார்.

தொடர்ந்து, நகைச்சுவையாக, பஹாமாஸ்தான் பொருத்தமானது. அங்கே வருமான வரி கிடையாது. நிதியை எளிதாகக் கையாளும் வகையில் சட்டம் வசதி செய்து தருகிறது. தலைமையகம் அமைவதற்கு ஒரு வேளை பஹாமாஸ் சரியான இடமாகவும் இருக்கலாம் என்று குறிப்பிட்டார்.

அதையடுத்து மைக் வெப் பேசுகையில், தொழில்நுட்பம், தகவல் தொடர்பு வசதி வேகமான வளர்ச்சி பெற்றுள்ள நிலையில், ரோட்டரியின் தலைமையகம் எங்கே அமைந்தாலும் ஒரு பொருட்டல்ல. இந்நிலையில், தலைமையகத்தை மாற்றுவது பல்வேறு பிரச்சினைகளை ஏற்படுத்தும். இவான்ஸ்டினில் உள்ள நமது கட்டடத்தில் முதலீடு செய்துள்ளபோது, தலைமையகத்தை மாற்றுவதால் வரிச் சிக்கல்கள் ஏற்படும். இவான்ஸ்டினில் உள்ள கட்டடத்தின் பாதி பகுதியைத்தான் நாம் பயன்படுத்தி வருகிறோம். மற்ற இடங்களைப் பயன்படுத்தும் நிறுவனங்கள் தரும் தொகையில் பல செலவுகளை ஈடு செய்து வருகிறோம். அத்துடன், இவான்ஸ்டின் அமைந்துள்ள இல்லினாய்ஸ் மாகாணத்தின் சட்டத்தின் கீழ் பல வரிச்சலுகைகளை அனுபவித்து வருகிறோம். இடத்தை மாற்றினால், அந்தச் சலுகையை இழக்க நேரும் என்றார்.

PRIP சாபூ பன்னாட்டு நிறுவனங்களுக்கு உலகின் பல நாடுகளில் தன்னாட்சி உரிமையுள்ள அலுவலகங்களை இயக்கி வருவதைப் போல் இந்தியாவில் உள்ள ரோட்டரி அமைப்பு தலைமையகத்தின் அஞ்சல் அலுவலகம் போல அல்லாமல்,



RID C *பாஸ்கர்,* DG *ராஜீவ் சர்மா,* PRIP KR *ரவீந்திரன்,* TRF *அறங்காவலர் மைக் வெப்,* DG *சயந்தன் குப்தா,* RI *தலைவர் பாரி ரஸ்ஸின்,* PRIP *ராஜேந்திர சாபூ,* DG *பர்ஜேஷ் சிங்கல்.*

தன்னாட்சியுடன் செயல்படலாம். வரும் காலத்தில் அதிகமான தன்னாட்சி உரிமை கிடைக்கும் என எதிர்பார்க்கிறேன் என்றார்.

அப்போது பேசிய ரஸ்ஸின், வரிகளைச் சேமிக்க டோஸ்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல் அமைப்பின் தலைமையகம் கலிபோர்னியாவிலிருந்து கோலோராடோவுக்கு மாற்றப்பட்டபோது, பல சிக்கல்கள் நேர்ந்தன. தலைமையகத்தை மாற்றியபோது, பாதிக்கு மேற்பட்ட பணியாளர்கள் வெளியேறிவிட்டனர். அதன் பிறகு, பணிகள் நிறுத்தப்பட்ட இடத்திலிருந்து தொடங்குவதற்குப் பல காலம் ஆயிற்று என்றார்.

### கொடுக்கும் பண்பாடு

அதையடுத்துப் பேசிய ரவீந்திரன், TRFக்கு கடந்த ஆண்டு நன்கொடை அளித்த நாடுகளில் அமெரிக்கா 18.10 கோடி டாலர் வழங்கி முதலிடத்தில் இருக்கிறது. நன்கொடை வழங்கும் முதல் 20 நாடுகளின் பட்டியலில் ஐரோப்பாவின் ஐந்து நாடுகள் மட்டுமே இடம்பெற்றுள்ளன. நல்ல நிலையில் உள்ள மேலைநாடுகளின் தரமான வாழ்க்கையுடன் பார்த்தால், குறைவுதான். அதே சமயம் 1.90 கோடி டாலர் அளித்துள்ள இந்தியா உள்பட பல ஆசிய நாடுகள் முதல் 20 நாடுகளின் பட்டியலில் இடம்பெற்றுள்ளன. இந்நிலையில், வலிமையான பொருளாதாரம் கொண்ட ஐரோப்பிய நாடுகள் ஏன் அதிக தொகையை அளிக்கக் கூடாது? என்று வெப்பிடம் கேட்டார்.

### அதற்கு அறங்காவலர் வெப் பதிலளித்தார்:

அதற்கு பல நாடுகளின் தொண்டுகளுக்கு நன்கொடை அளிப்பதில் அந்தந்த நாடுகளில் உள்ள வெவ்வேறு பண்பாடுகள், வெவ்வேறு வகையான வரிவிதிப்பு முறைகள் காரணம். இந்தியாவிலும் ஆப்பிரிக்க நாடுகளிலும் பல முறை பயணம் செய்திருக்கிறேன். இங்கே உள்ள மக்கள் தாங்கள் அளித்த நன்கொடை எப்படி பயன்படுத்தப்படுகிறது என்பதையும், அது உரியவர்களுக்குப் பயன் தருகிறதா என்பதையும் பார்க்கிறார்கள். அதாவது அளிக்கும் நிதியைக் கொண்டு ஆழ்குழாய் அமைக்கப்படுகிறதா, மருத்துவமனைக்கு உபகரணங்கள் வாங்கப்படுகின்றனவா என்றெல்லாம் பார்க்கப்படுகிறது என்று கூறிய அவர், பிரிட்டனில் உலகளாவிய நன்கொடையைக் கொண்டு பல நாடுகளில் சேவைகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், அவர்கள் நன்கொடை அளித்த நாட்டுக்கு தனிப்பட்ட முறையில் பயணம் செய்து பார்த்தால்தான் அந்த நன்கொடை எப்படிப் பயன்பட்டது என்பதை அறிய முடியும். ரோட்டரி சங்கங்களோ, ‘ஓ, நாம் நிறைய பணத்தை ஃபவுண்டேஷனுக்கு அளிக்கிறோமா?’ என்று கேட்கும். எனவே, உள்நாட்டு மொத்த உற்பத்தியின் அடிப்படையில் நன்கொடை அளிப்பது என்பது நடைமுறைக்கு ஒத்து வராது என்றார்.

ரவீந்திரன் கருத்தை ஏற்றுக் கொண்ட சாபூ, வாங்கும் திறனுடன் நன்கொடை அளிப்பதைப் பொருத்திப் பார்க்கலாம் என்று யோசனை கூறினார்.

வளர்ந்த நாடுகளை ஒப்பிடும் போது, நாம் கொடுப்பது அதிகமான தொகை. அதிக நன்கொடை அளிக்கும் நாடு என்றும் பெறும் நாடு அல்ல என்றும் நாம் பெருமைப்பட்டுக் கொள்ள வேண்டும். நமது ஐராப்பிய நாட்டு நண்பர்களும் நமது உதாரணத்தைப் பின்பற்றுவார்கள் என்று நம்புகிறோம் என்றார். அதே சமயம் ஐரோப்பிய நாடுகளில் யாருக்கும் கொடையுள்ளம் இல்லை என்று கூற முடியாது. ஒரு முறை ஜெர்மனியைச் சேர்ந்த ரோட்டேரியனிடம் போலியோ ஒழிப்புக்காக ஒரு லட்சம் டாலர் அளிக்கும்படி கேட்டுக் கொண்டேன். அதற்கு இசைந்த அவர், ‘சரி தருகிறேன், ஆனால், மாவட்ட ஆளுநர் பதவிக்குப் போட்டியிடும்படி வற்புறுத்தக் கூடாது. எந்த இடத்திலும் என் பெயர் வரக் கூடாது‘ என்று இரு



நிபந்தனைகளை விதித்தார். இதுதான் நமக்கும் அவர்களுக்கும் உள்ள கலாசார வேறுபாடுகள் என்றும் சாபூ கூறினார்.

### வேகமாக மாறுவது போதாது

அடுத்த கேள்வியைக் கேட்ட ரவீந்திரன், கடந்த 20 ஆண்டுகளாக டிஜிட்டல் சந்தையில் கூகுள், ஆப்பிள், அமேஸான் போன்ற பெரிய நிறுவனங்களே ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இந்நிலையில் ரோட்டரி இன்னும் பால் ஹாரிஸ் காலத்திய நடைமுறையைத்தான் பின்பற்றுகிறதா? என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த சாபூ, இது உண்மையாக இருக்கலாம். ரோட்டரி தனது விழுமியங்களுக்கே முக்கியத்துவம் அளித்து வருகிறது. உதாரணத்திற்கு, ஜப்பான், தென்கொரியா ஆகிய நாடுகள் தொழில்நுட்பத்தில் வளர்ச்சி பெற்றிருந்தாலும், தங்களது பாரம்பரியம் பண்பாடு ஆகியவற்றையே கடைப்பிடித்து வருகின்றன என்றார்.

அப்போது, வெப் பதிலளிக்கையில், ரோட்டரி பால் ஹாரிஸ் காலத்திலேயே இருக்கவில்லை என்றார். தொடர்ந்து பேசிய அவர், இக்கூட்டத்தின் தேநீர் இடை வேளையில் என்னுடன் உரையாடிய ஓர் இந்திய ரோட்டேரியன் பிரிட்டன் பயணத்தில் ஒரு ரோட்டரி சங்கத்துக்குச் சென்றார். ‘அதில் உள்ளவர்களின் சராசரி வயது 70. சங்கத் தலைவரின் வயது 80க்கு மேல். அந்த அமைப்பு கொஞ்ச நாளில் மறைந்தவிடும். பல ஆண்டுகளுக்கு முன் எப்படி ஒன்றாகச் சேர்ந்து கூட்டம் நடத்தினார்களோ அதைப் போலவே நண்பர்கள் சந்திப்புக் கூட்டத்தை இன்றும் நடத்துகிறார்கள்’ என்றார். கடந்த இரண்டு ஆண்டுகளில் மொத்தம் 3 லட்சம் பேரை உறுப்பினர்களாக இணைத்துள்ளோம். அதே அளவு உறுப்பினர்களை இழந்துள்ளோம். ரோட்டராக்ட் அமைப்பில் உள்ள இளைஞர்களில் 4 சதவீதம் பேர்தான் ரோட்டரி சங்கங்களில் உறுப்பினர்கள் ஆவதாகப் புள்ளி விவரம் கூறுகிறது. காரணம், ரோட்டரி சங்கங்கள் இன்று தங்களுக்கு உகந்ததாக இல்லை என இளைஞர்கள் கருதிகறார்கள். பல இடங்களில் பால் ஹாரிஸ் காலத்தைப் போலவே செயல்படுகிறோம். அது மாறவேண்டும்.

உதாரணத்திற்கு, மாற்றத்தைச் செயல் படுத்துவதற்குக் கூட நான்கு ஆண்டுக்கு மேல் ஆகிறது. இத்தகைய நிலை விரைவில் மாற வேண்டும் என்றார்.

விவாதத்தின்போது, இயக்குநர் களைப் போல அறங்காவலர்களையும் ஏன் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கக் கூடாது என்ற கேள்வி எழுந்தது. அது போல், ரோட்டரி ஃபவுண்டேஷன் தலைமைப் பதவிக்கு முன்னாள் தலைவரை அமர்த்தவேண்டும். சிறந்த நபரைத் தெரிவு செய்து அவரை ஏன் நியமிக்கக் கூடாது? என்று ரவீந்திரன் கேள்வி எழுப்பினார்.

அதை ரஸ்ஸின் ஏற்கவில்லை. மண்டல அமைப்புகளை இயக்குநர்கள்தான் நடத்துகிறார்கள். அவர்கள் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். அறங்காவலர் இயக்குநர்கள் குழுவில் இடம் பெறுபவராக இருக்க வேண்டும். அதே சமயம் முன்னாள் தலைவர் அறங்காவலராக இருக்கவேண்டும் என்று அவசியம் இல்லை. சிறப்பாகச் செயல்படுபவரே தேர்ந்தெடுக்கப்பட வேண்டும் என்றார் ரஸ்ஸின்.

மைக் வெப் பேசுகையில், அறங்காவலர்கள் தேர்ந்தெடுப்படக் கூடாது. நியமிக்கப்படவேண்டும். காரணம், அத்தகைய பொறுப்பை ஏற்பவர்களுக்கு நிதியைக் கையாளும் திறன், மனித வள ஆற்றல், தொழில்நுட்பம் ஆகியவை இருக்க வேண்டும். அப்போதுதான் அறக்கட்டளையைச் சிறப்பாக இயக்க முடியும் என்றார்.

TRF அறங்காவலர்களைத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கலாம் என்ற யோசனை 1992 ஆம் ஆண்டு கூறப்பட்டது. ஆனால், அது தோற்கடிக்கப் பட்டது. காரணம், அது ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் ரோட்டரி ஃபவுண்டேஷன். ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவரே அதன் முதல் நபர் மற்றும் தகவல் தொடர்பாளர் ஆவார் என்று சாபூ நினைவு கூர்ந்தார்.

### உறுப்பினர்களின் தரம்

கடந்த ஆண்டு மலேசிய தலைநகர் கோலாலம்பூர் மாநாட்டில் நடந்த முதல் கூட்டத்தில் உறுப்பினர்களுக்கான தரம் தகுதி குறித்து PRIP கல்யாண் பானர்ஜியிடம் கேட்ட போது, இந்தியாவில் கம்பெனிகளின் முதன்மை செயல் அலுவலர் போன்ற நிலையில் இருப்போர் ரோட்டரியில் இடம்பெறவில்லை என்று கூறினார். இந்நிலையில் சந்தாவை 100 டாலராக உயர்த்தினால், உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துபோகும். மேல்தட்டு உறுப்பினர்கள் மட்டும்



PRIP KR *ரவீந்திரன்*

நீடிப்பர். ஆனால், இதை நான் ஏற்கவில்லை. இதில் கவனமாக இருக்க வேண்டும். செலுத்த வேண்டிய தொகையின் காரணமாக அவர்கள் விலகுகிறார்கள் என்று சொல்ல முடியாது. அது அவர்களது இயல்பாகும். செலுத்த வேண்டிய தொகையைக் குறைவாகவே வைத்திருப்பேன். அதன் மூலம் ரோட்டரி சங்கங்களுக்குக் கைகொடுக்கலாம் என்றார் ரவீந்திரன்.

அதற்குப் பதிலளித்த சாபூ, நாம் பணப் பிரச்சினை காரணம் என்று கருதவில்லை. தகுதிதான் பிரச்சினையாகும். நமது சாசன சட்ட விதிகள் தகுதி குறித்துக் குறிப்பிட்டுள்ளது. பிரச்சினை எங்கே வருகிறது, உறுப்பினர்களை அவசரமாகச் சேர்த்துவிட்டு, பிறகே வகைப்படுத்துகிறோம். மாறாக, வகைப்படுத்துவதன் முக்கியத்துவத்தை உணர்ந்தால், மூத்தவர்கள், தலைவர்களை அவர்களது தகுதியின் அடிப்படையில் தேர்ந்தெடுத்தால், ரோட்டரியில் இணைந்து சேவை புரிவதற்கு வரிசையில் காத்திருப்பார்கள். உறுப்பனர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது, அங்கீகாரத்தைப் பெறுவது என்ற நடைமுறை சரியல்ல என்றார்.

தொடர்ந்து பேசிய அவர், பன்முகத் தன்மையை RI வலியுறுத்துகிறது அந்தப் பன்முகத்தன்மை வகைப் படுத்துவதன் மூலம் உருவாகும். கூட்டங்களை நடத்தி, அதன் மூலம் ஒருவரை ஒருவர் சந்திப்பதும் தொடர்பு ஏற்படுத்திக் கொள்வதும் தான் ரோட்டரியின் ஓர் அம்சமாகும். இத்தகைய மாநாட்டை ஒரு கம்ப்யூட்டர் மூலம் மக்களைச் சென்று அடைவதைப் போல நினைத்துப் பாருங்கள். நேரடியாகச் சந்திப்பதில் ஏற்படும் ஒற்றுமை கூட்டாண்மையைப் போல் வருமா? ஒருவரை ஒருவர் நேரடியாகப் பாராட்டுவது, விவாதிப்பது, விமர்சிப்பது ஆகியவை மூலமும், கண்ணொடு கண் சந்திப்பதன் மூலமும் சாத்தியமாகும். உறவு என்பது மிக முக்கியம். அதுதான் நமது பலம் ஆகும் என்றார்.

## ரோட்டரியில் நல்லதும் கெட்டதும்



RI தலைவர் பாரி ரஸ்ஸின்

*ரோட்டரியில் நல்லது எது கெட்டது எது என்று PRIP KR ரவீந்திரன் கேட்ட கேள்விக்கு பதிலளித்த RIP பார்ரி ரஸ்ஸின், அதை நல்லது, கெட்டது என்பதை விட, மோசமானது (the good, bad and ugly) என்று மூன்று வகையாகப் பிரிக்கலாம் என்றார்.*

*அவர் மேலும் கூறியதாவது:*

- *சேவைத் திட்டங்களும் உலகை மாற்றப் போகிறோம் என்ற நிலையும் நல்லது. எஸ்தரும் நானும் ரோட்டரி ஆதரவில் இயங்கும் தாய்ப்பால் அளிக்கும் இரு வங்கிகளுக்கு (human milk banks) சென்று பார்த்தோம். இன்னொன்று, ஒரு தீவில் ரோட்டரி திட்டம் செயல்பட்டுக் கொண்டிருந்தது. அங்கே திடக் கழிவுகள் மறு சுழற்சியின் மூலம் மீண்டும் இயற்கை உரமாக்கப்படுகிறது. அதை சுற்றுலாப் பயணிகளுக்கு விற்பனை செய்கிறார்கள். இது தொழில்முனைவோரை உருவாக்குகிறது. இது அற்புதமான பணி.*
- *ரோட்டராக்ட் இளைஞர்களுடன் பேசும்போது, தங்களை ஏற்கும் ரோட்டரி சங்கங்களே இல்லை என்று கூறினர். இது கெட்டது.*
- *மோசமானது, பணிகளுக்கான நிதி அந்தப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படாமல், வேறு யாருக்கோ போகிறது என்றும் அது குறித்து புலனாய்வு செய்யப்பட வேண்டும் என்றும் வரும் தகவல் மனத்துக்கு வேதனை தருகிறது. அப்படிச் செய்பவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும். தேர்தலில் ஒருவர் தேர்ந்தெடுக்கப்படாததால், துயரப்படுகிறார். சில ரோட்டரி சங்கங்கள் செயல்படுவதில்லை. சில இடங்களில் ரோட்டரி நெறிமுறைகளுக்கு ஏற்ப செயல் படுவதில்லை. இது போன்ற நிகழ்வுகள் வேதனை அளிக்கின்றன. ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும் எல்லா நேரங்களிலும், ரோட்டரி விதி களையும் கடைப்பிடித்தாக வேண்டும் என்று எதிர்பார்த்தால் என்னால் நிம்மதியாகத் தூங்க முடியாது.*

*இவ்வாறு ரஸ்ஸின் கூறினார்.*

### பாஸ்கருக்குப் பாராட்டு!

ரவீந்தரன் அடுத்து, RID C பாஸ்கர் நன்றாகச் செயல்படுகிறாரா? என்று கேட்டார். அதற்குப் பதிலளித்த ரஸ்ஸின், மாவட்ட ஆளுநர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களிடம் நான் முன்பு கூறியது தான். RID C பாஸ்கர் உங்களது சரியான பிரதிநிதியாக இருக்கிறார். தேவைப்படும் போது வருகிறார். அவசியப்படும் போது புதிய யோசனைகள் கூறுகிறார். பாஸ்கருடன் போர்டில் இணைந்து பணியாற்றுவது மகிழ்கிறேன் என்றார்.

போர்டு கூட்டத்தில் பாஸ்கரின் ஆதரவு ரஸ்ஸினுக்கு அடுத்த ஆண்டு தேவைப்படுகிறது என்று சாபூ குறிப்பிடுகையில், ரஸ்ஸின், பாஸ்கர் எங்களது இயக்குநர் என்று கூறிக் கொள்வதில் எங்களுக்குப் பெருமை ஏற்படுகிறது என்று நேர்மையாகக் கூறுகிறோம். இயக்குநர்களிடம் விசுவாசத்தை எதிர்பார்க்கவில்லை. நமது ரோட்டரி சங்கத்தின் நலனுக்காக நல்ல யோசனைகளை மட்டுமே எதிர்பார்க்கிறோம் என்றார்.

ரோட்டரி ஃபவுண்டேஷனின் நிதிக் குழுவின் தலைவரான வெப், போர்டு கூட்டத்தில் பாஸ்கர் பேசும்போதெல்லாம் அதை ஆதரிப்பேன். அவரது அறிவுபூர்வமான பேச்சைக் கேட்பது பயனுள்ளது என்றும் குறிப்பிட்டார்.■

# கேரளாவை புனரமைப்போம்

ஜெய்ஸ்ரீ



ஆகஸ்ட் மாதம் பெய்த கன மழை மற்றும் வெள்ளத்தால் சேதத்துக்கு ஆளான கேரளா மற்றும் குடகு (கர்நாடகா) பகுதிகளின் புனரமைப்புக்கென்றே சென்னை இன்ஸ்டிட்யூட்டில் பிரத்யேக நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தன. 'சூழ்நிலையின் உக்கிரத்தைப் புரிந்து கொண்டு, வெள்ளத்தில் பாதிக்கப்பட்டோருக்கு உதவிக்கரம் நீட்டிய எல்லா ரொட்டேரியன்களுக்கும் பாராட்டுக்கள். இப்போது மீட்புப் பணிகள் முடிந்து விட்ட நிலையில், மறுவாழ்வுப் பணிகள் மீது நாம் கவனம் செலுத்த வேண்டும், அதை 2019 ஜூன் மாதத்துக்குள் நிறைவு செய்ய வேண்டும்' என்று RID C பாஸ்கர் பேசினார்.

மேலும், பலத்த மழையினால் கூர்க் மாவட்டத்திலும் 38 கிராமங்கள் மோசமாகச் சேதமடைந்துள்ளன என்பதை அவர் சுட்டிக் காட்டினார். அந்தப் பகுதியை கவனித்துக் கொள்ளும் DG ரோஹிநாத் (D3181), ரொட்டேரியன்களின் ஆதரவுக்கு நன்றி தெரிவித்தார். நாடெங்கும் உள்ள ரோட்டரி சங்கங்கள், லாரிகள் நிறைய ஆடைகள், குடிநீர், மருந்துகள் போன்ற நிவாரணப் பொருட்களை கொண்டுவந்து சேர்த்தனர். கூர்கில் 750 வீடுகளைக் கட்டிக் கொடுப்பதற்காக, PDG ரவி அப்பாஜி தலைமையில் ஒரு தனிக் குழு அமைக்கப்பட்டுள்ளது என்று ரோஹிநாத் சொன்னார். இன்ஸ்டிடியூட்டில் நடைபெற்ற அமர்வுகளில், வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட 3211, 3201, 3202 ஆகிய மூன்று மாவட்டங்களில் 3,000 வீடுகளை கட்டிக் கொடுக்கும் இலக்குக்கு நிதி திரட்டும் வழிகள்




*DG EK லூக், EK உம்மர், வீணா மற்றும் DG AV பதி.*



RID C *பாஸ்கர் மற்றும்* DGs S *பிரையோன், சுரேஷ் ஹரி, சிந்தாமணி பட்டாராய்.*

பற்றி விவாதிக்கப்பட்டது. வெள்ளம் வடிந்ததும், PRIP கல்யாண் பேனர்ஜி கேரளாவுக்கு வருகை தந்த போது இந்தத் திட்டத்தை முன்வைத்தார், மேலும் RID C பாஸ்கர், PRIP பேனர்ஜி, TRF அறங்காவலர் குலாம் வாஹன்வதி, மற்றும் மூன்று மாவட்டங்களின் கவர்னர்களான E.K. லூக் (D 3211), A.V. பதி (D 3201), E.K. உமர் (D 3202) ஆகியோர் சேர்ந்து கொச்சியில் 'ரோட்டரி கேரளா பேரிடர் நிவாரண அறக்கட்டளை' யை உருவாக்கிப் பதிவு செய்தனர். மாவட்டங்களுக்கு வந்த அனைத்து நிவாரண நிதிகளும் இந்த அறக்கட்டளையில் சேர்க்கப்பட்டன. இந்தியர் மற்றும் உலகளவில் உள்ள ரோட்டரி மாவட்டங்களும் சங்கங்களும் இந்தப் பேரிடர் மீட்புக்காக மூன்று கவர்னர்களுக்கு தங்கள் நன்கொடைகளை அனுப்பிக் கொண்டே இருக்கின்றனர்.

துடிப்பாகச் செயல்பட்டு கேரள மாநிலத்துக்கு உதவிக்கரம் நீட்டிய இந்திய ரொட்டேரியன்களை பாராட்டிப் பேசிய RI தலைவர் பேரி ராஸ்ஸின், TRF நிதியுடன் சேர்த்து ஒரு 'நன்கொடையாளர் ஆலோசனை நிதி'யை (DAF) உருவாக்குமாறு பரிந்துரைத்தார். 2010-இல் ஹாய்ட்டி பூகம்பத்துக்குப் பிறகு நிவாரணப் பணிகள் செய்த தனது சொந்த அனுபவத்தைச் சுட்டிக் காட்டி அவர் இவ்வாறு கூறினார், "உங்கள் நாட்டுக்கு வெளியே உள்ள மக்கள் DAF-ற்கு நன்கு பழக்கப்பட்டவர்கள், எனவே ஓர் உள்நாட்டு அறக்கட்டளையை விட DAF மூலம் நிதி திரட்டுவது இலகுவாக இருக்கும்."

உடனே பாஸ்கர் ஓர் ஆரம்ப நன்கொடையாக $10,000 வழங்கி, கேரளப் பேரழிவுக்கு DAF அமைக்க வழியேற்படுத்தினார்.

PRIP ராஜேந்திர K சாபூ அவர்கள், இந்தப் பணிக்கு நிதி திரட்ட கார்பரேட்களை அணுகுமாறு ரொட்டேரியன்களை வலியுறுத்தினார். தனது நிறுவன ஊழியர்கள் அனைவரும் ஒரு நாள் சம்பளத்தை இந்த நிவாரண மற்றும் மறுவாழ்வுப் பணிக்கு நன்கொடையாக வழங்கியதாகவும், அதேயளவில் இன்னொரு தொகையை தனது குழுமம் வழங்கிய தாகவும் தெரிவித்தார். "அமெரிக்காவில் உள்ள எனது இளைய மகனும் தன் DAF-யிலிருந்து $25,000 கொடுத்தார்," என்று சொன்னார்.

பாஸ்கர் அனைத்து கவர்னர்களிடமும் தங்கள் DDFகளிலிருந்து தாராளமாக நன்கொடை வழங்குமாறு அழைப்புவிடுத்து, 'எல்லா மாவட்டம்களும் கைகோர்த்து ஒரு மாபெரும் திட்டப்பணியை நடத்தி, பொது மக்களிடையே ரோட்டரியின் நற்பெயரை மேம்படுத்த இது நல்ல வாய்ப்பு' என்று சொன்னார். உலகளாவிய மானியத்தின் மூலம் கேரளாவில் குறைந்த விலையிலான வீடுகள் கட்ட $47,000 நன்கொடை அளித்த D 3000 கவர்னர் RVN கண்ணனை அவர் பாராட்டினார்.

கொரியா RID யூன்-சூ மூன் அவர்களும் இந்தத் தொண்டுப் பணிக்காக தனது மாவட்டம்களிலிருந்து நிதி ஆதரவு தர விருப்பம் தெரிவித்தார்.



TRF *அறங்காவலர் மைக் வெப் மற்றும் பிற DGக்கள்.*

### ரோட்டரி வீடுகள்

ஒரு 339 சதுரஅடி கொண்ட ஒற்றை BHK வீட்டுக்கு ரூ.3.5 லட்சம் செலவாகும் என்று மதிப்பிடப் படுவதாக அதன் நுணுக்கங்கள் பற்றி பதி விளக்கினார், எனவே தனிப்பட்ட ரொட்டேரியன்கள் தலா ஒரு வீடு கட்ட நிதி ஆதரவு செய்யலாம் என்று அழைப்பு விடுத்தார், ‘இவ்வாறு ஆதரவு அளிக்கும் நபரின் பெயரே அந்த வீட்டுக்கு வைக்கப்படும்; அதுமட்டுமல்ல, RI சான்றிதழையும் வழங்கி அவரை கௌரவிக்கும், மேலும் அவரே தன் கையால் வீட்டுச் சாவியை அந்தப் பலனாளிக்குக் கொடுப்பார். அவர் இதற்காக நிதி திரட்டுவது பற்றி பேசுகையில், இம்மூன்று மாவட்டங்களில் 240 வீடுகள் கட்ட உலகளாவிய மானியம் பெறுவது ஒரு வழி; இதேபோல், 1,000 வீடுகள் கட்ட CSR நிதிகளைப் பெற முயற்சிப்பது இன்னொரு வழி; பிறகு, மீதமுள்ள 1,760 வீடுகளைக் கட்ட ரோட்டரி மாவட்டங்கள் மற்றும் சங்கங்களின் நேரடி நன்கொடையைப் பயன்படுத்துவது மூன்றாவது வழி என்று யோசனை சொன்னார்.

நிகழ்ச்சியில் காட்சியுரை நிகழ்த்திய ஆஸ்டர் ஹெல்த்கேர் நிறுவனத்தின் ராஜீவ் சுபாஷ் அவர்கள், தங்கள் CSR முன் முயற்சியாக எர்ணாகுளம், ஆலப்புழை மற்றும் வயநாட்டில் 250 வீடுகளைக் கட்டிக் கொடுக்கத் தயாராக இருப்பதாகவும், அதற்கு ரோட்டரியின் கூட்டுறவை எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்தார். ‘திட்டத்தின் துவக்க மதிப்பீடு $2,50,000, இன்னும் சிறந்த திட்டத்தை ரோட்டரி முன்வைத்தால் இதை $7,50,000 என்றளவுக்கு அதிகரிக்கலாம்,’ என்றார் அவர்.

### கார்பரேட் ஆதரவை பெறுவோம்

வெள்ளத்தில் வீடு இழந்து தவிப்பவர்களுக்கு, தங்கும் வசதியை அளிக்கும் ரோட்டரியின் திட்டத்தை கார்பரேட்கள் மத்தியில் பிரச்சாரம் செய்வதற்காக ஒரு விசேஷத் தகவலேட்டை விநியோகிக்கலாம் என்றார் பாஸ்கர்.

‘நாம் எல்லோரும் கைகோர்த்துப் பணியாற்றுவோம், கூடிய விரைவில் கேரளத்தையும் கூர்கையும் புனரமைப்போம். ஃபவுன்டேஷனின் உலகளாவிய மானியக் குழு, இதற்கான ஒப்புதலை விரைவுபடுத்த வரிந்துகட்டிக் கொண்டு செயல் படுகிறது, நானும் இதற்கான நடவடிக்கைகளை நேரடியாகக் கண்காணிக்கப் போகிறேன். நாம் ஒரு தலைசிறந்த திட்டப்பணியாக நடத்தி, சமூகத்துக்குச் சேவை அளிப்போம், அதேவேளை ரோட்டரி ஃபவுன்டேஷன் மற்றும் ரோட்டரியின் நற்பெயரையும் பிரகாசமாக்குவோம்,’ என்றார்.

DDF தொகைக்காக நன்கொடை வழங்கவேண்டும் என்று DGகளுக்கு பாஸ்கர் விடுத்த அழைப்பின் பேரில், நிகரத்தொகையாக $5,00,000 மற்றும் ரூ.1.2 கோடி வாக்குறுதி அளிக்கப்பட்டது. கிட்டத்தட்ட எல்லா மாவட்டங்களுமே ஒருசில வீடுகளுக்கான செலவை ஏற்றுக்கொண்டன. PRIP சாபூ தார்மீக நன்கொடையாக ரூ.20 லட்சம் அறிவித்தார்; RRFC விஜய் ஜாலனும், D 3011 DG வினய் பாட்டியாவும் தலா ஒரு வீட்டுக்கு நிதி ஆதரவு தர சம்மதித்தனர், EMGA வினோத் பன்ஸால் தனது CSR நிதியிலிருந்து 50 வீடுகளுக்கு நிதி ஆதரவு வழங்கச் சம்மதித்தார்.

மூன்று மண்டலங்களில் பல வருடங்களாகச் சேர்ந்த $3 மில்லியன் அளவிலான DDF இருப்புத் தொகையும், இந்த ரோட்டரி ஆண்டுக்காக ஒதுக்கப்பட்ட $4.5 மில்லியன் DDF தொகையும் கேரளாவில் வீடுகள் கட்ட பயன்படுத்தலாம் என்றார் TRF அறங்காவலர் மைக் வெப். ‘இங்கே உள்ள ஒவ்வொரு கவர்னரும் தங்கள் DDF நிதியை உண்மையாக மதிப்பிட வேண்டும். ஏதோ வங்கிக் கணக்கில் கிடப்பதற்காக அது வசூலிக்கப்படவில்லை. தேவையுள்ள மக்களுக்கு உதவுவதே அதன் நோக்கம். இந்தப் பொக்கிஷத்தை வைத்து நீங்கள் உலகளாவிய மானியத்தைக் கோரலாம்‘ என்று வலியுறுத்தினார் அவர்.■

# கேரள வெள்ளத்தில் தப்பிய நெல்!

ரஷீதா பகத்

கேரளத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ளத்தில் ஆயிரக்கணக்கான நெல் வயல்களில் பயிர்கள் சேதமடைந்தன. ஆனால், 3211வது மாவட்ட ரோட்டரியின் இயற்கை நெல் உற்பத்தி செய்வதற்கான 'ரீப்' (REAP) எனப்படும் வேளாண் உற்பத்தி ரோட்டரி திட்டத்தின் (Rotary Empowerment of Agri Production) கீழ் விளைந்த பயிர்கள் பாதிக்கப்படாத அற்புதம் நிகழ்ந்திருக்கிறது. மங்கிவரும் வேளாண்மையைப் புதுப்பிப்பதற்காக இத்திட்டம் கடந்த ஆண்டு மாவட்ட ஆளுநர் சுரேஷ் மாத்யூ தலைமையில் கொண்டுவரப்பட்டது.

ரோட்டரி சங்கம் கேரள அரிசி ரகத்தை விளைவிப்பதற்காக ஆரம்பத்தில் ஒரு திட்டத்தைக் கொண்டுவந்தது. பெண்கள் அதைப் பெரிதும் விரும்பினர். தரிசு நிலத்தின் வளமான பகுதியைப் பசுமையாக்கியதை அடுத்து இத்திட்டம் வெற்றியடைந்தது.

இது குறித்த கட்டுரை ரோட்டரி நியூஸ் இதழில் கடந்த மார்ச் மாதம் பிரசுரமானது. இந்நிலையில், 'ரீப்' திட்டத்தின் கீழ் விளைந்த அந்தப் பயிர்கள் கேரளத்தில் ஏற்பட்ட வெள்ளத்தில் என்ன ஆயிருக்கும் என்று நினைத்துப் பார்த்தேன். சென்னை இன்ஸ்டிட்யூட்டில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்ற மாவட்ட முன்னாள் ஆளுநர் மாத்யூவிடம் இது குறித்துக் கேட்டேன்.

நல்ல காலமாக 'ரீப்' திட்டத்தின் 2018-19ம் ஆண்டுக்கான தலைவர் மீனாகுமாரன் நாயர் மழை வெள்ளம் ஏற்படுவதை முன்கூட்டியே அனுமானித்தார். அதனால் விதை விதைக்கும் பணி தள்ளி வைக்கப் பட்டது. நாயரே ஆர்வமுள்ள ஒரு விவசாயி என்பதாலோ என்னவோ மழை வெள்ளத்தை முன்கூட்டியே யூகித்துவிட்டார். அதனால், பயிர்களை அழிவிலிருந்து காப்பாற்றிவிட்டார் என்றார்.

ரீப்' திட்டத்தின் கீழ் பயிரிடுவது கடந்த ஆண்டே வெற்றிகரமாகப் பலன் அளித்தது. நாயர் திருப்தியடைந்து, பல ரோட்டரி அமைப்புகளும் இந்த ஆண்டு பெரிய அளவில் பயிர் மகசூல் மேற்கொள்ளலாம் என்று முடிவெடுக்கப்பட்டது.

இதன்படி திருவனந்தபுரத்தையடுத்த தொழில்நுட்ப நிறுவனங்கள் அமைந்துள்ள பள்ளிப்புரம் பாடசேகரம் என்ற இடத்தில் முதலில் 50 ஏக்கரில் பயிரிடுவது என முடிவு செய்யப்பட்டது. மேலும், இத்திட்டத்தில் திருவனந்தபுரம் டெக்னோபார்க் வளாகத்தில் உள்ள பல்வேறு தொழில்நுட்ப நிறுவனங்களைச் சேர்ந்த இளைஞர்களை ஈடுபடுத்தி, அவர்களுக்கும் வேளாண்மை குறித்த ஆர்வத்தை ஊட்டுவதற்கு நாயர் உத்தேசித்தார் என்று மாத்யூ கூறினார்.

இந்த இயற்கைச் சீற்றத்தின் விளைவாக கேரள மக்கள் இயற்கையைப் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்று உணர்ந்துவிட்டார்கள். இந்தச் சீற்றத்தையடுத்து, 'ரீப்' திட்டம் இப்போது தேவை என்று ரோட்டரியினர் வலுவாக நம்புகிறார்கள் என்றார் மாத்யூ.

இந்த வெள்ளத்தின் சேதம் ஏற்படுவதற்கு முன்பு குயிலோன் ஹெரிடேஜ் ரோட்டரி சங்கம் பயிரிட்ட நெல் நன்றாக விளைந்து அறுவடை செய்யப்பட்டுவிட்டது. அறுவடைக்குப் பின் கால்நடைப் பந்தயத் திருவிழா வெற்றிகரமாக நடத்தப்பட்டது. அதில் ஏராளமான கிராம மக்கள் கலந்துகொண்டனர்.

அக்டோபரின் கடைசி வாரத்தில் 10 ஏக்கர் நிலப் பரப்பில் வடக்கு ஆலப்புழை ரோட்டரி சங்கம் சார்பில் நெல் விதைகள் விதைக்கப்பட்டன. அதைப் போல் கழக்குட்டம் என்ற இடத்தில் 50 ஏக்கர் பரப்பில் ரோட்டரி சங்கங்கள் கூட்டாக இணைந்து நவம்பரில் பயிரிடப்போகின்றன. என்றும் மாத்யூ கூறினார். ■



Rotary Institute 2018

# இந்திய ரோட்டரியின் முன்முயற்சிகள், ஒருங்கிணைந்த பயிற்சிகள்

ரஷீதா பகத்

ரோட்டரியின் சென்னை மண்டல மாநாட்டில் (Chennai Zone Institute) நடை பெற்ற நிகழ்ச்சியை RID C. பாஸ்கர் தொடங்கிவைத்துப் பேசினார். அப்போது, ரோட்டரியின் 4, 5, 6A ஆகிய மூன்று மண்டலங்கள் மேற்கொண்ட முன்முயற்சி கள், ஒருங்கிணைந்த பயிற்சித்திட்டம், அவற்றை நடத்துவதற்கு உறுதியான விதிமுறைகள், ரோட்டராக்ட் ரோட்டரி அறக்கட்டளை கொண்டு வந்துள்ள புதிய அறிவிப்புகள் ஆகியவற்றைப் பாராட்டினார்.

தனது பதவிக் காலம் நிறைவடையும் 15 மாதங்களில் இவை எல்லாம் நிறைவேற்றப்பட்டது என்றார்.

நிகழ்ச்சியில் பேசிய அவர், நமது மண்டல அமைப்புகளைச் சார்ந்த 4, 5, 6A ஆகிய மண்டலங்களுக்கு உட்பட்ட 40 மாவட்டங்களின் கீழ் வரும் 3,929 ரோட்டரி சங்கங்களின் 1,51,853 ரோட்டரி உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பில் நமது உறுப்பினர்களின் எண்ணிக்கையை அதிகரித்துள்ளது மட்டுமின்றி, ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு மொத்தம் 1.90 கோடி டாலர் நிதி திரட்டி அளித்து இரண்டாவது இடத்தைத் தக்க வைத்திருப்பதும் மிகவும் பாராட்டுக்குரியது என்றார்.

இந்தியாவில் மாவட்ட ஆளுநர்கள், மூத்த ரோட்டேரியன்களின் ஆதரவுடன் இயக்குநர் என்ற முறையில், தான் பல முன் முயற்சிகளில் கவனம் செலுத்தியதாகக் குறிப்பிட்டார். ரோட்டரி சங்கங்களை வலுப் படுத்தி அவை உள்ளூர் சமுதாயத்தின் குறைகள், புகார்களைக் கவனித்துச் செயல்பட வழி செய்யப்பட்டது. ரோட்டரியின் நற்பெயர் அதன் மூலம் வளர்ந்தது என்றார்.

### பயிற்சியின் முக்கியத்துவம்

தலைவர்கள், செயலர்கள், இதர ரோட்டரி அலுவலர்களுக்கான பயிற்சித் திட்டங்களுக்கு முக்கியத்துவம் தருவதாகக் கூறிய C. பாஸ்கர், அத்திட்டம் நன்கு கட்டமைக்கப்பட்டுவிட்டது. தற்போது அது குறித்து ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் கையேட்டில் இடம்பெற்றுள்ளது. அது அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது என்றார்.

உறுப்பினர்கள் குறித்தும், பொது மக்களிடையில் நற்பெயர் பெறுவது, ரோட்டரி ஃபவுண்டேஷன் அமைப்பு ஆகியவை தொடர்பாகவும் மாவட்டத் தலைவர்களுக்கான பயிற்சி தொடங்கிவிட்டது. ரோட்டரி கவனிக்க வேண்டியவை அதன் முன்னுரிமை ஆகியவை குறித்து மாவட்ட அளவிலான கருத்தரங்குகளை நடத்துவதற்கான திட்டம் மாவட்ட ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் கூறினார்.

மேலும், மாவட்ட அளவிலான பயிற்சிக் கூட்டங்களை அந்தந்தப் பகுதிகளிலேயே நடத்தலாம் என்று ரோட்டரி இன்டர்நேஷனல் போர்டு பரிந்துரைப்பதற்கான அனுமதியைப் பெற்று விட்டேன். இதன் மூலம் உறுப்பினர்களின் வீண் அலைச்சல் செலவு



குறையும். பெண்களை ரோட்டரி அமைப்புகளில் ஈடுபடுத்துவது முக்கியம் ஆகும். இப்பொழுது மகளிர் சேவைத்திட்டங்களில் அதிகம் ஈடுபடுகின்றனர் என்றார் அவர்.

ரோட்டரி சங்கங்கள் சிறந்த சேவைத் திட்டங் களை மேற்கொள்வதை ஊக்குவிப்பதற்காக" சிறந்த ரோட்டரி சங்கத் திட்டம் குறித்த விடியோ' போட்டி (Best Club Project Video) தொடங்கப்பட்டுள்ளது. அதன் மூலம் ரோட்டரி சங்கங்கள் தங்களது சமுதாயத்தில் ஆற்றிய நல்ல பணிகளை இதர ரோட்டரி அமைப்புகளுடன் பகிர்ந்து கொள்ள இது வழியமைக்கும். இது எவ்வளவு நேரத்தில் பணிகளை நிறைவேற்றியுள்ளோம் என்பதையும் சமுதாய நலனுக்கான சேவைத் திட்டங்களுக்கு எவ்வளவு செலவிடப்பட்டது என்பதை அறிவிக்கவும் உதவும் என்றார் பாஸ்கர்.

### ரோட்டராக்ட் மீது தனிக் கவனம்

RID C பாஸ்கர், தனது பதவிக் காலத்தில் ரோட்டராக்ட் அமைப்பின் மீது தனிக் கவனம் செலுத்தியதாகக் குறிப் பிட்டார். மாவட்ட ஆளுநர்கள், ரோட்டராக்ட் பிரதிநிதிகளும் இணைந்த ஒருங்கிணைப்புக் கூட்டங்கள் ஹைதராபாத், தில்லி ஆகிய இடங்களில் நடைபெற்றன. இதன் விளைவாக ரோட்டராக்ட் சங்கங்களை ரோட்டரி இன்டர்நேஷனல் பதிவு செய்வது அதிகரித்துள்ளது. இத்தகைய பதிவு முன்பு 9 சதவீதமாக இருந்தது. தற்போது 72 சதவீதமாக உயர்ந்துள்ளது. இந்த ஆண்டு இறுதியில் 100 சதவீதத்தை எட்டிவிடு வோம். ரோட்டரி ஒருங்கிணைப்பாளர்கள் சிறந்த வகையில் பணியாற்றும் ரோட்டராக்ட் மாவட்ட பிரதிநிதிகளை ஜெர்மனி ஹம்பர்க் நகரில் நடைபெறும் ரோட்டரி சர்வதேச மாநாட்டுக்கு சொந்த செலவில் அழைத்துச் செல்கிறார்கள். இது போன்றவை ரோட்டராக்ட் இளைஞர்களுக்கு உத்வேகம் அளிக்கும்.



RID C *பாஸ்கர் மற்றும் மாலா அவர்களை மாநாட்டின் தலைவர்* ISAK *நாசர் மற்றும் அவர் மனைவி அஃபசலுன்னீசா கௌரவிக்கின்றனர்.*

### ரோட்டரி நியூஸ் அறக்கட்டளையின் முன் முயற்சிகள்:

ரோட்ராக்ட் நியூஸ் என்ற டிஜிட்டல் காலாண்டு பத்திரிகை, மண்டலங்களில் நிகழும் பல்வேறு செயல்கள் குறித்த விழிப்புணர்வை ரோட்டராக்ட் இளைஞர் களிடம் ஏற்படுத்தியுள்ளது. ரோட்டரி நியூஸ் டிரஸ்ட் (RNT) ரோட்டரி நியூஸ் பிளஸ் என்ற மாதாந்திர மின்னிதழைக் கடந்த ஆண்டு தொடங்கியது. சங்கங்கள் மேற்கொண்ட சிறந்த சேவைத் திட்டங்கள் குறித்து கட்டுரைகள் இடம்பெறுகின்றன. இப்போது எந்த ரோட்டரி சங்கமும் தங்களது சேவைகள் குறித்த தக வல்கள் இதழில் இடம் பெறவில்லை என்று புகார் கூறுவதில்லை என்றார் பாஸ்கர். அத்து டன் RNT பல்வேறு மாநில மொழிகளிலும் வெளியிடுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

ரோட்டரி நியூஸ் இதழின் அச்சுப் பிரதி களை கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு அனுப்பி வருகிறோம். அப்போது தான் ரோட்டரியின் சேவைகளை அவர்கள் அறிந்து கொள்வர். அது கார்ப்பரேட் சமுதாய நல நிதியை (CSR) அளிப்பதற்கு உதவும். ரோட்டரி நியூஸ் டிரஸ்ட் அமைப்பின் பல்வேறு செயல்பாடுகளை, குறிப்பாக அச்சுப் பணிகளை மாற்றியமைப்பதன் மூலம், ரூ.40 லட்சம் செலவை மிச்சப்படுத்த முடிந்தது. அந்த நிதி பல்வேறு பயனுள்ள திட்டங்களுக்கு செலவிடப்படும் என்றார்.

### பொறுப்புணர்வு, வெளிப்படைத்தன்மை

சில "நிதிமுறைகேடுகள்" குறித்து குறிப்பிட்ட பாஸ்கர், சில ரோட்டரி சங்கங்கள் பொறுப்புணர்வோ, வெளிப்படைத் தன்மை இல்லாமல் இயங்கும் சில அறக்கட்டளைகளை அமைத்துள்ளன எனத் தெரிகிறது. ரோட் டரியின் பெயரைத் தவறாகப் பயன்படுத்தும் அமைப்புகளைக் கண்காணித்து, அவற்றின் செயல்கள் குறித்து அறிக்கை தரும்படி மாவட்ட ஆளுநர்கள் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர்.

இந்த மண்டலத்தின் வேண்டுகோளின் அடிப்படையில் மேற் பார்வை ஆய்வுக்கான குழுவை அமைப்பதற்கு ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர்கள் கடந்த ஆண்டு இசைவு தெரிவித்துள்ளனர். இந்தியாவுக்கு அளிக்கப் படும் உலகளாவிய மானியங் களையும் கண்காணிக்க அனுபவம் நிறைந்த மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் அந்தக் குழுவில் இடம்பெறுகின்றனர்.

# PRIP சாபூவுக்கு போலியோபிளஸ் விருது

PRIP ராஜேந்திரா K சாபூவுக்கு இந்நிகழ்ச்சியில் "போலியோ பிளஸ் முன்னோடி விருது' (PolioPlus Pioneer Award) வழங்கப்பட்டது. 1992ம் ஆண்டு நவம்பருக்கு முன்பு போலியோபிளஸ் சேவையில் சிறந்த வகையில் ஈடுபட்டவர்களைச் சிறப்பிக்க இந்த விருது 1996ம் ஆண்டு நிறுவப்பட்டு, அதே ஆண்டு இந்த விருது நிறுத்தப்பட்டது. இப்போது போலியோவை முற்றிலுமாக ஒழிப்பதற்கான இலக்கு நிறைவேறும் காலம் நெருங்கி வருவதால், ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர்கள் இந்த விருதினை மீண்டும் வழங்க முடிவு செய்தனர். எனினும், 1996ம் ஆண்டு முதல் 1999ம் ஆண்டு வரையில் யாருக்கும் வழங்கப்படவில்லை.

சாபூவுக்கு வழங்கப்படும் விருதின் பாராட்டிதழில், போலியோவை ஒழிக்க உலக அளவில் மேற்கொள்ளப்படும் முயற்சியில் மகத்தான முன்னேற்றத்தை அடைந்துள்ளோம். அதற்கு ஏராளமான ரோட்டரி சங்கத்தினர் குறிப்பிடத்தக்க அளவில் பங்களிப்பு செலுத்தியுள்ளனர். போலியோ பிளஸ் திட்டத்தின் சார்பில் அவர்கள் எடுக்கும் முயற்சிகள் மிகவும் பாராட்டத்தக்கவை.

இந்த விருதினைப் பெற்றுக் கொண்ட ராஜேந்திரா சாபூ, இந்த விருதினை மிகுந்த பணிவோடு பெற்றுக் கொள்கிறேன். இதற்கான பயணம் 1981ல் தொடங்கியது. ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பு உலகளவில் குழந்தைகளுக்கு போலியோ சொட்டு மருந்து போடுவதற்கான நடவடிக்கை எடுத்தபோது, நான் இயக்குநர்கள் குழுவில் இருந்தேன். அதையடுத்து "போலியோ 2005" என்ற திட்டம் தொடங்கப்பட்டது. அதையடுத்து இந்தப் பணி தொடர்ந்து கொண்டே இருக்கிறது.

ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரின் கனவுப்படி போலியோ முற்றிலுமாக ஒழிக்கப்படும் போது கடவுளின் கருணையால் நான் இங்கே இருப்பேன் என்று நம்புகிறேன். அது வரை நானும் என் மனைவி உஷாவும் ரோட்டரிக்கும் சமுதாயத்திற்கும் சேவை புரிந்துகொண்டே வருவோம் என்று சாபூ கூறியபோது தன் கண்களில் துளிர்த்த நீரை அடக்க முயன்றார்.

அதன் பிறகு பேச்சைத் தொடர அவரால் இயலவில்லை. PRIP K R ரவீந்திரன் சாபூவின் மனைவி உஷாவை ஓரிரு வார்த்தைகள் பேசும்படி கேட்டுக் கொண்டார்.

அதற்கு உஷா சாபூ, இந்தப் பணிக்காக உண்மையாகவே உழைத்த மனிதரே (சாபூ) பேச முடியாமல் தவிக்கும் போது, என்னால் எப்படி பேச முடியும்? ஒன்று கூறுகிறேன், ராஜேந்திரா எதையெல்லாம் செய்ய முடிந்ததோ அவையெல்லாம் கடவுளின் கருணைதான். உண்மையில் நீங்கள் அனைவரும்தான் இந்த விருதுக்குத் தகுதியானவர்கள் என்று கூறினார்.

மாவட்ட முன்னாள் ஆளுநரும் மாநாட்டின் தலைவருமான ISAK நாஸர் வரவேற்றுப் பேசினார். EMGA சாம் படிபண்ட்லா பேசுகையில், இந்த நிகழ்ச்சியில் பங்கேற்க 10 நாடுகளிலிருந்து 800 பேரை திரட்டியதில் சென்னை நிறுவனத்தின் கமிட்டிக்குப் பெரிய பங்கு இருக்கிறது என்றார்.



PRIP ராஜேந்திர சாபூ மற்றும் உஷாவிற்கும் போலியோ முன்னோடி விருது. RID C பாஸ்கர், PRIP KR ரவீந்திரன், RI தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர், TRF அறங்காவலர் மைக் வெப் மற்றும் குலாம் வஹன்வதி, INPPC தலைவர் தீபக் கபூர் அவர்களும் உள்ளனர்.




*RI தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் Rtn. D ரவிசங்கரும் அவர் மனைவி பவோலாவும் MoU கையெழுத்திட்டனர். RID C பாஸ்கர், மாலா, அனிதா ஹரி, TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, DG சுரேஷ் ஹரி, எஸ்தர், அலிசன் மற்றும் TRF அறங்காவலர் மைக் வெப் ஆகியோரும் உடன் உள்ளனர்.*

அத்துடன் உலகளாவிய மானியம் அளிக்கப்பட்ட திட்டம் முழுமையாகவும் உரிய நேரத்திலும் சரியாக நிறைவேற்றப்படுகிறதா என்பதையும் அக்குழு உறுதி செய்யும். இது ஒருவித சுய தணிக்கை முறையாகும். பெறப்படும் ஒவ்வொரு டாலரையும் ரோட்டரி சங்கங்களும் முறையாகப் பயன்படுத்துவதை உறுதி செய்வதற்கான நடவடிக்கை.

D 3100 ஐ ரோட்டரி இன்டர்நேஷனல் போர்டு புனரமைத்துள்ளது மகிழ்ச்சி தருகிறது. இந்த ஆண்டு முதல் அது இதர மாவட்ட அமைப்புகளைப் போல் செயல்பட்டு வருகிறது.

உலகம் முழுவதும் உள்ள மண்டலங்களை அவற்றின் உறுப்பினர்களின் அடிப்படையில் ரோட்டரி இன்டர்நேஷனல் 8 ஆண்டு களுக்கு ஒரு முறை மறு சீரமைப்பு செய்து வருகிறது. அத்தகைய வழக்கத்தை இந்தியாவிலும் செய்யலாமா என்று பாஸ்கர் யோசனை தெரிவித்தார்.

எண்ணிக்கையை உறுப்பினர்களை அடிப்படையாகக் கொண்டு மாவட்ட எல்லைகள் மாற்றியமைக்கப்படுலாமா? அமைந்திருக்கும் தொலைவுகள், மாவட்ட ஆளுநர்கள் எளிதில் சென்று வருவதற்கான வசதிகள், மொழிகள், அந்தந்த மாநிலங்கான அம்சங்கள் ஆகியவற்றின் அடிப்படையில் மாற்றி யமைக்கப்படுலாமா? உறுப் பினர்களின் எண்ணிக்கையை உயர்த்தாமல் இவை செயல்படுத்தப்படுமா? இவை குறித்து ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலர்கள் உரிய யோசனைகள், வழி காட்டுதல்களைத் தெரிவிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

### கேரளத்துக்கான வேண்டுகோள்

அண்மையில் கேரளத்தைப் பாதித்த இயற்கைச் சீற்றம், கர்நாடகத்தின் சில பகுதிகளைத் தாக்கிய வெள்ளம் பெரும் சேதத்தை ஏற்படுத்தி விட்டன. அப்போது கேரள ரோட்டரி சங்கத்தினரும் நாட்டின் இதர பகுதிகளைச் சார்ந்த ரோட்டரி சங்கத்தினரும் உரிய நேரத்தில் செயல்பட்டு, மனிதாபிமானப் பணிகளை மேற்கொண்டது மகிழ்ச்சி அளிக்கிறது. தற்போது வீடிழந்தவர்களுக்கான மறுவாழ்வுப் பணிகளில் ஈடுபடவும் உள்ளது.

குறைந்த செலவில் வீடு களைக் கட்டித் தருவதற்காக ரோட்டரி அமைத்துள்ள குழுவுக்குத் தலைமை வகிக்க PRIP கல்யாண் பானர்ஜி முன் வந்துள்ளார். ரோட்டரி சங்கத்தினர் தாராளமாக உதவும்படி கேட்டுக் கொள்கிறேன். ஒவ்வொரு வீட்டுக்கும் ரூ.3.5 லட்சம் செலவாகும். அந்தளவு தொகையை வழங்கினால், அவர் விரும்பும் பெயர் அந்த வீட்டுக்குச் சூட்டப்படும் என்றார்.

### ரவிசங்கருக்குப் பாராட்டு!

ரோட்டரி ஆண்டு பிறந்த போது, ரோட்டரி உலகமே திகைத்துப் போகும்படி பெங்களூருவைச் சேர்ந்த D ரவிசங்கரும் அவரது மனைவி பவோலாவும் TRFக்கு ரூ.100 கோடி நன்கொடை அளிப்பதாக அறிவித்தனர். அவர்களை மாநாட்டில் பாராட்டி சிறப்பிக்கப்பட்டனர்.

நன்கொடை அளித்த ரவிசங்கர், அந்த நிதி எப்படிப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பது குறித்து ரோட்டரி ஃபவுண்டேஷன் அமைப்புடன் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் (MoU) கையெழுத்திட்டுள்ளார்.

இது குறித்துப் பேசிய RID, எங்கள் எல்லோருக்கும் ஓர் உண்மையான தூண்டு கோலாகத் திகழ்கிறீர்கள். ரோட்டரிக்கும், இந்தியாவுக் குப் பெருமை பெற்றுத் தந்திருக்கிறீர்கள். உங்களது உத்வேகம் எங்களுக்குப் புதிய ஆற்றலைத் தருகிறது. ரவிசங்கரின் தந்தை கமலேஷ் தனக்குச் சொந்தமான எல்லா நிலத்தையும் வினோபாபவே நடத்திவந்த பூதான இயக்கத்திற்கு அளித்துவிட்டார். அதே வழியில், மகன் ரவிசங்கரும் மிகப் பெரிய தொகையை அளித்துள்ளார். இதன் மூலம் சமூகப் பணிகளுக்கு அதிக தொகை நன்கொடை அளித்த பில்-மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளைக்கு அடுத்த இடத்தை ரவிசங்கர் பெற்றிருக்கிறார். ரவிசங்கருக்கு இந்த விஷயத்தில் ஊக்கமளித்த மாவட்ட ஆளுநர் சுரேஷ் ஹரி பாராட்டத்தக்கவர் என்று குறிப்பிட்டார்.■

# RIPN சுஷில் குப்தாவிற்கு
## பாராட்டு விழா



*RIPN சுஷில் குப்தா மற்றும் வினிதா, RID C பாஸ்கர், PRIDs சேகர் மேத்தா, மனோஜ் தேசாய், TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, PRIP கல்யாண் பானர்ஜி மற்றும் PRIP ராஜேந்திர சாபூ.*




*PRIP ராஜேந்திர சாபூ, வினிதா, RIPN சுஷில் குப்தா மற்றும் PRIP கல்யாண் பானர்ஜி.*






**மேலே:** *RID C பாஸ்கரும் மாலாவும் RIPN சுஷில் குப்தா மற்றும் வினிதாவுடன்.*

**வலது:** *RIDE பரத் பாண்டியா, PRIP கல்யாண் பானர்ஜி, TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி மற்றும் RIDE கமல் சங்வி.*

**கீழே:** *DG சுபாஷ் ஜெயின், புனிதா பாட்டியா, PRID P T பிரபாகர், ஷர்மிஷ்டா, PRID மனோஜ் தேசாய், RIDEs கமல் சங்வி, பரத் பாண்டியா, PRIP ராஜேந்திர சாபூ மற்றும் வினிதா குப்தா.*







*மாலா பாஸ்கர் மற்றும் வினிதா குப்தா*

*படம்: ரஷீதா பகத், வடிவமைப்பு: கிருஷ்ணமூர்த்தி*

# மூன்று PRIP வாழ்த்து மழையில் RIPN குப்தா

ரஷீதா பகத்

**கல்யாண் பேனர்ஜி**

2020-21 ஆண்டுக்கான RI தலைவர் தேர்வுக்காக முன்மொழியப்பட்டதற்கு சுஷீல் குப்தாவைப் பாராட்டிப் பேசுகையில்,'' என் ரோட்டரி வாழ்க்கையில் இது ஒரு மகிழ்ச்சியான நாள், மேல்நிலைக்கு முன்னேறும் என் உயிர்நண்பர்களில் ஒருவர்-ஒரு நண்பர் தான், ஆனால் 1980 இல் இந்தியாவில் போலியோ ஒழிப்புத் திட்டத்தில், நாங்கள் ஒன்றாக இணைந்து வேலை செய்ய ஆரம்பித்த நாள் முதல், பலவருடங்களாக என் தம்பி போல இருக்கிறார், எங்கள் ரோட்டரி வாழ்க்கையையும் TRF அறங்காவலர் பணியை இருவரும் பகிர்ந்து கொண்டதையும் நான் நினைத்துப் பார்த்திருக்கிறேன்'' என்று டெல்லியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் PRIP கல்யாண் பானர்ஜி சொன்னார்.

ரோட்டரியில் தலைவருக்கான நியமனக் குழு ஒரு தனித்துவமான குழு என்று பேனர்ஜி சொன்னார். எப்போதும் உலகம் முழுவதிலும் உள்ள 34 மண்டலங்களிலிருந்து 17 மண்டலத்தைச் சேர்ந்த பிரதி நிதிகளையும், PRIDயும் இது தேர்ந்தெடுத்துள்ளது, "இவர்கள் அனைவரும், அனுபவமுள்ள ரொட்டேரியன்கள். அமெரிக்காவின் வடக்கு, தெற்கு, மற்றும் ஐரோப்பா போன்றவற்றிலிருந்து கடுமையான போட்டியைக் கொண்டிருந்தார்.''



*PRID சேகர் மேத்தா, TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, PRIP ராஜேந்திர சாபூ, வினிதா குப்தா, RIPN சுஷில் குப்தா மற்றும் PRIP கல்யாண் பானர்ஜீ.*

பேனர்ஜி “இவான்ஸ்டனில் நியமனக் குழு கூடிய தினம் எனக்கு ஒரு உறக்கமில்லா இரவாக மாறியது. அந்தக்குழுவுடன் தனது முதல் நேர்காணலை முடித்த பின்பு சுஷீலும் நானும் பேசும்போது, சரியாக செய்ததாகச் சொன்னார். அவர் நேர்காணலைப் பற்றி ரொம்ப அலட்டிக்கொள்ளவில்லை.'' என்றார்.

அது இந்திய நேரப்படி இரவு 2 மணி; மற்றவர்களையும் நேர்காணல் நடத்தியது நியமனக்குழு, 3 மணி மற்றும் 4 மணிக்கும் மறுபடியும் நாங்கள் பேசினோம். இறுதித் தேர்வை அறிந்துகொள்ளக் காத்துக் கொண்டிருந்தார். பிறகு திடீரென, “கல்யாண், ஒரு நிமிடம் பொறுங்கள். என்னமோ நடக்கிறது” என்று சொன்னார். ஒரு நிமிடம் எந்தச் சத்தமும் இல்லை, நியமனக் குழுவின் ஒரு உறுப்பினர் சேகர் மேத்தா எனக்குப் போனில் சொன்னார், குப்தா முன்மொழியப்பட்டிருக்கிறார் என்று.



பிறகு குப்தா போனில் கூப்பிட்டுச் சொன்னார்: “கல்யாண் இதைச் சாதித்துவிட்டோம் எனத் தெரிகிறது. இவான்ஸ்டனை தாண்டி முதலில் உங்களை வாழ்த்துபவன் நான் தான் என்று சொன்னேன்.”

பிறகு தன் மனைவி பினோதாவை எழுப்பி, இந்தச் சந்தோஷமான செய்தியைச் சொன்னதாக சிரிப்புடன் சொல்கிறார்.

இந்தியாவைச் சேர்ந்த நான்காவது RI தலைவராகவும் ஒரு நல்ல தலைவராகவும் இருப்பார். குறிப்பாக தண்ணீர் மேம்பாட்டில் குப்தாவின் பணி ரோட்டரியில் இணையற்றது. ரோட்டரி ஆக்சன் குரூப்களை உருவாக்கியவர்களில் இவரும் ஒருவர் மற்றும் TRF அறங்காவலராக இருக்கும்போது இந்தியாவின் பிரச்சனைகளை அதிக அக்கறை கொண்டு கவனம் செலுத்தியவர். அவருடைய மற்றும் வினிதாவினுடைய உபசரிப்பு, அவரின் புன்சிரிப்பு போலவே ஈடு இணையற்றது.''

இந்தியாவில் CSRகான உலகளாவிய மானியங்களை TRF வழங்கக் காரணமாக இருந்தவர் இவர் தான் என்ற உண்மையை வெளிப்படுத்தினார் பேனர்ஜி. 2020-21 ஆண்டு ஒரு நல்ல களமாக அமைய குப்தாவுக்கும் வினிதாவுக்கும் வாழ்த்து தெரிவிக்கையில், “வினிதா ஒரு விஷேசமான மனுஷி, ரோட்டரியின் முதல் பெண்ணாக இருந்து சுஷீலின் தலைமைக்கு வலிமை சேர்ப்பார்” என்று சொன்னார்.

### ராஜேந்திர K சாபூ

RIயின் தலைமை பொறுப்புக்காக முன்மொழியப்பட்டதற்கு குப்தாவைப் பாராட்டிப் பேசும்போது, பேனர்ஜி முன்மொழியப்பட்ட தினத்தை நினைவு கூர்ந்தார் PRIP ராஜேந்திர சபூ.'' அது என்னுடைய 75வது பிறந்த நாள், அவர் எனக்கு போன் பண்ணும் போது நான் முழித்துக்கொண்டிருந்தேன். நான் முன்மொழியப்பட்ட இரவு கூட நான் விழித்துக்கொண்டு இல்லை. கல்யாண் (பேனர்ஜி) போன் பண்ணி உறுதிப்படுத்தினார், என்னுடைய 75வது பிறந்த நாளில் மிகச்சிறந்த பரிசு இதுதான் என்று சொன்னேன்.''

(2018 ஆம் ஆண்டு பின்லாந்தில் நடந்த உலக ஜூனியர் ஓட்டப்பந்தைய) 400 மீட்டர் போட்டியில், ஓட்டப்பந்தைய வீரர் ஹிமா தாஸ், தங்கப்பதக்கம் வென்றபோது, விருது வழங்கும் விழாவில் நமது தேசியக்கொடி கம்பத்தில் ஏறும்போது, அவள் கன்னங்களில் கண்ணீர் உருண்டோடியது, அதுபோல 2020 ஆம் ஆண்டு ஜூலை 1 அன்று ஒன் ரோட்டரி சென்டரில் நமது மூவர்ணக்கொடி தலைமைக்குப் போகும்போது ஒவ்வொரு இந்தியனின் இதயமும் பெருமையால் விம்மும்.

இந்தியாவைச் சேர்ந்த மூன்று RI தலைவர்களும் கொல்கத்தாவில் பிறந்தவர்கள், குப்தாவுக்கும் ஒரு பெங்கால் தொடர்பு இருக்கிறது என்ற இரகசியத்தை வெளிப்படுத்தினார் சாபூ!'' வினிதாவின் பெற்றோர்கள் பெங்காலில் நீண்ட காலம் தங்கி யிருந்து, அதன் கலாச்சாரத்தை பின்பற்றினார்கள் அதனால் தான் வினிதாவுக்கு, பினோதா என்று பெயரிட்டார்கள்!''

நீண்டகாலம் குப்தாவை பற்றித் தெரிந்து கொண்டதால்,'' குணாதிசயம் மற்றும் ஆழ்ந்த ஆன்மீகப்பற்று கொண்ட ஒரு மனிதர், அடிமட்ட நிலையிலிருந்து வந்தவர், தொண்டு செய்யவே தன்னை இணைத்துக் கொண்டவர், நமது அமைப்பை முன்னேடுத்திச் செல்வதில் சிறந்த மனிதராக இருப்பார்'' என்று உறுதியாகச் சொன்னார்.

சென்னையில் குப்தா PRIDகளான மனோகர்லால் மன்சந்தா மற்றும் சுதர்சன் அகர்வால் போன்றோருக்கு தன் நன்றியை வெளிப்படுத்தினார், என்னைப்போலவே நிறையப்பேர் வியப்பில் ஆழ்ந்தனர், எப்படி சுஷீல் பாராட்டுகிறார் என்று: மன்சந்தா உங்களுக்கு எதிராக இருந்தாரே என கேட்டேன். “அதனால் என்ன? நீங்கள் என் நண்பராக இருந்தால் அதை மறந்துவிடுங்கள். அது கடந்த காலம்.”

ஒரு சில வருடங்களுக்கு முன்பு குப்தா இவருக்கு அறிவுறுத்தியதை நினைவு கூர்ந்தார்,'' கடந்த காலத்தை மறந்துவிடவேண்டும், அவர் எழுந்து என்னைக் ஆதரவாக அணைத்துச் சொன்னார்:' ராஜா நீங்கள் சொன்னதெல்லாம் இந்த வருடங்களில் என் மனதில் இருந்தது.' வரலாற்றை அழிக்க



PRIP KR *ரவீந்திரன், வானதி,* RIPN *சுஷில் குப்தா, வினிதா மற்றும் எஸ்தர்.*

முடியாது ஆனால் நம்மால் அதை மறக்க முடியும் என்று அப்போது முடிவெடுத்தோம். அப்போது தான், இவர் ஒரு குணாதிசயம் கொண்டவர், உண்மையிலேயே நமது தலைவராக வரமுடியும் என்று நான் உணர்ந்தேன்.''

1986-87 ஆண்டிலிருந்து போலியோ ஒழிப்பு பணியை எடுத்துக் கொண்ட விதம் மற்றும் தண்ணீர் சேமிப்பு மற்றும் WinS மூலம் ஸ்வச்ச பாரத் போன்றவற்றில் அவர் வேலை செய்த விதம் போன்றவற்றிற்கு முழு மதிப்பெண்களை வழங்கி சாபூ சொன்னார், "இப்போது உங்களுக்குக் கிடைக்கும் பாராட்டுக்களில் நனைய வேண்டாம் என்று உங்களை வலியுறுத்துகிறேன். வினிதா தான் உங்களின் மிகப்பெரிய பலமே. வினிதா எங்களுடன் நட்புடன் இருப்பதால் தான் இன்று நாம் இப்படிப் பிணைப்புடன் இருக்கிறோம். வினிதா, என் மீதும் உஷா மீதும் நீங்கள் காட்டிய அன்பையும் அக்கறையையும் நாங்கள் மறக்கவே மாட்டோம்.''

## KR ரவீந்திரன்

2020-21 ஆண்டுக்கான RI தலைவர் தேர்வுக்காக குப்தா முன்மொழியப்பட்டது குறிப்பாக தனக்கு முக்கியம் என்று தனது வீடியோ செய்தியில் குறிப்பிட்டார் PRIP KR ரவீந்திரன், "அந்த வருடத்தில் TRF தலைவராக நான் பணி செய்யப்போவது யதார்த்தமாக அமைகிறது, நமது அமைப்பின் நன்மைக்கு அடிப்படையான, ஒரு மனப்பூர்வமான பணி நட்பை என்னால் உருவாக்கக்கூடிய ஒரு தலைவரோடு உடன் பணிசெய்ய இயல்பாகவே எனக்குப் பிடிக்கும்.''

குப்தா முன்மொழியப்பட்டதைக் குறிப்பிட்டு, "இது ஒரு மிகச் சிறந்த தேர்வு'' என்று சொல்லி, TRF அறங்காவலர்கள் அமைப்பில் அவருடன் இரண்டு ஆண்டுகள் பணி செய்திருக்கிறேன், சுருக்கமாகச் சொன்னால், நிதிக் குழுவின் தலைவராகவும் முதலீட்டுக் குழுவின் ஒரு உறுப்பினராகவும் அவரது பங்களிப்பு வியக்கத்தக்கது,'' என்று சொன்னார்.

RI தலைவராக இருப்பது ஒரு மிகவும் தேவையான பணி என்று அவருடைய சொந்த அனுபவத்திலிருந்து அவர் சொன்னார். இரண்டு வருடங்களுக்கு அதிகமாக "நீங்கள் உத்வேகத்துடனும் தலைமைப்பண்புடனும் இருப்பதற்கான பயிற்சிக்காலத்திற்கு சொந்த நாட்டை விட்டு வெளியே இருக்கவேண்டும், நான் தலைவராக இருந்த இரண்டு வருடங்களில் வீட்டில் வெறும் 11 நாட்கள் மட்டுமே இருந்தேன். உலக அரங்கில் உள்ள ஒரு தலைவர் பணி இது, RI ஊழியர்கள் மற்றும் பவுண்டேஷனுடன் தொடர்பில் இருக்கவேண்டும் என்பதால் உங்கள் உடல் மாபெரும் பயணத்திற்கு ஏற்றமாதிரி இருக்கவேண்டும்.''

ஆனால் உலகின் இந்தப் பகுதியிலிருந்து தலைவர்கள் வருவது ஒரு நல்ல பயனுள்ள விஷயம்,'' அடிமட்ட நிலையில் இருப்பவர்களுக்குத் திட்டப்பணிகளில் தலைமை பதவியை தருவதற்கான வாய்ப்புகள் நம்மில் பலரிடம் இருக்கிறது. சுஷீல் (குப்தா) தண்ணீர் சேமிப்பில் ஒரு நிபுணர், நூற்றுக்கணக்கான திட்டப்பணிகளில் நேரடியாக ஈடுபட்டிருக்கிறார்,'' 100 சதவீதம் உள்ளூர் மக்களை மனதில் வைத்தே இந்த திட்டப்பணிகளை அவர் செயல்படுத்தியுள்ளார் என்பது தான் பாராட்டத்தக்கது. இலட்சியமுள்ள தலைவர் ஒவ்வொருக்குமான பாடங்கள் அதில்தான் இருக்கிறது நண்பர்களே, குப்தா ஒரு நல்ல நிலையில் இருக்கிறார் காரணம் அவர் சமூகங்கள் உண்மைநிலையையும் அவர்கள் சந்திக்கும் பிரச்சனைகளைப் பற்றி அவருக்குத் தெரியும்.''

ஒரு பெரிய கார்ப்பரேட் நிறுவனத்தில் நல்ல பயிற்சியுடன் சீனியர் CEO ஆகப் பணியாற்றிய அனுபவம் தான், மற்றொரு சிறந்த சாதகமான அம்சம். அவர் சர்வதேச அமைப்புகளுடன் பணிசெய்ததால், பல்வேறு கலாச் சாரங்களுடன் ஒருங்கிணையவும் புதிய வாய்ப்புகளைப் பார்க்கவும் அவரால் முடிந்தது.■

TRF தலைவரிடமிருந்து...



# TRF நிதி வளர்ப்போம்

ஒவ்வோர் ஆண்டும் நவம்பர் மாதத்தை ரோட்டரி நிறுவன மாதமாகக் கொண்டாடி வருகிறோம். உலகத்தில் நல்ல காரியங்களைச் செய்வதற்காக உலகின் மிகச் சிறந்த நிறுவனத்தை (ரோட்டரி) பெற்றதற்கு நாம் எவ்வளவு கொடுத்து வைத்திருக்கிறோம்! எங்காவது, ஒவ்வொரு கணமும் ஏதாவது ஒரு நல்ல காரியம் நடப்பதற்கு ரோட்டரி அமைப்பினரும் ரோட்டரி ஃபவுண்டேஷனும் காரணமாக இருக்கிறார்கள். அதற்காக நாம் பெருமைப்பட வேண்டும்.

அமெரிக்காவின் அட்லாண்டாவில் 2017ம் ஆண்டு ரோட்டரியின் 100வது ஆண்டு நிறுவன நாளைக் கோலாகலமாகக் கொண்டாடினோமே, நினைவிருக் கிறதா? அந்த ஆண்டு 30 கோடி டாலர் (சுமார் ரூ.2229.75 கோடி) திரட்டுவது என்று இலக்கு நிர்ணயித்தோம். ஆனால், இலக்கைக் கடந்து 30.4 கோடி டாலர் (சுமார் ரூ. 2259.48 கோடி) திரட்டினோம். அது ரோட்டரி ஃபவுண்டேஷனின் குறிப்பிடத் தக்க ஆண்டாகும்.

2017-18ம் ரோட்டரி ஆண்டில் ஃபவுண்டேஷன் இரண்டாவது நூற்றாண்டில் காலடியெடுத்து வைத்துள்ளது. சென்ற ஆண்டை விடக் கூடுதலாக, 36 கோடி டாலர் திரட்டுவது என இலக்கு நிர்ணயித்தோம். டொராண்டோவில் கடந்த ஜூன் மாதம் நடைபெற்ற மாநாட்டின் போது, அறங்காவல் குழுத் தலைவர் பதவியிலிருந்து ஓய்வு பெற்ற பால் A நெட்ஸெல் அந்த இலக்கை விஞ்சி 37.3 கோடி டாலர் நிதி திரட்டி சாதனை படைத்துள்ளோம் என்று தெரிவித்தார்.

நடப்பு ஆண்டில் 38 கோடி டாலர் திரட்டுவது என நிர்ணயிக்கப் பட்டுள்ளது. அதில், 5 கோடி டாலர் போலியோ நிதி ஆகும். அத்தொகையுடன், பில்-மெலிந்தா கேட்ஸ் அறக்கட்டளையின் இருமடங்கு நன்கொடையும் சேர்த்து 15 கோடி டாலர் ஆகிறது.

அது தவிர, ஆண்டு நிதி இலக்கு 13.7 கோடி டாலர் ஆகும். அறக்கட்டளை நிதி 61.5 கோடி டாலர், உலகளாவிய மானியம் உள்ளிட்ட பல வழிகளில் திரட்டப்பட வேண்டிய 31.5 கோடி டாலர் ஆகிய நிதி பலத்தின் மூலம் பல காரியங்களைச் சாதிக்கலாம்.

ஃபவுண்டேஷனில் உங்களது ஈடுபாட்டை அதிகரிக்க வேண்டும். பணி செய்வது, பங்களிப்பது, தூண்டுகோலாக இருப்பதன் மூலம் அதைச் செய்யுங்கள் என்று கேட்டுக் கொள்கிறேன்.

இன்றைய காலத்தை விட பிரகாசமான எதிர்காலத்தை இணைந்து உருவாக்குவோம். ஒவ்வொரு மாதத்தையும் ரோட்டரி மாதமாக்கிக் காட்டுவோம். எனவே, தூண்டுகோலாக இருங்கள். ரோட்டரி பாரம்பரியத்தை நிலைநாட்டுங்கள். வரலாற்றில் இந்த ஆண்டை இன்னொரு சாதனை ஆண்டாக மாற்றிக் காட்டுவோம்.



ரான் D பர்டன், ஃபவுண்டேஷன்
அறக்கட்டளைத் தலைவர்

---

ஹம்பர்க் மாநாட்டை நோக்கி...

# வசீகரிக்கும் நகரம்

குண்டுலா மெய்த்க்



ஜெர்மனி ஹம்பர்க் நகர் கலைநயம் கொண்டது. ஆனால், 1842ம் ஆண்டில் ஏற்பட்ட பெரிய தீ விபத்திலும் இரண்டாம் உலகப் போரின் மிகக் கோரமான குண்டு வீச்சிலும் சிக்கி பின்னர் தற்போது அதி நவீன கண்ணாடி வேலைப்பாடுகள், உலோக வேலைப்பாடுகள், 19ம் நூற்றாண்டின் அற்புதமான கலைநயம் மிக்க மாளிகைகள், 17ம் நூற்றாண்டின் ஓரளவு பட்டை தீட்டப்பட்ட மணிகள் என ஜொலிக்கிறது.

ஹம்பர்க் நகரின் கட்டடக்கலை நயத்திற்குக் காரணமே கடலில் கிடைக்கும் பொருட்களும், செங்கற்களும் என்று சொல்லலாம். அந்த நகரில் கப்பல்துறை கிடங்கு வளாகம் பார்க்க வேண்டிய இடமாகும். 1883ம் ஆண்டு தொடங்கி 1920 வரை கட்டியமைக்கப்பட்டது அது. பல உணவகங்களும், அருங்காட்சியகங்களும் இருக்கின்றன. இங்குள்ள செங்கல் கட்டடத்தை பாரம்பரியம் மிக்க இடமாக யுனெஸ்கோ (UNESCO) அடையாளம் கண்டுள்ளது. எல்பில் ஹோர்மோனி (Elbphil harmonie) இசையரங்கம் நம்மை முற்றிலும் வித்தியாசமாக கட்டியிழுக்கிறது. செங்கல் சுவர் மீது எழுப்பப்பட்டுள்ள கண்ணாடிக் கூரையோ அலைகளை நினைவூட்டுகிறது.

நகரின் கட்டடங்களுக்கு ஊடாக நடந்து செல்லும்போது, ஏதோ திறந்த வெளி கலைநயம் மிக்க அருங்காட்சியகத்தில் நடந்து செல்வதைப் போல் தோன்றுகிறது.

2019 HAMBURG

2019ம் ஆண்டு ரோட்டரி மாநாட்டுக்குப் பதிவு செய்து கொள்ள இணையதளம் : www.riconvention.org

# DGEகள் தலைமைப் பண்புகளை கற்றார்கள்

ஜெய்ஸ்ரீ

உங்களுக்கு இருப்பது ஒரு வருடம் தான், போய் பேரார்வத்துடன் உங்கள் வேலையைச் செய்யுங்கள். கல்யாண் பேனர்ஜி, ராஜா சாபு, KR ரவீந்திரன், மற்றும் முன்னாள், இன்றைய, வருங்கால இயக்குநர்கள் உங்களுக்கு இருக்கிறார்கள். உறுப்பினர் வளர்ச்சியில் பாஸ்கர் செய்தது உண்மையிலேயே மனதில் பதியும் விதத்தில் உள்ளது. நீங்கள் தான் உலகிலேயே, உறுப்பினர் வளர்ச்சியில் முதல் இடத்தில் இருக்கிறீர்கள். இந்த அமைப்பு உங்களைப் பற்றி பெருமைப் படும் விதத்தில், உங்கள் உறுப்பினர்களை ஊக்கப்படுத்துங்கள்.

அக்டோபர் முதல் வாரத்தில், ரோட்டரி மண்டல மாநாட்டில் முன்னர் நடந்த மூன்று நாள் GETS நிகழ்வின் கடைசியில், RI தலைவர் பாரி ரஸ்ஸின் மேலே சொன்ன வார்த்தைகளுடன் மண்டலம் 4, 5 மற்றும் 6Aவின் 40 DGEகளுக்கு சான்றிதழ்கள் வழங்கினார். ரோட்டரி இன்ஸ்டிடியூட்டின் விருந்தினரான அவர், கவர்னர் தேர்வுகளை, ஸ்டீவ் ஃபாபேர் எழுதிய, ரேடிகல் லீப் (Radical LEAP) என்ற புத்தகத்தின் சில வாசகங்களைக் கொண்டு உற்சாகப்படுத்தினார். ராஸின், LEAPன் கூருகளை விரிவாக்கி, அன்பைப் பெருக்குங்கள்; ஆற்றலை உருவாக்குங்கள்; தைரியத்தை ஊக்கப்படுத்துங்கள் மற்றும் ஆதாரங்களைக் வழங்குங்கள் என்றார், மக்கள் சேவையில் உங்களுக்கு பிடித்தமானதை செய்யுங்கள் என்று வருங்கால தலைவர்களுக்குச் சொன்னார். அன்பில்லாமல், உங்களுக்கு கூடுதலாக செய்ய காரணம் இருக்காது, தலைவர்கள், தடைகளை கடந்து வேலை செய்யும் ஆற்றலைப் பெற வேண்டும் மேலும் தன்னை சுற்றி உள்ளவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். 'உங்களுக்குத் தைரியமான இலக்கு இருக்க வேண்டும்.' என்னுடைய நோக்கம், ரோட்டராக்டர்களின் எண்ணிக்கையை இரு மடங்காக்குவது. ரோட்டராக்ட் சங்கம் ஆரம்பிக்க உங்கள் சங்கத் தலைவர்களை ஊக்கப்படுத்துங்கள், கடைசியில் வளர்ச்சியின் ஆதாரங்களைக் காட்டுங்கள்.

"நாள் முடிவில், உற்பத்தித்திறன் மற்றும் இலாபத்தன்மை முழுக் கதையை சொல்லும்,'' என்றார். முன்னதாக இன்ஸ்டிடியூட் கன்வீனர் RID C பாஸ்கர் "அதிக அதிகாரத்துடன் அதிக பொறுப்புகள் வரும், உங்கள் பரிந்துரையின்படி தான் RI போர்டு முடிவெடுக்கும். வாக்களிக்காத தலைவர்களையும் கை கோர்த்துச் செல்லும் முதிர்ச்சியை வளர்த்துக் கொள்ளுங்கள். உங்களுடைய இந்தச் சவாலான பயணத்தில் எல்லோருமே உங்கள் நண்பர்கள் தான்,'' என்றார்.



DGEக்கள் RIDE *பரத் பாண்டியா, மாதவி பாண்டியா, எஸ்தர்,* RI *தலைவர் பாரி ரஸ்ஸின்,* RID C *பாஸ்கர், மாலா,* RIDE *கமல் சங்வி மற்றும் சோனல் சங்வியுடன்.*

இந்த ஆண்டிற்கான இன்ஸ்டிடியூட், இரண்டு மாதம் முன்னதாகவே நடந்து, இது DGEக்களுக்கு, திட்டம் தீட்டவும், அவர்கள் குழுவைத் தயார் செய்யவும் உதவும் என பாஸ்கர் கூறினார். நீங்கள் ஜனவரி 2019ல் இன்டர்நேஷனல் அசெம்ப்ளிக்கு போகும்போது நிறையத் தகவல்களுடன் போகலாம், என்றார்.

அவர் ஒரு செயலூக்கம் உள்ள குழுவை உருவாக்குவது மிகவும் அவசியம் என்றார். "உங்கள் குழுவை உருவாக்கும் போது, நட்பையும், பிரதியுபகாரத்தையும் மறந்துவிட்டு, தகுதியின் அடிப்படையில் செய்ய வேண்டும் என்றார். அவர்கள், உங்கள் மாவட்டத்தை மேலே கொண்டு செல்ல மற்றும் உங்களுக்கு உதவ செயலூக்கம் உடையவர்களாகவும் கற்றுணர்ந்தவர்களாகவும் இருக்கவேண்டும்'' என்றார்.

அவர் மேலும், பொறுப்பேற்கும் DGகள் மாவட்ட பயிற்சி அசெம்ப்ளி (DTA), சங்க பொறுப்பாளர்களுக்கு பிரத்யேகமானது மற்றும் குறைந்த பட்சம் 9 மணி நேரமாவது இருக்க வேண்டும் என்றார். எல்லா பயிற்சி நிகழ்வுகளும் மாவட்ட எல்லைக்குள் தான் நடக்க வேண்டும் என்றார். இந்த மாதிரி பயிற்சி நிகழ்வுகள், வெளிநாடுகளில் நடத்தப்படும்போது, பல சங்க பொறுப்பாளர்களால் அதற்கான செலவைச் செய்ய முடியாது மற்றும் அவர்கள் கலந்து கொள்ள மாட்டார்கள். PETS, SETS, DTAகள், AGTS மற்றும் DISHA போன்ற எல்லா நிகழ்வுகளும் பயிற்சி கருத்தரங்குகளும் உங்கள் மாவட்டத்தை பின்பற்றத்தக்க வகையில் ஆக்கும். அது கேளிக்கை நிகழ்வல்ல என்றார் இயக்குனர்.

தகுந்த இடைவெளியில் மறு ஆய்வு கூட்டங்களை நடத்துங்கள்; GML ஆளுநரின் புகைப்படங்களை வெளிப்படுத்தும் ஒரு தளம் அல்ல, அது சங்கங்களின் வேலையை எடுத்துச் சொல்ல பயன்பட வேண்டும், இவை மேலும் அவர் சுட்டிக்காட்டியுள்ள சில முக்கிய குறிப்புகள்.

### பில்லியர்ட்ஸ் மற்றும் ரோட்டரி

RIDE மற்றும் GETS தலைவர் பரத் பாண்ட்யா, ஒரு தலைவர் பில்லியர்ட்ஸ் ஆட்டக்காரர் போல இருக்க வேண்டும் என்றார். எப்படி அவர் மேசையைச்சுற்றி போகிறார், கோலைத் துடைக்கிறார் மற்றும் எப்படிச் சரியான வேகத்துடன் சரியான கோணத்தில் பந்தை அடிப்பதற்கு முன் அதன் மீது கவனம் செலுத்துகிறார், "அப்படி தான் ஒரு பயிற்சி கருத்தரங்கு, உங்களுக்குச் சரியான வழியைக் காட்டி, உங்கள் மாவட்டத்தை வெற்றிகரமாகச் செயல்படுத்த உதவும்." என்றார்.

கார்லோஸ் காஸ்டேனடா என்ற எழுத்தாளரை மேற்கோள் காட்டி: "எல்லோருக்கும் ஒரு சிறு கண அளவு சந்தர்ப்பம், நமது கண் முன்னே அவ்வப்போது தோன்றி மறையும். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்து வேண்டும்,'' என்றார்.

முன்னதாக இன்ஸ்டிடியூட் சேர்மன் ISAK நாசர், இந்தப் பயிற்சியின் தனித்துவத்தைப் பற்றி குறிப்பிடுகையில், "GETS உங்களுக்கு ஒரு வாய்ப்பை வழங்குகிறது. ஆனால் நீங்கள் அதைக் கிரகித்துக்கொள்ள வேண்டும் மற்றும் மாறுவதற்குத் தயாராக இருக்க வேண்டும்,'' என்றார்.



### பென்சில்கள் மற்றும் தண்ணீர் பாட்டில்களில் இருந்து

RIDE கமல் சங்வி பென்சிலை உவமையாக்கி வருங்கால தலைவர்களை ஊக்குவித்தார். "ஒரு பென்சில் மாதிரி, உங்களால் பல அறியச் செயல்களை செய்ய முடியும், ஆனால் நீங்கள், உங்களை வேறு ஒருவர் பிடித்து அழைத்துச் செல்ல அனுமதிக்க வேண்டும். கூர்மையாக்குவது வலி தரும், ஆனால் அப்போது தான் அதனுள் இருக்கும் லெட் வெளிப்படும். தவறு செய்யும் போது, அதைத் திருத்தி கொள்ள ஒரு அழிப்பான் உதவுகிறது. நீங்கள் தோற்று ஒரு உடைந்த பென்சில் போல இருக்கும் போது, சந்தர்ப்பத்துக்கு நன்றி சொல்லுங்கள், ஏனென்றால் ஒரு உடைந்த பென்சில் கொண்டு இரு பக்கமும் எழுத முடியும். ஒரு ஃபீனிக்ஸ் போல எழுந்திருங்கள் மற்றும் உங்கள் தோல்விகளிலிருந்து கற்றுக் கொள்ளுங்கள். கரடுமுரடோ அல்லது மென்மையானதோ, எந்த மேற்பரப்பு, உங்களுக்கு பழகி இருந்தாலும் ஒரு குறியீட்டை ஏற்படுத்தவேண்டும் என்பதை உறுதி செய்யுங்கள்,'' என்று அவர் கூறினார்.

இங்கிலாந்தில் இருந்த வந்திருந்த TRF ட்ரஸ்ட்டி மைக் வேப்ப், மாவட்ட



RIDEs *பரத் பாண்டியா மற்றும் கமல் சங்வி.*

கணக்கில் உபயோகப்படுத்தாமல் இருக்கும் அதிகபட்சமான DDF பற்றிச் சொல்லி DGE களின் கவனத்தைப் ஈர்த்தார். டாலர் 3 மில்லியன் உபயோகிக்காத வரவு மற்றும் இந்த ஆண்டின் வரவு டாலர் 4.5 மில்லியனையும் சேர்த்து சுமார் 7.5 மில்லியன் டாலர்கள் இந்த மூன்று மண்டல DGEகளுக்கு இருக்கிறது. உங்கள் மாவட்டதிற்கு ஒதுக்கியுள்ள DDFஐ பயன்படுத்தி நல்லது செய்யுங்கள். நான் எனது வருடத்தை ஆரம்பத்தில் இருந்ததை விட அதிக DDF உடன் முடித்தேன் என்று சொல்லுவது ஒரு பெருமையான விஷயம் அல்ல, என்றார்.

மேலும், "இந்த மண்டலங்களில் இருக்கும் 30% சங்கங்கள் இன்னும் TRFக்கு நிதியளிக்கவில்லை என்று சுட்டிக் காட்டினார். நான் ஒவ்வொரு கவர்னருக்கும் ஒரு சவால் விடுகிறேன், எல்லா சங்கங்களும் நிதியளிப்பதை உறுதி செய்யுங்கள், ஒரு சங்கம் 100 டாலர்கள் கொடுத்தாலும், அது கொடுக்காமல் இருப்பதை விட மேல்," என்றார்.

கொரியாவில் இருந்த வந்த RI டைரக்டர் இன-சூ முன், உறுப்பினர் வளர்ச்சி மற்றும் தக்கவைப்பு பற்றி பேசினார். PRIP ராஜேந்திர K சாபு, தான் RI தலைவராக இருந்தபோது ஒரு உறுப்பினர் சொன்ன கருத்தை நினைவு கூர்ந்தார், "அவர் என்னிடம் "தலைவர் அவர்களே நீங்கள் ரோட்டரிக்கு தலைவர் இல்லை, நீங்கள் இந்த மக்களுக்கு தலைவர்' அது தான் எனக்குக் கிடைத்த பாராட்டுகளில் சிறந்தது." என்றார்.■

புகைப்படங்கள்: K விஸ்வநாதன்

---

## KEM மருத்துவமனைக்கு உபகரணங்களை வழங்கிய ரோட்டரி

ரோட்டரி செய்தி குழு

ஒரு கோடி ரூபாய் செலவில் இரைப்பை குடலியல் துறையை மேம்படுத்தும் குளோபல் கிராண்ட் திட்டத்தை செயல்படுத்தியதன் மூலம் RC மும்பை மலபார் ஹில், D 3141, KEM மருத்துவமனைக்கு ரிகவரி அறையுடன் கூடிய மாடுலர் எண்டோஸ்கோபி கூடங்கள் மற்றும் இரண்டு முக்கிய சாதனங்கள்-பல்நோக்கு மானிட்டர் மற்றும் மூச்சு பகுப்பாய்வி ஆகிய மேம்பாடுகள் செய்துள்ளது. பல்நோக்கு மானிட்டர் நோயாளியின் முக்கிய அளவுருக்களை மிக கவனமாக கண்காணிக்கும் போது, மூச்சு பகுப்பாய் சுவாச அமைப்பில் ஹைட்ரஜன் மற்றும் மீத்தேன் அளவை அளவிட உதவுகிறது.

"இந்த கருவியின் மூலம், துல்லியமாக நோயை அறுதியிட முடியும்,'' என சங்கத்தின் முன்னாள் தலைவர் நிலேஷ் பர்ஃபீவாலா தெரிவித்தார்.



KEM *மருத்தவமனையில்* IPDG *பிரஃபுல் சர்மா, நிலேஷ் பர்ஃபிவாலா மற்றும் ரோட்டரியினர்.*

சராசரியாக ஒரு நாளில் 6,500 நோயாளிகள் KEM மருத்துவ மனைக்கு வருகிறார்கள், மற்றும் இரைப்பை குடலியல் துறைக்கு ஆண்டு ஒன்றுக்கு 20,000 நோயாளிகள் வருகிறார்கள்.

இந்த திட்டத்தை செயல்படுத்த, இந்த சங்கம் கனடாவில் RC சாஸ்கடூன், D 5550, உடன் கைகோர்த்தது. IPDG பிரஃபுல் சர்மா, KEM மருத்துவமனை இயக்குனர் அவினாஷ் சுபேயோடு இணைந்து, ரொட்டேரியன்கள் மற்றும் மருத்துவர்கள் முன்னிலையில், புதிய வசதிகளை திறந்து வைத்தார்.■

**ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தா செலுத்தும் வழிகள்:**

*இப்போது நீங்கள்* **ரோட்டரி நியூஸ் ஆண்டு சந்தாவை** *ஆன்லைன் மூலமும் செலுத்தலாம். எங்கள் வங்கி விவரம்:*

| | | |
|---|---|---|
| Bank | : | HDFC Bank<br>SB Account |
| Branch | : | Egmore, Chennai |
| A/c Name | : | Rotary News Trust |
| A/c No. | : | 50100213133460 |
| IFSC Code | : | HDFC0003820 |

*ஆன்லைனில் பணம் செலுத்தியப் பின், உங்கள் சங்கப்பெயர், சங்கத் தலைவர்/செயலாளர் பெயர், பணம் செலுத்திய தேதி, எவ்வளவு செலுத்தினீர்கள் மற்றும் UTR எண் இவற்றை மறக்காமல் எங்களுக்கு இமெயில் செய்து விடுங்கள்.*

*சந்தாவை உங்கள் வங்கியில் காசோலை அல்லது ரொக்கமாக கட்டினால் உங்கள் சங்கப் பெயரை மட்டும் அங்கு குறிப்பிடுங்கள். “Rotary club of” என்பதை தவிர்க்கவும்.*

**RI Exchange Rate - November 2018**

**$1 = ₹73**

**Rotary**

## Rotary at a glance

| | | |
|---|---|---|
| Rotarians | : | 1,217,763 |
| Clubs | : | 35,825 |
| Districts | : | 538 |
| *Rotaractors | : | 208,541 |
| Clubs | : | 9,067 |
| *Interactors | : | 531,990 |
| Clubs | : | 23,130 |
| *RCC members | : | 229,287 |
| RCC | : | 9,969 |

**Estimated*

## Membership Summary

As on October 1, 2018

| RI District | Rotary Clubs | No of Rotarians | Women Rotarians | Rotaract Clubs | Interact Clubs | RCC |
|---|---|---|---|---|---|---|
| 2981 | 114 | 4,759 | 221 | 33 | 231 | 177 |
| 2982 | 69 | 3,135 | 154 | 62 | 113 | 51 |
| 3000 | 128 | 5,221 | 463 | 219 | 672 | 195 |
| 3011 | 81 | 3,501 | 748 | 46 | 112 | 25 |
| 3012 | 87 | 3,604 | 756 | 41 | 130 | 56 |
| 3020 | 78 | 4,064 | 232 | 39 | 466 | 349 |
| 3030 | 90 | 4,871 | 593 | 65 | 310 | 165 |
| 3040 | 97 | 2,161 | 239 | 30 | 124 | 140 |
| 3053 | 71 | 3,063 | 554 | 9 | 56 | 95 |
| 3054 | 130 | 6,078 | 1,043 | 71 | 321 | 470 |
| 3060 | 101 | 4,290 | 531 | 59 | 125 | 138 |
| 3070 | 103 | 3,096 | 314 | 42 | 161 | 57 |
| 3080 | 79 | 3,318 | 260 | 63 | 218 | 108 |
| 3090 | 76 | 1,982 | 50 | 27 | 37 | 122 |
| 3100 | 75 | 1,804 | 94 | 7 | 75 | 146 |
| 3110 | 116 | 3,926 | 347 | 23 | 49 | 104 |
| 3120 | 75 | 3,299 | 408 | 19 | 62 | 52 |
| 3131 | 130 | 5,448 | 1,205 | 80 | 294 | 90 |
| 3132 | 99 | 3,772 | 367 | 37 | 213 | 150 |
| 3141 | 91 | 5,448 | 1,251 | 104 | 258 | 84 |
| 3142 | 94 | 3,434 | 621 | 67 | 203 | 65 |
| 3150 | 98 | 3,598 | 347 | 51 | 235 | 109 |
| 3160 | 71 | 2,439 | 128 | 19 | 48 | 81 |
| 3170 | 125 | 5,562 | 563 | 48 | 317 | 161 |
| 3181 | 74 | 3,310 | 281 | 28 | 216 | 108 |
| 3182 | 84 | 3,227 | 231 | 19 | 275 | 95 |
| 3190 | 131 | 5,048 | 661 | 111 | 362 | 51 |
| 3201 | 141 | 5,309 | 332 | 89 | 133 | 49 |
| 3202 | 130 | 5,006 | 258 | 68 | 437 | 46 |
| 3211 | 139 | 4,473 | 289 | 6 | 89 | 124 |
| 3212 | 99 | 4,167 | 377 | 86 | 280 | 142 |
| 3231 | 78 | 3,266 | 267 | 35 | 204 | 239 |
| 3232 | 113 | 4,667 | 717 | 107 | 325 | 80 |
| 3240 | 88 | 3,054 | 353 | 34 | 151 | 156 |
| 3250 | 101 | 3,967 | 700 | 47 | 210 | 183 |
| 3261 | 71 | 2,609 | 348 | 3 | 102 | 43 |
| 3262 | 90 | 3,444 | 432 | 37 | 73 | 75 |
| 3291 | 146 | 3,738 | 702 | 82 | 134 | 599 |
| **India Total** | **3,763** | **147,158** | **17,437** | **2,013** | **7,821** | **5,180** |
| 3220 | 67 | 1,921 | 260 | 74 | 202 | 72 |
| 3271 | 83 | 1,500 | 265 | 46 | 17 | 13 |
| 3272 | 162 | 2,875 | 412 | 41 | 37 | 38 |
| 3281 | 206 | 5,657 | 825 | 193 | 93 | 188 |
| 3282 | 143 | 4,084 | 446 | 98 | 48 | 41 |
| 3292 | 119 | 4,570 | 686 | 119 | 121 | 109 |
| **S Asia Total** | **4,543** | **167,765** | **20,331** | **2,584** | **8,339** | **5,641** |

*Source: RI South Asia Office*

# மாநாட்டில் தென்னிந்திய பாரம்பரியம்



6



5















RID C பாஸ்கர், PDGs தீபக் போஃபலே, டேவிட் ஹில்டன் மற்றும் சுபாஷ் குல்கர்னியுடன்.

RID C பாஸ்கருடன், மனைவி மாலா, மகன்கள் கௌதம், கோகுல் மற்றும் மருமகள் தவ்யாவுடன்.

DG ஆஷிஸ் கங்கூலி, Rtn. அபய் கீட், PDG அத்துல் கார்கவா, RIDE பரத் பாண்டியா, PDG TN சுப்ரமணியன் மற்றும் S பன்சீதர் துரந்தார்.

எஸ்தர் ரஸ்ஸின் மற்றும் அலிஸன் வெப்.

PRIP ராஜேந்திர சாபூ மற்றும் எஸ்தர் ரஸ்ஸின்.

RIDE C பாஸ்கர், RI தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர், மாலா மற்றும் PDG நடராஜன் நாகோஜி.

படம்: ரஷீதா பகத், வடிவமைப்பு: கிருஷ்ணமூர்த்தி




RI தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் எஸ்தர்.





PRIP ராஜேந்திர சாபூ மற்றும் உஷா.



RIDE கமல் சங்வி மற்றும் சோனல்



RID C பாஸ்கர் மற்றும் மாலா.



PRID மனோஜ் தேசாய், ஷர்மிஷ்டா, ஹ்யூன் ஜூயாங் மற்றும் RID இயூன்-சூ மூன்.




மாநாட்டின் தலைவர் ISAK நாசர் மற்றும் RID C. பாஸ்கர்.



RIDE பரத் பாண்டியா.





PRIP KR ரவீந்திரன் மற்றும் வானதி.





PRID சேகர் மேத்தா மற்றும் ராஷி.



PDG ISAK நாசர் மற்றும் அஃபசலுன்னிசா.





TRF அறங்காவலர் மைக் வெப் மற்றும் அலிசன்.



PRID PT பிரபாகர் மற்றும் நளினி.





PRID YP தாஸ் மற்றும் மஞ்சு.



PRID அசோக் மகாஜன் மற்றும் நயன்தாரா.



PRID பாண்டுரங்க செட்டி.



TRF அறங்காவலர் குலாம் வஹன்வதியுடன்
RID C பாஸ்கர்.

படம் : ரஷீதா பகத் வடிவமைப்பு : கிருஷ்ணமூர்த்தி




PRID PT *பிரபாகர் மற்றும் அவர் மனைவி நளினி,* RIPN *சுஷில் குப்தா மற்றும் வினிதாவிற்கு திருப்பதி வெங்கடாசலபதி படம் அளிக்கின்றனர். மாநாட்டின் தலைவர்* ISAK *நாசர்,* RID C *பாஸ்கர்,* RI *தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர் மற்றும் மாலாவும் உள்ளனர்.*

# அதிரடி பாய்ச்சலுக்கு இந்திய ரோட்டரி தயார்

ரஷீதா பகத்

உலகத்தின் நிரந்தர அமைதிக்காக மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்வது என்ற நமது உறுதிப்பாட்டில் ரோட்டரி அதிரடிப் பாய்ச்சலுக்குத் தயாராக உள்ளது. பெங்களூருவைச் சேர்ந்த தனி நபரான D. ரவிசங்கர் ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு ரூ.100 கோடி மிக மிக தாராள மனத்துடன் அளித்திருப்பதே அதைக் காட்டுகிறது என்று ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக நியமிக்கப்பட்டுள்ள சுசீல் குமார் குப்தா கூறினார். அவரது மாவட்ட அமைப்புகளான 3011வது மட்டும் 3012வது மாவட்ட அமைப்புகளிலும் சென்னை மண்டல இன்ஸ்டிட்யூட் நடத்தப்பட்ட பாராட்டு நிகழ்ச்சிகளில் தனது நினைவுகளைப் பகிர்ந்து கொண்டபோது இவ்வாறு அவர் குறிப்பிட்டார்.

குப்தாவின் தந்தைக்கு நைனிடால், மசூரி ஆகிய இமயமலைப் பகுதிகளுக்குச் செல்வது பிடிக்கும். ஒரு முறை சிறுவனாக இருந்தபோது குப்தா அவருடன் சென்றிருக்கிறார். அப்படிச் சென்றபோது ஓரிடத்தில் இங்கே ரோட்டரி கூட்டம் நடைபெறுகிறது என்ற பெயர்ப் பலகையைப் பார்த்தார் குப்தா. ரோட்டரி சங்கம் குறித்து அப்போது அவருக்கு எதுவுமே தெரியாது. எனினும், கண்ணில் பட்ட அந்த போர்டு புகைப்படத்தைப் போல அவர் மனத்தில் பதிந்துவிட்டது. அதன் பிறகு அதன் மீது ஆர்வம் தோன்றியது. வளர்ந்த பிறகு, ரோட்டரியில் சேருவேன் என்று முடிவு செய்துகொண்டார்.

1977ம் ஆண்டு அவரது கனவு நனவானது. தில்லி மத்திய மேற்கு ரோட்டரி சங்கத்தில் இணைந்தார். 1981ம் ஆண்டு அதன் தலைவராகப் பொறுப்பேற்றார்.

இதனிடையில் விருந்தோம்பல் வர்த்தகத்தில் ஈடுபட்டேன். தில்லியில் ஒரு ஹோட்டல் கட்டும் மிகப் பெரிய வேலையை ஏற்றேன். அது ஒன்றும் சாதாரண காரியமல்ல. ஒவ்வொரு கட்டத்திலும் ஏகப்பட்ட தடைகளை




எதிர்கொண்டேன். அப்போதுதான் ரோட்டரியின் அற்புத சக்தியைக் கண்டேன். அது மட்டுமல்ல, நான் சார்ந்த ரோட்டரி மாவட்டத்தின் மூத்த தலைவர்களான ரோட்டரி இன்டர்நேஷனல் முன்னாள் தலைவர்கள் மனோகர்லால் மன்சந்தா, சுதர்சன் அகர்வால் ஆகியோரின் வழிகாட்டுதல்களைப் பெற்றேன். அவர்கள்தான் என்னைக் கைப்பிடித்து தடைகளைக் கடந்து புதிய பாதையில் பயணிக்க உதவியவர்கள் என்றார் சுசீல் குப்தா.

இந்தியாவில் எதுவும் தானாக நடப்பதில்லை என்பது எல்லோருக்கும் தெரியும். ஒவ்வொரு கட்டத்திலும் ஏதாவது தடை வரும். அப்போது, யாருடைய செல்வாக்காவது, அதிகாரமாவது தேவைப்படும். அப்படித்தான் எனது ஹோட்டலை 30 மாதங்களில் கட்டி முடிக்க முடிந்தது. அப்படித்தான் ஹயாத் ரீகன்ஸி தில்லியில் திறக்கப்பட்டது. அப்போது ரோட்டரி உறுப்பினர்கள் பலர் உதவினர். ரோட்டரியின் மாயாஜாலத்தை எப்போதும் காண்கிறேன். ரோட்டரியால் எப்படி பலன் கிடைக்கிறது என்பதையும் அறிந்தேன் என்றார் குப்தா.

### புதிய அத்தியாயம்

1985ம் ஆண்டு குப்தா தில்லி, NCR ஆகியவற்றை உள்ளடக்கிய (D 301) மாவட்டத்தின் மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அதையடுத்து இந்திய, உலக அளவிலான ரோட்டரி அமைப்புகளுடன் தொடர்பு ஏற்பட்டு, புதிய அத்தியாயம் தொடங்கியது.

ரோட்டரி போலியோ ஒழிப்பு பணிக் குழுவின் துணைத் தலைவராக 1988ம் ஆண்டு பொறுப்பேற்றது வரையில் ரோட்டரி என்பது சக மனிதர்கள், நண்பர்களுடன் பழகும் அமைப்பாகவே கருதிவந்தேன். புதிய பொறுப்பு எனது பார்வையையே மாற்றிவிட்டது. அப்போதுதான் ரோட்டரி என்பது சக மனிதர்களுடன் பழகுவதற்கான அமைப்பல்ல, மனித சமுதாயத்திற்குச் சேவை புரிவதற்கான அமைப்பு என்பதை உணர்ந்தேன்.

போலியோ ஒழிப்பு குறித்த முறையைக் கற்றுத் தருவது ரோட்டரி உறுப்பினர்களைத் திரட்டுவது ஆகியவற்றை மேற்கொண்டேன். அப்போதுதான், மக்களுக்குக் குடிநீர் வசதியை அமைத்தல், பாதிக்கப்பட்டோரின் இதய அறுவைச் சிகிச்சை ஆகியவற்றுக்கு உதவுவது போன்ற சேவைத் திட்டங்களை மேற்கொள்ளும் நிலை எனக்கு ஏற்பட்டது. ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் இயக்குநராகப் பொறுப்பேற்கும் முன்பு ஹிமாலயன் சுற்றுச்சூழல் அறக்கட்டளையில் இணைந்தேன். அப்போதுதான் சுற்றுச்சூழலைக் காப்பது எவ்வளவு அதி முக்கியம் என்பதையும் குறிப்பாக தண்ணீரின் முக்கியத்துவத்தையும் உணரும் புதிய பார்வை எனக்கு ஏற்பட்டது. அதையடுத்து நான் சுற்றுச் சூழலியலாளன் ஆனேன். தண்ணீர் பாதுகாப்பு ஆர்வலராகவும் மாறினேன்.

இந்த ஆர்வம் ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலராக இருந்தபோது எனக்கு பள்ளியில் கைகழுவு திட்டத்தின் உலகத் தலைமை (Global Chair for WinS) பொறுப்பு கிடைத்தது. அதையடுத்து குடிநீர் சேமிப்பு பணியில் அதிக ஆர்வம் ஏற்பட்டது. தண்ணீர் கிடைப்பது எப்படி மக்களின் வாழ்க்கையையே மாற்றிவிட்டது என்பதை அப்போதுதான் பார்த்தேன் என்றார் குப்தா.

அந்தப் பயணம் தொடர்ந்தது. ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் பதவிக் காலத்தை கடந்த ஆண்டு சுசீல் குப்தா நிறைவு செய்தார். தற்போது ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராகப் பொறுப்பேற்க இருக்கிறார். இது ரோட்டரி இந்தியாவுக்கும் நமது மண்டலங்களுக்கும் மிகப் பெரிய அங்கீகாரம். ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் தலைவராகப் பொறுப்பேற்ற முதல் இந்தியர் நிதீஷ் லஹிரி. அவர் 1960ம் ஆண்டுகளில் இருந்தார். அதையடுத்து ராஜேந்திரா K. சாபூ 1991-92 ஆண்டிலும் கல்யாண் பானர்ஜி 2011-12ம் ஆண்டிலும் இருந்தனர். தற்போது, ‘பஞ்சாப் புதல்வர்’ ஆகிய எனக்கு (சுசீல் குப்தா) வாய்ப்பு கிடைத்துள்ளது.

ரோட்டரி கடந்த நீண்ட பயணத்தை மேற்கொண்டுள்ளது. பல ஆண்டுகளாக நிறைய மாற்றங்களைக் கண்டிருக்கிறது. ரோட்டரி ஃபவுண்டேஷனிலும் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. நமது சேவைத் திட்டங்கள், மருத்துவமனை, சுகாதாரத் திட்டங்கள், எழுத்தறிவு, பள்ளியில் கைகழுவு திட்டங்கள் (WinS programmes), போலியோ ஒழிப்புத் திட்டம் ஆகிய மிகப் பெரிய பணிகளில் நீங்கள் அனைவரும் மேற்கொண்டு வருகிறீர்கள்.

எனது சாதனைகள், பணிகளை என் பெற்றோருக்கு அர்ப்பணிக்கிறேன். அவர்கள்தான் மிகப் பெரிய இலக்கை நோக்கிச் செல்வதற்கான விழுமியங்களை, துணிவையும்

*அவரது மிகப் பெரிய குணம், ஏதாவது முயற்சி செய்யட்டுமா என்று கேட்டால், புன்னகையுடன் ‘ஏன் கூடாது?’ என்று கூறி ஊக்கமளிப்பார்.*

RI *இயக்குனர்* C *பாஸ்கர்*



*RIPN சுஷில் குப்தா மற்றும் வினிதாவிற்கு பூ மாலை. PRID அஷோக் மகாஜன், நயன்தாரா, நளினி, TRF அறங்காவலர் குலாம் வஹன்வதி, PRID PT பிரபாகர், PRIP KR ரவீந்திரன், RID C பாஸ்கர், RI தலைவர் பாரி ரஸ்ஸின், PDG N சுப்ரமணியன், DGN முத்து பழநியப்பன், எஸ்தர், மாலா, TRF அறங்காவலர் மைக் வெப், அலிசன், உஷா, PRIP ராஜேந்திர சாபூ, RID யூன்-கு முன் மற்றும் அவர் மனைவி ஹியூன்-ஜீ யாங் அவர்களும் உள்ளனர்.*

### இலக்கு அழைத்தபோது

*RIPE சுசீல்குப்தா தில்லியிலும், சென்னை இன்ஸ்டிடியூட்டிலும் பாராட்டு விழாக்களில் பேசிய போது, ஜவஹர்லால் நேரு ஆற்றிய புகழ்மிக்க "விதியுடன் ஒரு போராட்டம்" (Tryst with Destiny) உரையை நினைவு கூர்ந்து பேசினார்.*

*உங்களில் எத்தனை பேருக்கு விதியின் மீது நம்பிக்கை இருக்கிறது? என்று கேள்வி எழுப்பியவர், மாவட்ட ஆளுநராகத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, 1985ம் ஆண்டு சர்வதேச சபையில் (International Assembly) பயிற்சி பெற்றதைக் குறிப்பிட்டார். பிறகு, வழக்கமான ரோட்டரி சங்கத்துக்காக ரோட்டரி தலைமையகம், சிக்காகோ ஆகிய இடங்களுக்கு மேற்கொண்ட பயணத்தை சுட்டிக் காட்டி, அப்போது RIP அலுவலகத்துக்குச் சென்றேன். இப்போது இவான்ஸ்டினில் இருப்பதைப் போல் பெரியது அல்ல. சாதாரண அறைதான். அங்கே தலைவர் இல்லை. என்னுடன் வந்த வழிகாட்டி, தலைவரின் இருக்கையைக் காட்டி, "சுசீல் உட்காருகிறீர்களா?" என்று கேட்டார். "பரவாயில்லை" என்று கூறினேன். தொடர்ந்து, "அதற்கான திறமையும் தகுதியும் வரும்போது உட்காருகிறேன்" என்றேன். அப்படி நான் பேசுவதற்கு எந்த சக்தி செய்ததோ? இப்போது விதி செய்து விட்டது என்றார்.*

எனக்குள் ஏற்படுத்தினர். என் மனைவி வினிதா மலையைப் போல் உறுதியாக என்னுடன் நிற்கிறார். என் மகனும் மருமகளும் "உங்கள் தொழிலை நாங்கள் பார்த்துக் கொள்கிறோம். கவலைப்படாதீர்கள்" என்று கூறுகிறார்கள். காரணம் ரோட்டரி இன்டர்நேஷனல் பணியினால், எனது தொழில், வர்த்தகத்தைப் பார்த்துக் கொள்வதாக உறுதி கூறுகிறார்கள். கடைசியாக எனக்கு பிராணிக் சிகிச்சை முறையைக் கற்றுத் தந்தவர்கள், இன்னும் தொடர்பில் இருந்து ஊக்கம் அளிப்பவர்கள் ஆகியோரை நன்றியுடன் குறிப்பிட வேண்டும் என்றார் குப்தா.

குப்தா தம்பதியினருக்காக சென்னை ரோட்டரி இன்ஸ்டிடியூட் சார்பில் திருப்பதி ஆலயத்தில் சிறப்பு அர்ச்சனை நடத்தப்பட்டு, பிரசாதங்கள் சென்னைக்கு அனுப்பப்பட்டன. அதனால் நெகிழ்ச்சி அடைந்த குப்தா, RID C பாஸ்கர், PRID PT பிரபாகர் ஆகியோருக்கு நன்றி கூறினார்.

> *இந்தப் பாராட்டு மழை என்னைத் திக்குமுக்காடச் செய்கிறது. நான் சாதாரணமானவனாகவே எண்ணுகிறேன்.*
>
> RIPN **சுஷில் குப்தா**

போலியோ ஒழிப்பு உள்பட ரோட்டரி எதிர்கொள்ளும் சவால்களைத் துணிவுடன் சமாளிப்பதற்கு இதுபோன்ற நிகழ்வுகள், தன்னம்பிக்கையும் அளிக்கின்றன என்றார்.

நாம், நமது சகாக்கள், RIP ரஸ்ஸின், தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள மார்க் மெலோனி போன்ற மூத்தவர்கள் உள்ளிட்ட அனைவருடன் இணைந்து ரோட்டரிதான் சேவை நிறுவனம் என்ற நிலையை உருவாக்குவோம் என்றார் சுசீல் குப்தா.

PRIP சாபூ குறித்துப் பேசியபோது நீங்கள் 1991ம் ஆண்டு ஐ.நா. சபையில் ஒற்றைக் கண் ஜப்பானிய பொம்மை படத்தை வரைந்துவிட்டு, 'உலகில் போலியோ முற்றிலுமாக ஒழிக்கப்பட்ட பிறகு இந்தப் பொம்மையின் இன்னொரு கண் வரையப்படும். அது குப்தாவின் (எனது) தலைமைக் காலத்தில் நிறைவேறும்' என்று குறிப்பிட்டீர்கள். அந்த இரண்டாவது கண்ணை வரையும் வாய்ப்பு எனக்குக் கிடைக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக் கொள்கிறேன் என்று சுசீல் குப்தா கூறினார்.

#### ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர்

RIPN குப்தாவைப் பாராட்டிப் பேசிய RID C பாஸ்கர், நான் இயக்குநராக இருக்கும்போது, இரு இந்தியர்கள் சாதனை நிகழ்த்துவது எனது அதிர்ஷ்டம். கடந்த ஜூலை 1ம்




தேதி பெங்களூருவைச் சேர்ந்த ரவிசங்கர் ரூ. 100 கோடியை ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு நன்கொடையாக அளித்தார். ஒரு மாதத்தில் ரோட்டரி இன்டர்நேஷனல் நியமனக் கமிட்டி பத்மஸ்ரீ சுசீல் குப்தாவை 2020-21ம் ஆண்டுக்கான தலைவராக நியமித்துள்ளது.

அவர் ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலராக இருந்தபோது, இணைந்து பணியாற்றினேன். அறிவிலும் அனுபவத்திலும் நான் அவருக்கு இணை இல்லை என்பது தெரியும். ஆனால், அவரது மிகப் பெரிய குணம், ஏதாவது முயற்சி செய்யட்டுமா என்று கேட்டால்,




*RI தலைவர் பாரி ரஸ்ஸினும் எஸ்தரும் RIPN சுஷில் குப்தா மற்றும் வினிதாவை வாழ்த்துகின்றனர்.*

## குருவித் தலையில் பனங்காய்!

*பயிற்சி, வழிகாட்டுதல்களை அறிந்து கொள்ள RI தலைமையகம் உள்ள இவான்ஸ்டனுக்கு சுசீல் குப்தாவும் அவரது மனைவி வினிதாவும் சென்று திரும்பியதும் நேராக சென்னை மண்டல இன்ஸ்டிட்யூடுக்கு வந்தனர். அவர்களுக்கு அங்கு அளிக்கப்பட்ட பாராட்டு விழா தான் குப்தா நியமனம் ஏற்றபின் கலந்து கொள்ளும் முதல் நிகழ்ச்சியாகும்.*

*இந்தப் பாராட்டு மழை என்னைத் திக்குமுக்காடச் செய்கிறது. பயிற்சி முடித்து நேராக இங்கே தான் வருகிறோம். கடந்த ஐந்து நாட்கள் முழுமையாக எங்களுக்குப் பலவித தகவல்கள், அளித்தனர்.*

*RI அலுவலகத்தில் ஒவ்வொருவரும் என்னிடம் குருவி தலையில் பனங்காய் வைத்திருப்பது போல் உங்களுக்கு ஏராளமான பணிகள் இருக்கின்றன என்று சொன்னார்கள். (ஆங்கிலத்தில் இதையே Drinking from a firehose என்று குறிப்பிட்டார்கள்). அதைப் போல பல பணிகள் பூர்த்தியாகவில்லை. ஓரிரு பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. நமக்கு இரண்டு ஆண்டு 9 மாத அவகாசம் இருக்கிறது. அதே சமயம் இப்போதைய RI தலைவர் பார்ரி ரஸ்ஸினையும் அவரது மனைவி எஸ்தரையும் பார்த்தேன். அவர்கள் இத்தனை பணிகளுக்கும் இடையில், உற்சாகமாக, குதூகலமாக இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்தபிறகு நாமும் சாதிக்கலாம் என்று தெம்பும், உற்சாகமும் ஏற்பட்டது என்றார் சுசீல் குப்தா.*




*தில்லியில் RIPN சுஷில் குப்தா மற்றும் வினிதாவிற்கு பாராட்டு விழா. PRIDs PT பிரபாகர், சேகர் மேத்தா, TRF அறங்காவலர் குலாம் வஹனவதி, PRIP ராஜேந்திர சாபூ, மாலா, RID C பாஸ்கர் மற்றும் PRIP கல்யாண் பானர்ஜீ அவர்களும் உள்ளனர்.*

புன்னகையுடன் 'ஏன் கூடாது?' என்று கூறி ஊக்கமளிப்பார். அந்த உற்சாகமே தனிதான்! என்றார்.

RID C பாஸ்கர் தொடர்ந்து பேசுகையில், குப்தாவுடன் கடந்த ஜூன் மாதம் ரோட்டரி நன்கொடை குறித்துப் பேசினேன். 'ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு நிதி அளிப்பதில் இரண்டாவது இடத்தில் இருந்த இந்தியா மீண்டும் அதே இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளுமா என்ற சந்தேகம் உள்ளது' என்றேன். அதற்கு குப்தா, 'அதற்கு எவ்வளவு நன்கொடை அளிக்க வேண்டும்?' என்று கேட்டார். நான், '1.6 கோடி டாலர் அளிக்கவேண்டும்' என்றேன். அப்போது உடனே 'கவலைப்படாதீர்கள். மீண்டும் அதே மாதிரி இரண்டாவது பெரிய நன்கொடையாளராக நாம் இருப்போம் நம்புங்கள்' என்றார். எனக்கு அவ்வளவு நம்பிக்கை இல்லை. ஆனால், நாம் 1.9 கோடி டாலர் திரட்டினோம். இந்திய ரோட்டரியினரின் பணியை அவர் எப்படி கணித்து வைத்திருக்கிறார் என்பதை இது காட்டுகிறது.

குப்தா D3000 நிகழ்ச்சிக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன் சென்றிருந்தார். அப்போது மாவட்ட ஆளுநராக இருந்த R தீனசந்திரன். அவரை மதுரை மீனாட்சி அம்மன் ஆலயத்திற்கு அழைத்துச் சென்றார். அதன் பின் நகரில் பல இடங்களில் குப்பைகள் தென்பட்டதைப் பார்த்த அவர், 'நம் ரோட்டரி சங்கம் இந்தக் குப்பைகளை அகற்றி ஏன் சுத்தப்படுத்தக் கூடாது? ரோட்டரி சங்கம் இந்த நகரை சுத்தப்படுத்தி ஆலயத்தை அழகுபடுத்தும் என்று காட்டுவோம்' என்று கூறினார். அதையடுத்து, மதுரை மெட்ரோ ரோட்டரி சங்கம் தூய்மைப் பணியை மேற்கொண்டு, ஒரே மாதத்தில் நகரைப் பளிச்சென்று மாற்றியது. அதன்பின் 3000வது மாவட்டம் 2 லட்சம் டாலர் திரட்டி ரோட்டரி ஃபவுண்டேஷனுக்கு அளித்துள்ளது. ஆனால், 5 லட்சம் டாலர் திரட்டி தந்திருக்க வேண்டும் என்று குப்தா கூறினார். இப்போது மாவட்ட ஆளுநரின் தலைமையில் 5.72 லட்சம் டாலர் திரட்டி சாதனை படைத்துள்ளோம்.

நம் கையெழுத்து ஆட்டோகிராப் ஆனால், அது சாதனை என்று டாக்டர் அப்துல் கலாம் கூறியுள்ளார். இப்போது நமது கையெழுத்துகள் ஆட்டோகிராப்களாக மாறியுள்ளன இவ்வாறு பாஸ்கர் பேசினார்.

சுசீல் குப்தாவைப் பாராட்டிப் பேசிய ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் குலாம் வாஹன்வதி குப்தா தனக்கு செய்த 'பிராணிக்' சிகிச்சை முறையால் பலன் கிடைத்ததாகக் குறிப்பிட்டார். அவர் சிகிச்சை செய்தபோது அவரது முகம் வியர்த்தது. அதை மறக்கவே முடியாது என்று கூறினார். குப்தாவின் அறிவாற்றல், பல்வேறு துறைகளில் அவர் காட்டும் ஆர்வம் ஆகியவற்றைப் புகழ்ந்தார்.

குப்தா அவர்களே, உங்களது அறிவாற்றல், மனிதமனம் ஆகியவற்றுடன் செயல்படும் பணியினால், 2020-21ம் ஆண்டு ரோட்டரிக்குப் பொற்காலமாகத் திகழும் என்றார் வாஹன்வதி.

சக மாவட்ட முன்னாள் ஆளுநர் ராமகிருஷ்ண ராஜா குப்தாவை அறிமுகம் செய்து பேசினார். மாவட்ட முன்னாள் ஆளுநர் வினோத் பன்சால், மாவட்ட ஆளுநர்கள் சுபாஷ் ஜெயின் (D 3012), விநய் பாட்டியா (D 3011) ஆகியோர் பாராட்டிப் பேசினர்.■

# சென்னை மண்டல மாநாட்டில் கலகலப்பான தருணங்கள்

ரஷீதா பகத்

சென்னை மண்டல மாநாட்டில் நடத்திய பயிற்சி அமர்வுகள், முக்கியமான கூட்டங்களுக்கு இடையில் சுவையான நிகழ்வுகளும் காட்சிகளும் இடம்பெற்றன.

**ஜொலிக்கும் மலர்கள்!**

RI தலைவர் பாரி ரஸ்ஸினும் அவரது மனைவி எஸ்தரும் உற்சாகமாக வரவேற்கப்பட்டனர். அதையடுத்து, பிரம்மாண்டமான ரோஜா மாலை ரஸ்ஸினுக்குச் சூட்டப்பட்டது.

நிகழ்ச்சியைத் தொடங்கிவைத்த ரஸ்ஸின், ''இயக்குநர் பாஸ்கர்! பத்து ஆண்டுகளாக எஸ்தருக்கு நான் கொடுத்த மலர்களை விட ஏராளமான மலர்களை நீங்கள் எனக்குக் கொடுத்திருக்கிறீர்கள்,'' என்று நகைச்சுவையாகக் குறிப்பிட்டார்.

நீங்கள் வலுவான வியப்புக்குரிய மண்டலங்களின் குழுக்களைக் கொண்டிருக்கிறீர்கள். உங்களது தலைமையைப் போற்றுங்கள் என்று கூறினார். நான் மாவட்ட ஆளுநராக இருந்தபோது எனது தலைவராக ராஜா சாபூ இருந்தார். அப்போதுதான் முதல் முறையாக எளிமையான, அதே சமயம் வலுவான ஆற்றல் மிக்க தலைமையைப் பார்த்தேன்.

அதையடுத்து, ஃபவுண்டேஷன் அறங்காவல் குழுவின் தலைவராக கல்யாண் பானர்ஜி இருந்தபோது சில காலம் பணியாற்றினேன். அவர் செயலில் முனைப்போடு ஈடுபடுவதைக் கண்டேன். அதையடுத்து, KR ரவீந்திரன், அவரது மனைவி வானதியுடன் பணியாற்றும் வாய்ப்பு கிடைத்தது. எனது வேகத்தை இருமடங்காக உயர்த்த வேண்டியிருந்தது.

சுசீல் குப்தா தலைமை ஏற்கப் போகிறார். அவருடன் நிதிக் குழுவில் அமர்ந்து பணியாற்றியுள்ளேன். நீங்கள் ஒரு சிறந்த தலைவரைப் பெறப் போகிறீர்கள் என்பது உறுதி. ரோட்டரி இன்டர்நேஷனல் இயக்குநர் இருக்கிறார். முன்னாள், இந்நாள், வருங்கால இயக்குநர்கள் உள்ளனர். வலுவான தலைமையைப் பெற்றிருக்கிறீர்கள். அவர்களிடம் கற்றுக் கொள்ளவேண்டும். உங்களது மண்டலங்களில் இத்தகைய சேவையை அளிக்கும் உங்களுக்கு நன்றி கூறுகிறேன்.

**ரவிசங்கரின் உரை**

நிகழ்ச்சியில் அனைவரது கவனத்துக் கும் ஆளானவர் ரூ.100 கோடியை TRFக்கு வாரி வழங்கிய பெங்களூரைச் சேர்ந்த D ரவிசங்கர்.

தன்னை ஓர் அரைகுறை ரோட்டேரியன் என்றே வருணித்துக் கொண்டார் அவர். மாவட்ட ஆளுநர் சுரேஷ் ஹரி பங்கேற்ற கேள்வி - பதில் நிகழ்ச்சியின்போது, ரோட்டரியில் சில சமயங்களில் பகட்டு இருப்பதைச் சுட்டிக் காட்டினார்.

சில சமயம் மாவட்ட ஆளுநர்கள் பொறுப்பேற்ற நிகழ்வுகளில் அவர்கள் யானை மீது அமர்ந்தபடி ரோட்டரி கூட்டத்திற்கு வருவது, ஹெலிகாப்டரில் இருந்து பூமழை பொழிவது போன்றவை நடந்துள்ளன. ''தனக்கு மேலானது சேவை'' (service above self) என்று ரோட்டரியின் குறிக்கோள் இருக்கும்போது, இப்படியெல்லாம் நடப்பது வியப்பாக இருக்கிறது. அந்தக் குறிக்கோள் எங்கே போனது? என்று சிறிது அதிருப்தியுடன் கூறினார் ரவிசங்கர்.

**நன்கொடைக்காக புதிய பென்ஸ் கார் ஏலம்**

இன்னொரு அசத்தலான அறிவிப்பை வெளியிட்டு ரவிசங்கர் அனைவரையும் திகைக்கச் செய்தார்.

தன்னிடம் உள்ள புதிய மெர்சிடஸ் பென்ஸ் கார் மிகவும் குறைவாகவே பயன்படுத்தப்பட்டது என்று கூறிய அவர், மனைவி பவோலா கேட்டுக் கொண்டதற்கிணங்க அந்தக் காரை சில காலம் முன்பு வாங்கியதாகக் கூறினார். அழகான அந்த கார் 3000 கி.மீ. தான் ஓடியிருப்பதாகவும் கூறினார்.

மனைவியின் அனுமதி யோடு புதிய பென்ஸ் காரை ஏலத்துக்கு விடுகிறேன். அதில் கிடைக்கும் தொகை TRFக்கு நன்கொடையாக அளிக்கப்படும் என்று அறிவித்து அனைவரையும் வியப்படையச் செய்தார் ரவிசங்கர்.

பெண்களுக்காக ரவிசங்கர் சுவையான அறிவுரையைக் கூறினார்:

கணவன்மார் ஏதாவது நல்லது செய்ய முன்வந்தால், அதை மனைவிமார் தடுத்து விடுகிறார்கள். இங்குள்ள பெண்கள் உங்களது கணவன்மார் சமுதாயத்திற்கு ஏதாவது நல்ல காரியம் செய்ய முன் வந்தால், தயவு செய்து தடுக்காதீர்கள் என்று வேண்டுகிறேன் என்றார்.■



RI *தலைவர் பாரி ரஸ்ஸின்.*

# TRFன் கொடையாள



RC பெங்களூர் ஆர்ச்சர்ட்ஸ் தலைவர் D ரவி சங்கர் மனைவி பவோலா உடன்.





வானதி, PRIPs KR ரவீந்திரன், ராஜேந்திர சாபூ, RIDE கமல் சங்வி மற்றும் சோனல் சங்வி.



RIDE பரத் பாண்டியா Rtn. ரவி சங்கருக்கு 'காந்தி பின்' தைக்கிறார். பாவோலா மற்றும் DG சுரேஷ் ஹரியும் உடன் உள்ளனர்.

# ர்களை கௌரவித்தல்



மாநாட்டின் தலைவர் ISAK நாசர் TRF அறங்காவலர் குலாம் வஹன்வதியை வரவேற்கிறார். PDG JB காமதார், மாலா பாஸ்கர், PDG ஜான் டேனியல் மற்றும் அவர் மனைவி மீரா ஆகியோரும் உள்ளனர்.





எஸ்தர் ரஸ்ஸின், மாலா மற்றும் RID C பாஸ்கர்.



TRF அறங்கவலர் குலாம் வஹன்வதி, RI தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர், DG ராஜீவ் சர்மா, TRF அறங்காவலர் மைக் வெப் மற்றும் அலிசன்.



ராஷி மற்றும் PRID சேகர் மேத்தா, PRIP KR ரவீந்திரன் மற்றும் வானதியுடன்.



PRID மனோஜ் தேசாய், உஷா சாபூ மற்றும் ஷர்மிஷ்டா தேசாய்.

படம்: ரஷீதா பகத், வடிவமைப்பு: கிருஷ்ணமூர்த்தி

# நவீன யுகத்தின் குழந்தை வளர்ப்புக் கலை



கிரண் ஜெஹ்ரா

RC பாண்டிச்சேரி பீச் டவுன், D 3231, நவீன காலத்துப் பெற்றோர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை புரிந்துகொண்டு தீர்வுகாணவும் குழந்தைகள் மற்றும் இளம்பருவத்தினர் அடையும் பாலியல் தொல்லைகள் குறித்த புரிதலுக்காகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சியை நடத்தினர். சென்னையில், காதுகேளாத 11 வயது சிறுமியை 16 பேர் கூட்டு வன்புணர்வு செய்தது மற்றும் அதிகரித்து வரும் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தொடர்ந்து, ''இந்த யுகத்தில் ஸ்மார்ட்போன்கள் மற்றும் சமூக ஊடகங்களின் அலைகளுக்கிடையே, பெற்றோர்கள் மற்றும் குழந்தைகள் ஒரு சேர சந்திக்கும் முக்கியப் பிரச்சினைகளை அடையாளம் காணவிரும்புகிறோம்'' என சங்க பிரசிடென்ட் ஜிகர் பட்டேல் கூறினார்.

1000க்கு மேற்பட்ட பெற்றோர்களுக்கு மத்தியில், 'குழந்தை பாலியல் தொல்லைகள் - கையாள்வது எப்படி?', 'ஸ்மார்ட்போன் போதை' மற்றும் 'மகிழ்ச்சியான குழந்தையை வளர்ப்பது எப்படி?' போன்ற பல்வேறு தலைப்புகளில் ஐந்து பேச்சாளர்கள் உரையாற்றினர். ''சங்கடமாக இருப்பினும், ஒவ்வொரு பெற்றோரும் தங்கள் குழந்தைகளிடம் பேசவேண்டும். இது குழந்தைக்கு ஏற்கனவே அறிமுகமாயிருக்க கூடிய அன்னியர் குறித்து மேலும் தெளிவை அளிக்கும். 90 சதவீதம் குழந்தைக்கு பாலியல் தொல்லை நடக்கும்போது உங்களுக்கு ஏற்கனவே அறிமுகமானவராக, நீங்கள் நம்பிக் கொண்டிருப்பவராக இருப்பார் என புள்ளிவிவரங்கள் சொல்கின்றன. உங்கள் குழந்தை என்று வரும்போது நீங்கள் யாரையும் நம்பவேண்டாம் என்பதே பெற்றோருக்கு சொல்ல விரும்புவது'', என்றார் பட்டேல்.

இந்த புதுயுகப் பெற்றோர்களுக்கான நிகழ்ச்சி இன்றைய பெற்றோர்கள் எதிர்கொள்ளும் சவால்கள் குறித்தான ஆலோசனைகளும் வழங்கியது. ''குழந்தையை பார்த்து சத்தம்போடுவது அதிகாரம் கொண்டவராக உங்களை காட்டுவதில்லை. இது நீங்கள் உங்கள் குழந்தைகளை விட்டு விலகி இருப்பதாகவே காட்டும். அத்துடன் உங்களை பலவீனமானவராக மாற்றும்'' என்று ஒரு பெற்றோராக இருக்கும் பட்டேல் கூறினார்.

தங்கள் குழந்தைகளுக்கு என்ன வேண்டும் என்று தங்களுக்கு தெரியும் என நம்புவது தான் பெரும்பாலான பெற்றோர்கள் செய்யும் பொதுவான தவறு என்று அவர் சொல்கிறார். இரு பெற்றோர்களும் தங்களுக்கான பணிகளில் ஈடுபட்டிருக்கும் வேளையில், ''அவர்களிடம் அமர்ந்து உரையாடுவதற்கு பதிலாக ஒரு போனை அவர்களின் கையில் கொடுத்து அழுகையை நிறுத்த முயற்சி செய்கிறோம். அது பிள்ளைகளை போனில் ஒரு வீடியோ பார்க்காமலோ, கேம் விளையாடாமலோ தூங்க முடியாத நிலைக்கு தள்ளியிருக்கிறது. குழந்தை வளர்த்தலை எளிமையாக்குவதற்கு பதில் நாம் மேலும் சிக்கலாக்கி கொண்டுள்ளோம்'' என்றார்.

போலியோ தடுப்பு மருந்தின் முக்கியத்துவம் குறித்த ஒரு வீடியோவும் பெற்றோர்களுக்காக ஒளிபரப்பப்பட்டது.

இந்நிகழ்ச்சியின் தொடர்ச்சியாக அப்பகுதியிலுள்ள இன்னும் வேறுபல பள்ளிகளிலும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த இந்தச் சங்கம் திட்டமிடுகிறது. ■



Rotary Institute 2018

# TRFக்கான இந்தியாவின் அளப்பெரிய பங்களிப்பு

ரஷீதா பகத்

ரொட்டேரியன்கள் கொண்ட ஒரு குழு பங்களாதேஷுக்கு பயணம் செல்லும்போது Dr ரசூல் ஹாக்கின் அலுவலகத்திற்கு உள்ளே ஒரு கதவில் இருந்த வாசகத்தைப் பார்த்தனர்: "புகழை எதிர்பாராமல் ஒருவன் சாதிப்பதற்கு எல்லையே இல்லை.'' என்று இருந்தது.

உலகத்தில் தொண்டு செய்வது, கல்வி அல்லது மற்ற துறைகளில் வழியாக அறக்கட்டளை செயல்பாடுகளை ஏற்றுக் கொள்ள 1917ம் ஆண்டில் ஆர்ச் க்ளம்ப் முடிவு செய்த போது, "உலகத்திற்கு தொண்டு செய்வது தான் TRFன் தாரக மந்திரமாக மாறியது'', என்று TRF அறங்காவலர் மைக் வெப் பவுண்டேஷனின் முக்கிய நன்கொடையாளிகளை கௌரவிக்க சென்னை மாநாட்டில் ஏற்பாடு செய்திருந்த TRF விருந்தில் பேசினார்.

"RC கன்சாஸ் சிட்டி, TRFக்கான முதல் நன்கொடையாக $26.50 வழங்கியது. ஆர்ச் க்ளம்ப் ஆரம்பித்த பவுண்டேஷனின் இன்றைய மதிப்பு $1 பில்லியனுக்கு அதிகமாக இருக்கும் என்று கனவு கண்டிருப்பாரோ என்னவோ. புகழை எதிர்பாராமல் ஒருவன் சாதிப்பதற்கு எல்லையே இல்லை.'' ஆனால், மற்றவர்களுக்கு பயிற்சி கொடுத்து அவர்களை ஈடுபடுத்தி முடிவில் அவர்கள் கையில் ஒப்படைப்பது தான் மிகவும் முக்கியமானது, ஏனெனில் "மாய மனிதன்'' போல யாரும் இல்லை.

ஒரு கவிதை வரிகளைச் சொல்லி இதை விளக்கினார்:

"சிலநேரம் நீங்கள் பெருமை கொள்ளும்போது - சிலநேரம் உங்கள் அகந்தை அதிகமாகும்

சிலநேரம் கொடுப்பதற்காக நீங்கள் எடுக்கும்போது - இந்த அறையில் நீங்கள் தான் தகுதிவாய்ந்தவர்.

ஒரு நிரப்பமுடியாத வெற்றிடத்தை விடப் போவதாக நீங்கள் உணரும் போது - சிலநேரம் உங்கள் அகம்பாவம் அதிகமாகும்.

இந்த சாதாரண அறிவுரைகளை பின்பற்றுங்கள், பிறகு பாருங்கள் உங்கள் ஆன்மாவை எப்படி சாந்தப்படுத்துகிறது என்று.

ஒரு வாளியில் தண்ணீரை நிரப்பி, அதில் உங்கள் மணிக்கட்டு வரை கையை உள்ளே விடுங்கள் பிறகு வெளியே எடுத்து பாருங்கள் அதில் எதுவுமே மாற்றம் இருக்காது - அது போல தான் நீங்கள் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி.''

### அதிக செயல்திறன் உள்ள அறக்கட்டளை

TRFல் நிதி மேற்குழுவுக்குத் தலைமை வகிக்கும் வெப், இந்த உலகத்தில் நன்றாகப் பணிசெய்யும் பல்வேறு அமைப்புகளில் தலை சிறந்தது நமது பவுண்டேஷன் தான் என்று சொன்னார். இந்திய ரொட்டேரியன்களைப்



*PDG JB காம்தார் மற்றும் RISAO TRF மேலாளர் சஞ்சய் பர்மர் ரோட்டரி-CSR ஒப்பந்தம் கையெழுத்திடுகின்றனர். RI தலைவர் பாரி ரஸ்ஸின், மார்லின் காம்தார், TRF அறங்காவலர்கள் மைக் வெப், குலாம் வஹன்வதி, RID C பாஸ்கர், DG பாபு பேரம் மற்றும் PRIP KR ரவீந்திரன் ஆகியோர்.*

பாராட்டிப் பேசுகையில்,'' நீங்கள் கொடுத்த நன் கொடைகளுக்காகவும் இந்த மண்டலங்களுக்காக நீங்கள் எடுத்த மானியங் களாலும்'', இந்தியா தொடர்ந்து தரவரிசையில் இரண்டாவதாக இருப்ப தாகச் சொன்னார். "ஆனால் இந்த மண்டலங்களில் உள்ள 70 சதவீத சங்கங்கள் நன்கொடையளித்தது மூலம் தொடமுடிந்தது; அனைத்து சங்கங்களும் பங்களித்தால் எப்படி இருக்கும் என்பதை நினைத்துப் பாருங்கள். இதை நடத்துவதற்கு உங்களை பாராட்டுகிறேன்.''



*RI தலைவர் பாரி ரஸ்ஸின், PRIP KR ரவீந்திரன் மற்றும் RID C பாஸ்கர் முன்னிலையில் PDG J K கவுர் மற்றும் அவர் மனைவி உஷாவை AKS உறுப்பினர்களாக கௌரவிக்கிறார்.*

## 2017–18 ஆண்டுக்கான TRF மண்டலங்களின் மைல்கல்கள்

- 18 AKS உறுப்பினர்கள் மொத்தமாக 90 உறுப்பினர்களைக் கொண்டுவந்தனர்.
- TRF முக்கிய கொடையாளிகளின் 14 சதவீதத்தை 4,400 பேர் கொடுத்தனர்.
- 133 முக்கிய பரிசுகளை வழங்கியதற்காக மண்டலம் 4க்கு சாதனை வருடம்.
- 193 முக்கிய பரிசுகளை வழங்கியதற்காக உலகம் முழுவதிலும் உள்ள 34 மண்டலங்களில் 7வது இடத்தைப் பெற்றது மண்டலம் 5.
- 2,157 புதிய பால் ஹாரிஸ் ஃபெல்லோக் களையும் 20 புதிய கொடையாளிகளை யும் கொண்ட ஒரு வெற்றிகரமான ஆண்டை மண்டலம் 6A கொண்டாடியது, இந்த மண்டலத்திற்கு இது ஒரு சாதனை.

கடந்த வருடம், TRF 503 மாவட்ட மானியங்கள் மொத்தம் $28.5 மில்லியன் மற்றும் 1,300 உலகளாவிய மானியத்திட்டங்களில் $86.3 மில்லியனை வழங்கியது "அந்த மானியங்களில் பெரும்பாலும் இந்த மண்டலங்களில் புத்திசாலித்தனமாக பயன்படுத்தப்பட்டது என எனக்குத் தெரியும்.''

## கொள்கைகளின் முக்கியத்துவம்

TRF சேவையில் தனது இரண்டாவது நூற்றாண்டில் இருந்தபோது, 1943ம் ஆண்டில் நான்கு-வழி சோதனை, உண்மையிலேயே PRIP ஹெர்ப் டெய்லர் தான் ஆரம்பித்தார், "நமது தொழில் மற்றும் சொந்த வேலைகளுக்கான ஒரு அளவுகோல் மற்றும் வழிகாட்டியாக கருதப்படுகிறது", அது இன்று முக்கியமாக மாறியுள்ளது. "(மிகப்பெரிய சமூகத்தில்) இந்த நாட்களில் நிறைய ஒழுங்குமுறை விதிகளை மீறுதல், அந்தரங்கத் தகவலைப் பயன்படுத்துவது, மனித சுரண்டல் மற்றும் சிறியதாகவும் பெரியதாகவும் பொருளாதார முறைகேடுகள் போன்றவற்றை உதாரணங்களுடன் பார்க்கிறோம், ரோட்டரியில் உள்ள நாம் எச்சரிக்கையுடன் இருக்க வேண்டும். ஒரு உதாரணத்தை அமைக்க வேண்டும், மற்றவர்களுக்கு இந்தச் செய்தியை, குறிப்பாக நம் சமூகத்தில் உள்ள






PDG *ரவீந்திர ரெட்டி மற்றும் அவர் மனைவி சரளா தேவி தங்கள்* AKS *சான்றிதழை* RI *தலைவர் பாரி ரஸ்ஸினிடமிருந்து பெறுகின்றனர்.* TRF *அறங்காவலர் மைக் வெப்,* PRIP KR *ரவீந்திரன்,* RID C *பாஸ்கர் மற்றும்* TRF *அறங்காவலர் குலாம் வஹன்வதி அவர்களும் உள்ளார்.*

இளைஞர்களுக்கு எடுத்துச் சொல்ல முன்மாதிரியாக இருக்கவேண்டும்.'' சுருக்கமாக, ரோட்டரி குழு நம்பகத்தன்மையை ஊக்குவிக்க வேண்டும்.

**TRF படை**

TRF செயல்கள் நேர்மை யுடன் இருக்கிறது, "நமது கொடையாளிகள், தொழில்நுட்ப ஆலோச கர்களின் TRF படையின் உறுப்பினர்கள், நமது நிதிகள் திறமையாகவும் துல்லியமாகவும் செல விடப்பட்டுள்ளது என்று பரிசீலனை மற்றும் தணிக்கை மூலம் உறுதி படுத்துகிறார்கள்.'' மானியங்களைச் செயல் படுத்தும் முன்பு, பின்பும் பரிசீலிக்க விஷேசமான திறனுடைய தன்னார்வல ரொட்டேரியன்கள் உள்ளனர்.

கூட்டத்துக்கு வருகை தந்த தனவந்திரிகளை RID C பாஸ்கர் வாழ்த்தினார். "நீங்கள் TRFற்கு தாராள மனதுடன் அளித்த ஆதரவு, உலகின் பல இடங்களில் உள்ள மோசமான பிரச்ச னைகளுக்குத் தீர்வுகான எங்களுக்கு உதவுகிறது.

"தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக, நம் மண்டலம் TRF நன்கொன்டையில் 2ஆம் இடத்தைத் தக்க வைத்துள்ளது, இதற்காக 2017–18 DGகளை பாராட்டுவோம்."

100 கோடி ரூபாய் வழங்கிய RC பெங்களூர் ஆர்சார்ட்ஸ் பிரசிடென்ட் D ரவி சங்கர் மற்றும் பவ்லோ தலைமையில் நடந்த TRFன் முக்கிய கொடையாளிகளுக்கு நன்றி செலுத்தும் கூட்டத்தில், இந்த மண்டலத்தைச் சேர்ந்த TRF அறங்காவலர் குலாம் வாஹன்வாதி அனைத்து கொடையாளிகளுக்கும் நன்றி தெரிவித்து $414 மில்லியன் வசூலித்து TRF சாதனை படைத்ததற்கு அவர்களின் ஆதரவு முக்கிய பங்கு வகித்ததாகக் கூறினார். $19.2 மில்லியன் வழங்கியதன் மூலம் இந்தியா மறுபடியும் 2ஆம் இடத்தைப் பெற்றது மற்றும் "பங்களாதேஷ் மொத்தம் $1.2 மில்லியன் வழங்கியது, மேலும் D 3281 தனியாக நான்கு புதிய AKS உறுப்பினர்களைச் சேர்த்துள்ளது.''

"சாதனை முறித்த நிகழ்ச்சி-பெங்களூரைச் சேர்ந்த ரவிஷங்கர், அவருடைய நண்பர் DG சுரேஷ் ஹரியை $14.7 மில்லியன் நன்கொடையை அறிவிக்க ஊக்குவித்தார், கேட்ஸ் பவுண்டேஷனுக்குப் பிறகு இரண்டாவது அதிகபட்ச நன்கொடை. சமுதாயத்திற்கு உதவி செய்ய இலட்சிய நோக்கம் உடைய ஒரு சாதாரண மனிதர் அவர்.

மற்றவர்களையும் இது ஊக்கப்படுத்தியுள்ளது; "D 3011ல், TRFக்கு நிதிதிரட்டும் இரவு உணவில் அவர்களுடன் நான் இருந்தேன். இலக்கு $1 மில்லியனாக இருந்தது; $2.5 மில்லியனுக்கான செயல் திட்டத்தை தீட்டினோம்". செப்டம்பர் 2018 வரை இந்தியா TRF நன்கொடையாக $3.6 மில்லியன் வழங்கியுள்ளது, கடந்த வருடம் இதே காலகட்டத்தில் $1.7 மில்லியன் வழங்கியிருந்தது. இந்திய ரூபாயின் திடீரென வீழ்ச்சியை கவனத்தில் கொள்ளும் போது, ரூ.25 கோடி வசூலிக்கப்பட்டது, கடந்த வருடத்தில் ரூ.11 கோடி வசூலித்தது; இது 125 சதவீதம் அதிகரித்துள்ளது.

PDG JB கம்தார் மற்றும் மர்லின் ($500,000 இலக்கை அடைந்ததற்கு); ஆர்ச் க்ளம்ப் சொசைட்டி உறுப்பினர்களாக PDGகளான JK கவுரும் அவர் மனைவி உஷா மற்றும் ரவீந்திர ரெட்டியும் அவர் மனைவி சரளா தேவி போன்றோரும் TRF விருந்தில் கலந்து கொண்டார்கள்.

நமது மண்டலங்களின் நன்கொடையில், தொகை மட்டுமல்லாமல் வேகமும் கூடியிருக்கிறது என்று EMGA அசோக் பஞ்ச்வானி கூறினார். உலகிலுள்ள 887 AKS உறுப்பினர்களில், "88 பேர் என்ற சுமார் 10 சதவீதம் நம்மவர்கள்; இதில் சுமார் 50 சதவீதம், அதாவது 47 பேர், கடந்த மூன்று ஆண்டுகளில் கொடையளித்தவர்கள். "நாம் வேகமாக முன்னேறுகிறோம், இப்போது ஒவ்வொரு ஆண்டும் 50 புதிய AKS உறுப்பினர்கள் உருவாகலாம்" என்றார்.

புகைப்படங்கள்
ரஷீதா பகத்

Rotary

# Project HOPE

Lend your hand to help the victims of the flood-ravaged Kerala & Coorg. Donate a home in your name

@ ₹3,50,000/-

**Be the inspiration**
to rebuild lives.



Advisors
**PRIP Raja Saboo**
**PRIP Kalyan Banerjee**
**RIPN Sushil Gupta**

RI Director
**Basker Chockalingam**

Trustee
**Gulam Vahanvaty**

RI Director Elects
**Dr Bharat Pandya**
**Kamal Sanghvi**

District Governors
**A Venkatchalapathy**
**E K Ummer**
**E K Luke**
**P Rohinath**

Email: projecthope@vncgroup.com

# Project Hope

## Kerala & Karnataka Disaster Relief & Rehabilitation Project

## Pledge Letter to "Donate a home"

I/We Rtn. _______________________ of Rotary Club of ___________________________ District __________ confirm my/our pledge to donate homes costing Rs. 3,50,000/- each to a deserving family affected by the recent floods as our to contribution to helping them rebuild their lives by providing them a roof to live under.

On receiving details relating to the beneficiary, we shall transfer an amount of Rs. ________________ (towards the cost of building the shelter) to the following bank account:

| | |
|---|---|
| Trust Account Name | Rotary Kerala Disaster Relief Fund |
| Bank | State Bank of India |
| Branch | Kaloor Deshabhimani Junction, Kaloor, Ernakulam, Kerala |
| Type | Current account |
| Account Number | 37991066583 |
| IFSC Code | SBIN0070327 |

Let us '**Be the Inspiration**' to rebuild the lives of our brothers and sisters who have lost their homes! Let us rekindle Hope!

Yours sincerely,

Signature

Name:

Mobile:

Date:

Email id:

Rotary Club of ______________________

Please send the filled form immediately to: **projecthope@vncgroup.com**

Rotary PEOPLE OF ACTION

# மொராதாபாத்தில் உறுப்பினர் சேர்க்கை, போலியோ கருத்தரங்கம்

V. முத்துக்குமரன்

RC மொராதாபாத் சென்ட்ரல், D 3100, சங்க பிரசிடென்ட்டுகள் மற்றும் செக்ரட்டரிகளுக்கு ஒரு பயிற்சி திட்டத்துடன் கூடிய ஒரு மாவட்ட போலியோ பயிற்சிப் பட்டறையை பரிவ்ரிதி என்ற தலைப்பில் நடத்தியது. சிறப்பு விருந்தினராக RIDE பரத் பாண்டியா இருந்தார், உறுப்பினர் சேர்க்கையை அதிகப்படுத்தி மாற்றத்தை ஏற்படுத்தக்கூடிய திட்டப்பணிகளைச் செயல்படுத்துமாறு மாவட்ட தலைவர்களை அவர் வலியுறுத்தினார். “புதிய உறுப்பினர் களைத் தக்கவைக்க வேண்டும் மற்றும் ரோட்டரி திட்டப்பணிகளுடன் நல்ல தொடர்பில் இருக்க வேண்டும். சமுதாயத்தில் ரோட்டரி பற்றிய ஒரு நல்ல அபிப்பிராயத்தை உருவாக்க வேண்டும்,’’ என்றார்.



*RIDE பரத் பாண்டியா, INPPC தலைவர் தீபக் கபூர், RC மொராதாபாத் சென்ட்ரல் தலைவர் அனுஜ் அகர்வால், சங்க செயலாளர் ஷம்மி பூரி மற்றும் PDG அகிலேஷ் கோத்திவால்.*

கௌரவ விருந்தினரான INPPC தலைவர் தீபக் கபூர், இந்தியாவிலிருந்து போலியோவை வெளியேற்ற ரோட்டரி முன்னோடியாக இருந்த பங்கை விரிவாக விளக்கி, போலியோ இல்லாத இந்தியாவை உருவாக்குவதில் NID முகாம்கள் ஒரு பெரிய மாற்றத்தை உருவாக்கின. இப்போது பல உயிர்களை பலிவாங்கும் ரூபல்லா மற்றும் தட்டம்மையை ஒழிப்பதில் ரோட்டரி கவனம் செலுத்தியுள்ளது.

மாவட்டத்தில் இப்போது செயல்படுத்துகிறத் திட்டங்களை DG தீபக் ஜெயின் பட்டியலிட்டார். இந்த கருத்தரங்கத்தில் ஏறக்குறைய 45 சங்கங்கள் கலந்து கொண்டன. நிகழ்ச்சியை நடத்தும் சங்க உறுப்பினர்களுக்கு விசேஷமாக வடிவமைக்கப்பட்ட ID கார்டுகளை பாண்டியா வழங்கினார். இந்த கார்டில் அந்த ரோட்டரி உறுப்பினரின் ID எண் உட்பட அனைத்து விவரங்களும் இருக்கும், உறுப்பினர் இதை தங்களின் வெளிநாட்டுப் பயணங்களில் கூடப் பயன்படுத்தலாம். தற்போது சங்கத்தில் 52 உறுப்பினர்கள் உள்ளனர். வருட இறுதிக்குள் இதை 65 ஆக உயர்த்தப்போவதாக சங்க பிரசிடென்ட் அனுஜ் அகர்வால் இலக்கு வைத்துள்ளார்.



*சங்கத் தலைவர் அனுஜ் அகர்வாலின் மனைவி பாரதி கைதி ஒருவருக்கு மூக்குக் கண்ணாடி பொருத்துகிறார்.*

### மற்ற சேவைத் திட்டங்கள்

மொராதாபாத்தில் உள்ள ஆர்யன்ஸ் இன்டர்நேஷனல் பள்ளியின் இன்டராக்ட் சங்கத்தின் உதவியுடன் ஒரு கருப்பைப் புற்றுநோய் பற்றிய விழிப்புணர்வு முகாம் நடத்தப்பட்டது. ஏறக்குறைய 250 மாணவிகள் பயனடைந்தனர். கருப்பைப் புற்றுநோய்க்கு எதிரான பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பற்றி மகளிர் நோய் மருத்துவர் மற்றும் புற்றுநோய் நிபுணர்கள் பேசினார்கள். இரத்தச் சோகை மற்றும் மாதவிடாய் சுகாதாரம் போன்ற உடல் நல பிரச்சனைகள் குறித்தும் விளக்கினர்.

மொராதாபாத் மாவட்ட சிறைச்சாலையில் ஏறக்குறைய 170 கைதிகளுக்கு CL குப்தா கண் மருத்துவமனையுடன் இணைந்து ஒரு கண் பரிசோதனை மற்றும் ENT சோதனை முகாம் நடத்தப்பட்டது.■

# கொழும்பு சங்கத்துக்கு வயது 90

ரஷீதா பகத்

கொழும்பு ரோட்டரி சங்கத்தின் 90வது பிறந்த நாள் விழா அங்குள்ள ஹோட்டல் ஹில்டனில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பாரி ரஸ்ஸின் பேசினார். அந்த சங்கம் கடந்த காலங்களில் செய்த நற்பணிகளையும் மனிதாபிமான தொண்டுகளையும் அவர் நினைவுகூர்ந்து பாராட்டினார்.

பாரி ரஸ்ஸின் பேசியதாவது: 1948ம் ஆண்டு கொழும்பு ரோட்டரி சங்கம் தொடங்கப்பட்டபோது நீங்கள், 'நாட்டை இந்த நோயிலிருந்து நீங்குவதற்குத் துணை பரிவோம்' என்று உறுதிபூண்டதை நினைத்துப் பாருங்கள். காசநோயை ஒழிப்பதற்காக நீங்கள் இணைந்து பாடுபட்டீர்கள். 1987ம் ஆண்டு போதைப்பொருள் தடுப்பு இயக்கத்தை (Anti-Narcotics Association) தொடங்கி, போதைப் பொருளை ஒழிக்கப் போராடினீர்கள். இதற்காக ஜப்பான் ரோட்டரி சங்கத்தினருடன் இணைந்து நாடு முழுவதும் மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைக்காக 2000 படுக்கைகள் தருவித்தீர்கள். நான் மருத்துவத் தொழிலைச் சார்ந்தவன். ஒரு மருத்துவ மனையின் படுக்கைக்கு எவ்வளவு செலவாகும் என்பது தெரியும். அத்தகைய படுக்கையில் நோயாளி



*RI தலைவர் பாரி ரஸ்ஸின், எஸ்தர், PRIP KR ரவீந்திரன் மற்றும் இலங்கையின் முன்னாள் தலைவர் சந்திரிகா குமாரதுங்கா.*



PRIP KR *ரவீந்திரன்,* RI *தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் கொழும்பு மேயர் ரோஸி சேனநாயக்கே.*

எந்த அளவுக்கு சிகிச்சை பெற இயலும் என்பதையும் அறிவேன்.

ஒரு மருத்துவமனைக்கு CAT Scan கருவி தரப்பட்டது. ஒரு லட்சத்து 40 ஆயிரம் குழந்தைகள் பிறந்த மகப்பேறு மருத்துவமனை 2004ம் ஆண்டு சுநாமியால் சேத மடைந்தது. ரோட்டரி முயற்சியால் அது புதிதாகக் கட்டப்பட்டது. தற்போது, கருப்பை புற்றுநோயை (Cervical cancer) ஒழிப்பதற்கான திட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது. அதுபோல் டெங்கு காய்ச்சலை கொழும்பு நகரிலிருந்து ஒழிக்கவும் திட்டம் உள்ளது. இத்தகைய திட்ட செயல்பாடுகளால் உங்கள் நாடே மாறி வருகிறது என்றார் ரஸ்ஸின்.

டெங்கு நோய்க்குக் காரணமான கொசுத் தொல்லையை ஒழிக்க ரோட்டரி மாவட்ட ஆளுநர் துஷான் சோஸா உற்சாகமாகச் செயல்படுவது கண்டு பாரி ரஸ்ஸின் வியப்படைந்தார். இத்திட்டத்தைக் கவனித்து, இதன் வெற்றியை அடுத்து, இதே திட்டத்தை பாதிக்கப்பட்ட இதர நாடுகளிலும் செயல்படுத்தலாம் என்றார்.

## கனவுகள் நனவாக

ரோட்டரியினர் போல் யாரும் கனவு காண்பதில்லை. கனவு காண்பதுடன் நிற்காமல் அதைச் செயல்படுத்தவும் செய்கிறோம். ஆப்பிரிக்காவில் ஒரு பழமொழி உண்டு: ‘ஒரு பாறையை எடுத்தால், கடந்த காலத்தைத் தொடுகிறீர்கள் என்று அர்த்தம். ஒரு பூவை எடுத்தால், நிகழ்காலத்தைத் தொடுகிறீர்கள். ஒரு உயிரை (வாழ்க்கையைத்) தொட்டால், எதிர்காலத்தையே மாற்றுகிறீர்கள் என்பது பொருள் என்பது அந்தப் பழமொழி. அப்படியானால், எத்தனை பேரின் வாழ்க்கையை அன்போடு தொட்டிருப்பீர்கள்? எத்தனை பேரின் எதிர்காலத்தை மாற்றியிருப்பீர்கள்? நினைத்துப் பாருங்கள். நூற்றுக் கணக்கான ஆயிரக் கணக்கானோர் நல்ல வாழ்க்கை பெறுவதற்கு கொழும்பு ரோட்டரி சங்கம் காரணமாக இருக்கிறது. அவர்களது சார்பில் உங்களுக்கு இங்கே நன்றி கூறுகிறேன்.

உலகம் முழுவதும் 113 ஆண்டுகளாக ரோட்டரி அமைப்பினர் சிறிதும் பெரிதுமாகப் பல பணிகளைச் செய்துள்ளனர். இப்போது, 100 ஆண்டுகளுக்குத் திட்டமிட வேண்டியிருக்கிறது. 1980ம் ஆண்டுகளில் நாட்டில் மூன்றரை லட்சம் பேர் இளம்பிள்ளை வாத நோயால் பாதிக்கப்பட்டனர். அந்த எண்ணிக்கையைத் தற்போது 18 என்று குறைப்பதற்காகப் பகீரதனப் பிரயத்தனம் செய்திருக்கிறீர்கள். ஆனால், இன்னும் முழுமையாக நிறைவேறவில்லை. 1985ம் ஆண்டு குழந்தைகளுக்காக நாம் அளித்த உறுதியை நிறைவேற்ற




D *3220 மற்றும் கொழும்பு சங்கத்தின் மூத்த உறுப்பினர்களுடன்* RI *தலைவர் பாரி ரஸ்ஸின்,* PRIP KR *ரவீந்திரன் மற்றும்* PDG *கிரிஷ் ராஜேந்திரன்.*

வேண்டியுள்ளது. அதற்காக ஆண்டுதோறும் 25 கோடி பேருக்கு உலகம் முழுவதும் போலியோ சொட்டு மருந்து செலுத்த வேண்டும். இலக்கு நிறைவேறும் வரையில் வேறு எதையும் கவனிக்கக் கூடாது என்றார் ரஸ்ஸின்.

**பாரி ரஸ்ஸின் கருத்தியல் இலச்சினையின் பரிமாணங்கள்**

போலியோ ஒழிப்பு ரோட்டரியின் முதல் பணி என்றால், எதிர்காலத் தேவைக்கான திட்டம் அடுத்து முக்கியமானது என்று சுட்டிக் காட்டினார் பாரி ரஸ்ஸின்.

தூண்டுகோலாய் இருப்போம் என்ற தனது கருத்துரு இலச்சினை குறித்து அவர் விவரித்தார். அந்த இலச்சினையை அவர் மனைவி எஸ்தர் வடிவமைத்துள்ளார். அதில், பஹாமாஸ் கடற்கரை, கடல், சூரிய அஸ்தமனம் ஆகியவை சித்திரிக்கப் பட்டுள்ளன. இப்படம் மனமகிழ்ச்சி, உற்சாகம் ஆகியவற்றைக் குறிக்கிறது.

இதில் வரையப்பட்டுள்ள கடல் அலை இயற்கையின் ஆற்றல், நேர்முக மாற்றங்களை உருவாக்குவதற்கான ஆற்றல். இந்த அலையின் கீழே உள்ள இதயம் கொடையுள்ளம் கொண்ட இதயத்தைக் காட்டுகிறது. அலையில் மிதக்கும் படகு பயணத்தின் திசையைக் காட்டுகிறது, இலச்சினை இயற்கையின் ஆற்றலாகிய ரோட்டரி அமைப்பினர் சேவை இதயத்துடன் இந்த உலகம் நல்ல நிலையை அடைவதற்கான வழியைக் காட்டுகிறோம் என்பதை விளக்குகிறது. ஆனால், அந்த திசை என்பது நமக்குள்ளிருந்து வரவேண்டும். ஒவ்வொரு ரோட்டரி சங்கமும் ஒரு உலகம்தான் என்றார்.

நமது ரோட்டரியில் இளைஞர் களையும் பெண்களையும் ஈடுபடுத்த வேண்டும். 4 சதவீத ரோட்டராக்ட்டர் கள் தான் ரோட்டரி சங்கத்தில் சேருகின்றனர். இளைஞர்களை ரோட்டரி சங்கத்தினராக மாற்றுவது




நமக்குச் சவால். மக்களுடன் இணைய வேண்டும். அவர்களது கதவுகளைத் தட்டி அவர்களுடன் சேர்ந்து பணியாற்றுவதை எடுத்துரைக்க வேண்டும். மக்கள் நம்முடன் இணைந்து செயல்பட வழிவகை காண வேண்டும்.

சில நாடுகளில் ரோட்டரி உறுப்பினர்களின் சராசரி வயது 70! இது கவலை தருகிறது. இதை மாற்ற வேண்டுமானால், இளைய தலைமுறையினரை ரோட்டரியில் ஈடுபடுத்த வேண்டும். அதற்கு இளைஞர்களை ஈர்க்கும் வகையில் செயல்படவேண்டும். அவர்களை மதிக்கவேண்டும். அப்படிச் செய்தால், யாரும் ரோட்டரி அமைப்பை விட்டுப் போகமாட்டார்கள்.

அப்படி அவர்களை மதிப்பதன் ஒரு வழி அவர்களிடையில் தலைமைப் பண்புக்கான திறனை ஊட்டுவது. நான் MBA படித்தபோது தலைமைப்பண்பு கிடைக்கவில்லை. ரோட்டரி மூலம்தான் கிடைத்தது.

என் ரோட்டரி சங்கக் கூட்டத்தில் முதல் முறையாக பேசும் வாய்ப்பு கிடைத்தபோது, திணறினேன். அந்த அளவுக்கு பதற்றம். ஆனால், சங்கத்தினர் 'பரவாயில்லை மீண்டும் பேசு' என்று ஊக்கம் அளித்தனர். இன்று உங்கள் முன் நின்று உரை நிகழ்த்துகிறேன். ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினருக்கும் இது போன்ற வாய்ப்பு தேவை.

இளைஞர்களிடம் தலைமைப் பண்புத் திறன்களை வளர்ப்பதற்காக டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல் (Toastmasters International) அமைப்புடன் ரோட்டரி இணைந்து தலைமைப் பண்புக்கான பயிற்சித் திட்டத்தை வகுத்துள்ளது. இத்திட்டம் ரோட்டராக்ட் இளைஞர்களுக்கு விரைவில் அறிமுகப்படுத்தப்படும்.

தென்கிழக்கு ஆப்பிரிக்க நாடான மாலாவியில் ஒரு பள்ளிக்குச் சென்றிருந்தேன். அப்பள்ளியில் ஆயிரம் மாணவர்களும் 38 ஆசிரியர்களும் மட்டுமே இருந்தனர். அங்கு என் மனைவி எஸ்தர் ஓர் அறையில் 200 சிறுவர்களுடன் பேசி கொண்டிருந்தாள். அங்கே மேசை, நாற்காலி கிடையாது. போதிய வசதியில்லை. ஏதோ கல்வியாவது கிடைக்கிறதே என்று குழந்தைகள் மகிழ்ந்தனர். அவர்களில் 11 வயது சிறுவன் என்னிடம் வந்து, குடிநீருக்காக ரோட்டரி கிணறு வெட்டித் தந்ததையும் இரு கழிவறைகள் கட்டித் தந்ததையும் சுட்டிக் காட்டினான்.

ஆயிரம் சிறுவர்களுக்கு இரண்டே இரண்டு கழிவறைகள் போதுமா நினைத்துப் பாருங்கள்? இவற்றையெல்லாம் அங்குள்ள ரோட்டரி சங்கத்தினர் மற்ற நாடுகளின் உதவியோடுதான் செய்திருக்கிறார்கள். அந்த ரோட்டரி சங்கத்தினருக்கு என் சார்பில் நன்றியைத் தெரிவியுங்கள் என்றான் அந்த சிறுவன்.

நிறைவில் உணர்ச்சி வசப்பட்ட பாரி ரஸ்லின், அந்த 11 வயது சிறுவன் யாரோ பெயர் கூடத் தெரியாது. அவன் சார்பில் உங்கள் அனைவருக்கும் நன்றி கூறுகிறேன். அவர்கள் உங்களை இனி சந்திக்கும் வாய்ப்பு இல்லை. நீங்களும் பார்க்கும் சந்தர்ப்பம் இருக்காது. ஆனால், அவர்களது வாழ்க்கையைத் தொட்டுவிட்டீர்கள். அதை மாற்றி விட்டீர்கள். பெண் களுக்குக் கல்வி கொடுத்துவிட்டீர்கள். அதன் மூலம் அவர்கள் குடும்பத் துக்கே கல்வி அளிப்பார்கள். ஆயிரம் பேருக்கு சுகாதார வசதி தரப்பட்டுள்ளது. சிறிய தொழில்முனைவோருக்கு சின்னச் சின்ன கடனுதவியைச்

செய்திருக்கிறீர்கள். இவை அமைதி, புரிந்துணர்வு ஆகியவற்றை உலகில் கொண்டுவரும். இதற்கெல்லாம் உங்களுக்கு நன்றி என்று குறிப்பிட்டார்.

### நினைவலைகள்

PRIP KR ரவீந்திரன் தனக்கும் கொழும்பு ரோட்டரி சங்கத்துக்கும் இடையிலான 42 ஆண்டுகால உறவு குறித்து சில மலரும் நினைவுகளைப் பகிர்ந்து கொண்டார்.

அப்போது எனக்கு 24 வயது. என்னை ரோட்டரி சங்கத்தில் இணைப்பதற்காக முன்மொழிந்த ரோட்டரி சங்க உறுப்பினருடன் முதல் கூட்டத்துக்குச் சென்றேன். அப்போது ரோட்டரியின் தலைவராக ஏ பௌர் அண்ட் கம்பெனியின் துணைத் தலைவரான WC தம்பையா ரோட்டரியின் தலைவராக இருந்தார். என்னை முன்மொழிந்தவர் அந்தக் கூட்டத்தின் சிறப்பு விருந்தினரிடம் என்னை அறிமுகம் செய்தபோது ரொம்ப பதற்றப்பட்டேன்.

அதற்கு முன் தினம்தான் ஒபராய் ஹோட்டலில் மனைவி நண்பர்களுடன் இரவு விருந்து அனுபவித்துக் கொண்டிருந்தவர். அங்கிருந்த பாடகர் புகழ் பெற்ற ஹாவா நகீலா (Hava Nageela) என்ற ஹீப்ரூ பாடலைப் பாடும்படி எல்லோரும் கேட்டுக் கொண்டனர். அந்தப் பாடலை ஹாரி பெலாஃபோன்ட் பிரபலப்படுத்தினார். ஆரம்பத்தில் அந்தப் பாட்டைப் பாடுவதற்கு பாடகர் தயங்கினார். காரணம், அங்கே அறையில் அமர்ந்திருந்தவர் பாலஸ்தீனத்தின் பிரதிநிதி. இருந்தாலும் அந்தப் பாட்டைப் பாடும்படி அவரை வற்புறுத்தினோம். அந்த பாலஸ்தீனப் பிரதிநிதி இருப்பதாகக் கூறியவர் என்னை முறைத்துப் பார்த்து விட்டு, எழுந்து வெளியேறினார்.

அந்த பாலஸ்தீனப் பிரதிநிதி தான் நான் உறுப்பினராகச் சேர்க்கப்பட்ட ரோட்டரி சங்கத்தின் கூட்டத்தில் சிறப்பு விருந்தினர் ஆவார் என்று ரவீந்திரன் கூறினார். மேலும், சங்கத் தலைவர், அவரை நன்றியுரை கூறும்படி கேட்டுக் கொள்ளும் சீட்டு ஒன்றை அனுப்பினார்.

நான் அப்போது மேடையில் பேசுவதற்குத் தடுமாறினேன். ஆனால், ஒன்று ரோட்டரியில் இணைந்திருக்காவிட்டால், பலவற்றை இழந்திருப்பேன். பணத்தில் அல்ல, அன்பு, பாசம், நட்பு, நல்லுறவு, சாதனை ஆகிய பலவற்றை இழந்திருப்பேன். ரோட்டரியில் இல்லாதிருந்தால், நிறைய பணம் இருந்தாலும் சாதாரணமான ஆளாகத் தான் இருந்திருப்பேன். ரோட்டரி என்பது நம்மில் பலருக்கு விரிவடைந்த குடும்ப உறவாகும் என்றார் ரவீந்திரன்.

ரோட்டரி சங்கத்தில் தனக்கு ஏற்பட்ட பல்வேறு சுவையான அனுபவங்களை நகைச்சுவையோடு அவர் பகிர்ந்து கொண்டபோது, பார்வையாளர்கள் வெகுவாக ரசித்தனர்.



*இடதிலிருந்து:* TRF *அறங்காவலர் மைக் வெப், அலிசன்,* PDG *கௌரி ராஜன்,* D 3220 DG *தூஷன் சோஸா, நிகழ்வின் துணை தலைவர் நித்தி முருகேசு மற்றும் மனோரி சோஸா.*

# தெற்காசிய ரோட்டரி சங்கத்தின் வரலாறு

வெகு சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்த கொழும்பு ரோட்டரி சங்கம் 90வது ஆண்டு விழாவில் பங்கேற்ற RI தலைவர் பாரி ரஸ்ஸின் இந்த சங்கத்தின் பல்வேறு சிறப்பான திட்டங்களைப் பாராட்டினார். இந்நிகழ்ச்சியில் இலங்கையின் முன்னாள் அதிபர் சந்திரிகா குமாரதுங்க கலந்துகொண்டு சிறப்பித்தார். ஆசியாவில் ரோட்டரி அமைப்பின் வளர்ச்சி குறித்த வரலாற்றை PRIP KR ரவீந்திரன் விளக்கிக் கொண்டிருந்தார்.

ஆசிய பசிபிக் மண்டலத்தில் ரோட்டரி குறித்த செய்தியைப் பரப்பியதில் குறிப்பிடத்தக்கவர், கனடா நாட்டு கல்காரி ரோட்டரி சங்கத்தைச் சேர்ந்த ஜேம்ஸ் வீலெர் டேவிட்ஸன். அவரது பணியினால் ரோட்டரி இந்தக் கண்டத்தில் மிகப் பெரிய அமைப்பாக உருவெடுத்துள்ளது.

டேவிட்ஸன் ஆர்க்டிக் பிரதேசத்தில் ஆய்வு நடத்துபவர், பத்திரிகையாளர், ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் இயக்குநராகவும் துணைத் தலைவராகவும் இருந்தவர். அவருக்கு பசிபிக் மண்டலத்தில் ஆசியா, தொலைதூரக் கிழக்கு பகுதிகளில் ரோட்டரி இன்டர்நேஷனல் அமைப்பின் 8 ஆயிரம் டாலர் நிதியில் ரோட்டரி அமைப்புகளை உருவாக்கும் பணி அளிக்கப்பட்டது. ஆனால், அவர் 25 ஆயிரம் டாலர் அளவுக்குத் தனது சொந்தப் பணத்தைச் செலவிட்டார்.



வானதி மற்றும் PRIP KR ரவீந்திரன்.

இதற்குள் மணிலா ரோட்டரி சங்கம் தொடங்கப்பட்டுவிட்டது. அதன் மூலம் ரோட்டரியின் காலடி ஆசிய மண்டலத்தில் பதிந்து விட்டது. (மணிலா ரோட்டரி சங்கம் சிறிது காலம் இயங்கவில்லை. தற்போது, மீண்டும் இயங்குகிறது). அதைப் போல் ஷாங்காய் (இது இப்போது இயங்கவில்லை) ரோட்டரி சங்கம், கல்கத்தா ரோட்டரி சங்கம் ஆகியவை 1919ம் ஆண்டு தொடங்கப்பட்டன. 1921ம் ஆண்டு டோக்கியோ ரோட்டரி சங்கமும், 1927ல் சியோல் ரோட்டரி சங்கமும் தொடங்கப்பட்டன. ஆனால், கல்கத்தாவைத் தாண்டி 10 ஆண்டுகள் வேறு எங்கும் ரோட்டரி அமைப்புகள் தொடங்கப்படவில்லை.

டேவிட்ஸன் ஆசியாவில் 1928ம் ஆண்டு முதல் 1931ம் ஆண்டு வரையில் பல்வேறு ரோட்டரி சங்கங்களை உருவாக்கியுள்ளார். செரம்பன், கோலாலம்பூர் (மலேசியா), கொழும்பு (இலங்கை), சென்னை, கராச்சி (பாகிஸ்தான்) ஆகிய இடங்களில் 1929ம் ஆண்டு, சிலோன் ரோட்டரி சங்கம் District 89 அங்கமாகும். அது பின்னர், ஆப்கானிஸ்தான், மியான்மர் ஆகிய நாடுகளிலும் விரிவடைந்தது.

கொழும்பு ரோட்டரி சங்கத்தின் தொடக்க கூட்டம் காலே ஃபேஸ் ஹோட்டலில் நடைபெற்றது. கர்னல் TYரைட் அதன் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அக்கூட்டத்தில், கவர்னர் ஜெனரல் ஹெர்பெர்ட் ஸ்டான்லி உள்ளிட்ட சிலோன் கொழும்பு சொசைட்டியின் முக்கியப் பிரமுகர்கள் பங்கேற்றனர். அவர் பிரிட்டனின் ஐந்தாம் ஜார்ஜின் பிரதிநிதியாக அங்கு பங்கேற்றார். அவருடன் ஐந்தாவது கடற்படையின் கமாண்டன்ட் அட்மிரல் தேசிகர் பங்கேற்றார்.

உறுப்பினர்களுக்கான தகுதி அப்போது வகுக்கப்பட்டது. தகுதியுள்ளவர்கள் ரோட்டரியில் உறுப்பினர்கள் ஆவதற்கு மூன்றாண்டுகள் காத்திருந்தனர் . தொடக்க உறுப்பினர்களான 64 பேரில் 8 பேர் மட்டுமே இலங்கையைச் சேர்ந்தவர்கள். மற்றவர்கள் அனைவரும் ஆங்கிலேயர்கள்.

### தரமான உறுப்பினர்களும் திட்டங்களும்

ரோட்டரி சங்கத்தின் உறுப்பினர்கள் உயர்ந்த தரம் உடையவர்கள் என்பதற்கு உதாரணமாக கொழும்பில் பல நகரங்களுக்கு ரோட்டரி உறுப்பினர்களின் பெயர்கள் சூட்டப் பட்டுள்ளதே அடையாளம். சர் ஜேம்ஸ் பெரீஸ், சர் முகமது மக்கான் மார்க்கர், சர் மார்கஸ் ஃபெர்னாண்டோ, சர் பரோன் ஜெயதிலக, சர் சித்தம்பரம் கார்டினர் போன்றவையே என்பதை ரவீந்திரன் உரையில் சுட்டிக் காட்டினார்.

கொழும்பு ரோட்டரி சங்கம் பல ஆண்டுகளாக தனக்குத் தானே மேம்படுத்திக் கொண்டு ஆயிரக் கணக்கானோரின் வாழ்க்கைக்கு சேவைபுரிந்து, பல கோடி மதிப்பில் மனிதாபிமான சேவைத் திட்டங்களைச் செயல்படுத்தும் ஆற்றல் கொண்டதாகவும் நாட்டில் மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றார்.

### அவற்றில் சில:

- ❖ மன்னார் மாவட்டத்தில் புயலால் சேதமடைந்த வீடுகளுக்கு மாற்றாக 45 வீடுகள் கட்டித் தந்தது
- ❖ இலங்கை புற்றுநோய் சொசைட்டி என்ற மருத்துவ சேவை மையத்துக்கு உதவி புரிந்தது
- ❖ காச நோயை ஒழிக்கவும் கட்டுப்படுத்தவும் சேவை புரிவதற்கான தேசிய அமைப்பை உருவாக்கியது
- ❖ இலங்கை போதைப் பொருள் தடுப்பு அமைப்பை (SLANA) உருவாக்கியது
- ❖ லேடி ரிக்வே குழந்தைகள் நல மருத்துவமனையில் புறநோயாளிகளுக்கான பிரிவை அமைத்தது

# நெருங்கிய நட்பு



RI தலைவர் பாரி ரஸ்ஸின்

*பரஸ்பரம் மரியாதை கொண்டுள்ள RI தலைவர் பார்ரி ரஸ்ஸின், முன்னாள் தலைவர் KR ரவீந்திரன் ஆகியோர் கொழும்பு ரோட்டரி சங்கத்தின் 90வது ஆண்டு விழா நிகழ்ச்சியில் அதைப் பகிர்ந்து கொண்டனர்.*

*ரவீந்திரன் பேச்சைத் தொடங்கியவுடனே, ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக நான் இருந்தபோது, பார்ரியும் நானும் மிகவும் நெருக்கமாகப் பணிகளை மேற்கொண்டோம். நான் ஏதாவது சொதப்பினால், அதை அவர் தான் சரி செய்வார். அவரிடமிருந்து கிடைத்த ஆதரவு தான் எனது வெற்றிக்குப் காரணம். பார்ரியின் வெற்றிக்குக் காரணம் அவரது மனைவி எஸ்தர் என்று ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் மைக் வெப் மிகச் சரியாகக் குறிப்பிட்டார்.*

*ரஸ்ஸினிடம் உள்ள பல்வேறு இயல்புகளை விவரித்தார். எஸ்தர் பார்ரியைப் பார்த்து, "கண்ணா", "அன்பே" என்று கொஞ்சினால், பார்ரி தான் சரியாகச் செய்து கொண்டிருக்கிறோம் என்பதை உணர்வார். எஸ்தர் "பார்ரி" என்று அழைத்தால், "பார்த்துக்கோ" என்று அர்த்தம். அத்துடன் "ரஸ்ஸின்" என்று அழைத்தால் "பிரச்சினையில் இருக்கிறாய்" என்று பொருள். எஸ்தர் அற்புதமான மனுஷி என்றார்.*

*ரஸ்ஸின் தனது உரையில் இந்த அமைப்பில் ரவியும், வானதியும் தான் சிறந்த ஜோடி என்பது என் கருத்து. அவர்களிடமிருந்து கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது. தலைமைப் பண்புகளையும் புரிந்து கொள்ள வேண்டும் என்றார்.*

- ❖ அரசு பொது மருத்துவ மனைகளுக்கு சிறுநீரக டயாலிசிஸ் கருவிகளை வழங்கியது
- ❖ ராணுவ மருத்துவமனை உள்பட ஒவ்வொரு அரசு மருத்துவ மனைக்கும் அவசர சிகிச்சைப் பிரிவுக்குத் தேவையான இயந்திர படுக்கைகளை வழங்கியது
- ❖ 2004ம் ஆண்டு சுநாமியால் பாதிக்கப்பட்ட தென் இலங்கையில் முழுமையாக மகப்பேறு மருத்துவ மனையைக் கட்டித் தந்தது
- ❖ புற்றுநோயை முன்கூட்டியே அறிவதற்கான பிரிவை அமைத்துத் தந்தது. அதில் 40 ஆயிரம் பெண்கள் பரிசோதிக்கப் பட்டுள்ளனர்.
- ❖ கருப்பைப் புற்றுநோயை ஒழிப்பதற்காக தற்போது மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டம் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளது.அது அமைந்தால், கருப்பைப் புற்றுநோய் ஒழிப்பு மருத்துவ மையம் அமைந்த முதல் நாடுகளில் இலங்கை இடம்பெறும் என்றார் ரவீந்திரன்.

## டெங்கு ஒழிப்புக்கு முன்னோடி திட்டம்

கூட்டத்தில் பேசிய மாவட்ட ஆளுநர் துஷான் சோஸா, ரோட்டரி அமைப்பில் கடந்த ஆண்டுகளில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. இந்த ரோட்டரி சங்கம் 90 ஆண்டுகள் நிலைத்து நிற்பதற்கு இதன் தலைவர்களின் அரும் பணியே காரணமாகும் என்று கூறினார்.

டெங்கு ஒழிப்புக்கான முன்னோடித் திட்டம் குறித்து அவர் விவரித்தார். இத்திட்டம் கொழும்பு மேயர் அலுவலகத்தில் அதே தினம் காலையில் தொடங்கப்பட்டது. நிகழ்ச்சியில், இத்திட்டத்தை ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் ரஸ்ஸின் முன்னிலையில் மேயர் ரோஸி சேனநாயக தொடங்கி வைத்தார்.

டெங்கு காய்ச்சலை முற்றிலுமாக ஒழிப்பதற்கு உறுதி பூண்டுள்ளோம். அதற்குக் காரணமான கொசுக்களை, அதன் லார்வா நிலையிலேயே கருவிகளின் மூலம் அழிக்க வேண்டியுள்ளது. இது தொடர்பாக இலங்கை அரசின் சுகாதார அமைச்சகத்துடன் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இத்தகைய கருவிகளை அமைத்து கொசுக்களை ஒழிக்கும் பணியில் அரசின் பங்களிப்பு இல்லாமல், மக்களை நாம் அணுக இயலாது என்றார் சோஸா.

இம்மாவட்டத்தின் இன்னொரு முக்கியமான திட்டம் டோஸ்ட்மாஸ்டர்ஸ் இன்டர்நேஷனல் அமைப்புடன் இணைந்து தலைமைப் பண்புக்கான தொடர் கருத்தரங்குகளை நடத்துவது ஆகும். இதன் நோக்கம் நாடு முழுவதும் தலைமைப் பண்புள்ளவர்களை அடையாளம் காண்பதுதான்.

தி ரோட்டரி ஃபவுண்டேஷன் அறங்காவலர் மைக் வெப் மற்றும் ஆலிசன் ஆகியோர் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்றனர். இந்த ரோட்டரி சங்கத்தில் 40 ஆண்டுகளை நிறைவு செய்த ரவீந்திரன், இலங்கை அமைச்சரும் முன்னாள் மாவட்ட ஆளுநருமான சுவாமிநாதன் ஆகியோர் பாராட்டி, சிறப்பிக்கப்பட்டனர்.

இந்நிகழ்ச்சியில் கொழும்பு ரோட்டரி சங்கத்தின் தலைவர் குமுது வர்ணகுலசூரியா நன்றியுரை ஆற்றினார்.

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

வடிவமைப்பு: N. கிருஷ்ணமூர்த்தி

# தெற்காசிய ரோட்டரி இன்டர்நேஷனல் அலுவலகத்தின் செய்தி

**ரோட்டரியின் புதிய பயிற்சி மையம்:** ‘எனது ரோட்டரி’ (My Rotary) வலைதளத்தில் நுழைந்தால், அதில் ‘பயிற்சி மையம்’ (Learning Centre) என்ற பக்கத்தைத் திறந்து உள்ளே ‘பயிற்சி மற்றும் மேற்கோள்’ (Learning and Reference) பல்வேறு பயிற்சிகளைப் பெறலாம். அதில், ரோட்டரி சங்கத் தலைவர், செயலாளர், பொருளாளர், உறுப்பினர், நிர்வாகம், பிரபலம், சேவைத் திட்டங்கள், ரோட்டரி ஃபவுண்டேஷன், ரோட்டரி சங்க மத்திய கமிட்டி, உறுப்பினர் சேர்க்கைக்கான உத்திகள் ஆகியவை குறித்த பயிற்சிக் குறிப்புகளும் கையேடுகள் இடம்பெற்றுள்ளன.

**உறுப்பினர்களை ஈர்க்க...:** 2016ம் ஆண்டு நடைபெற்ற ரோட்டரி சட்ட கவுன்சில் (COL) கூட்டத்துக்குப் பின், புதிதாக உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான வழிமுறைகள் கீழ்க்கண்டவாறு தளர்த்தப்பட்டுள்ளன.

**ரோட்டரி, ரோட்டராக்ட் ஆகிய இரு சங்கங்களிலும் உறுப்பினராக இருக்க அனுமதித்தல்:** ரோட்டராக்ட் உறுப்பினர்கள் ஒரே சமயத்தில் ரோட்டரி சங்கத்திலும் தனி உறுப்பினராக ஆகலாம்.

**கூட்டங்களை நடத்துவதற்கான அட்டவணையை மாற்றுதல்:** ரோட்டரி சங்கங்கள் தங்களது கூட்டங்களுக்கான தேதி, நாள் நேரத்தை வசதிக்கு ஏற்ப அமைத்துக் கொள்ளலாம். மாதந்தோறும் குறைந்தது இரு தினங்கள் கூடும் நிலையில், கூட்டங்களை ரத்து செய்து கொள்ளலாம். நேருக்கு நேர் அல்லது தனிநபர், இணையவழி (ஆன்லைன்) கூட்டங்கள் நடத்தலாம். இணைய வழியாக கூட்டங்களில் நேரடியாகப் பங்கேற்பதற்கு அனுமதிக்கலாம், அல்லது வழிமுறைகளிலிருந்து வேறு வழிமுறைக்கும் மாறலாம்.

**வருகைப் பதிவுக்கான விதிகள்:** ரோட்டரி சங்கங்கள் தங்களது உறுப்பினர்களின் வருகைக்கான விதிகளைத் தளர்த்தவோ, கடுமையாக்கவோ, வருகை தராதவர்களை நீக்கவோ நடவடிக்கை மேற்கொள்ளலாம். எனினும், தங்களது வருகைப் பதிவு குறித்த அறிக்கைகளை மாவட்ட ரோட்டரி ஆளுநரிடம் தெரிவிக்க வேண்டும். விதி 85: உறுப்பினர் ஒன்று அதற்கு மேற்பட்ட ரோட்டரி சங்கங்களில் உறுப்பினராக இருந்த ஆண்டுக் காலமும் அவரது வயதும் சேர்த்து குறைந்தது 85 ஆண்டுக்கு இணையாகும், அவரது உறுப்பினர் காலம் குறைந்தபட்சம் 20 ஆண்டாகவும் இருந்தால், அவரது வருகைப் பதிவிலிருந்து விலக்கு அளிக்கலாம்.

**மின்வழிச் சங்கங்களும் ரோட்டரி சங்கங்களும்:** பாரம் பரியமான ரோட்டரி சங்கங்களுக்கும் மின்வழி சங்கங்களுக்கும் இடையிலான பாகுபாடு நீக்கப்படுகிறது. இதையடுத்து, மின்வழி சங்கங்கள் (E-clubs) ஆன்லைன் வழியாகக் கூட்டங்கள் நடத்தி, தங்களை ரோட்டரி சங்கங்கள் என்று அழைத்துக் கொண்டு வளரலாம்.

கூட்டங்களுக்கும், வருகைப் பதிவுகளுக்கும் நடை முறைகளைத் தளர்த்தியதால், உறுப்பினர்களைச் சேர்ப்பதில் நல்ல பலன் அளித்துள்ளது. புதிய உறுப்பினர் களிடம் நேர்காணலில் ‘இதில் உறுப்பினர் என்ற முறையில் என்னவெல்லாம் செய்யமுடியும் எனக் கருதுகிறீர்கள்?’ என்று கேள்வி கேட்பது நல்ல பழக்கம். ரோட்டரியில் சேரும் புதிய உறுப்பினர்களுக்கு இது பாரபட்சம் இல்லாத நிலையை எடுத்துக் கூறும்.

**உறுப்பினர்களுக்கான விதிகள், தகுதிகள்:** ரோட்டரி சங்கங்கள் உறுப்பினர்களை மாற்றும்போதும் இரட்டை உறுப்பினர்கள், கவுரவ உறுப்பினர்கள் குறித்து முடிவு செய்யும் போதும் தங்களது விதிமுறைகளைத் தாங்களே வகுத்துக் கொள்ளலாம். உறுப்பினர் ஆவதற்கான ஒரே தகுதி அவர்கள் வயது வந்தவர்களாக இருக்க வேண்டும், சமுதாயத்திற்கும் உலகம் முழுவதும் சேவை புரியும் விருப்பம் இருக்க வேண்டும்.

**புதிய உறுப்பினர்கள் வகைகள்:** ரோட்டரி சங்கங்களில் சேருவோரை இணை உறுப்பினர், கார்ப்பரேட் உறுப்பினர், குடும்ப உறுப்பினர், இதர வகை உறுப்பினர் என்று எந்த வகையிலும் சேர்த்துக் கொள்ளலாம். செயல்படும் உறுப்பினர்கள் என்று ரோட்டரி அறிக்கையில் தெரிவித்து ரோட்டரி பட்டியலில் அவர்களை இடம்பெறச் செய்ய இயலும். சங்கத்துக்குச் செலுத்த வேண்டிய சந்தா, உணவு, இதர செலுவுகள், வருகைப் பதிவு, எதிர்பார்க்கும் சேவைகள் ஆகியவற்றை ரோட்டரி சங்கமே முடிவு செய்து கொள்ளலாம். எனினும், ரோட்டரி அலுவலகம், வாக்களிக்கும் உரிமை செயல்படும் உறுப்பினர்கள் மட்டுமே என்று கணக்கில் எடுத்துக் கொள்ளப்படுவர்.

- கார்ப்பரேட் சமூகப் பொறுப்புக்கான (CSR) குழு தனது ஆவணங்களை மாவட்ட ரோட்டரி தலைமைகளிடம் பகிர்ந்து கொண்டுள்ளது. மேலும் விவரங்களுக்கு ஜெயஸ்ரீ ஜெயராமனைத் தொடர்புகொள்ளலாம். மின்னஞ்சல்: *jayashree.jayaraman@rotary.org*

**ரோட்டரி நிறுவன மாதம்:** ரோட்டரியின் நிறுவன மாதம் நவம்பர் ஆகும். அந்த மாதத்தின் நிகழ்வுகள் வெற்றிகரமாக அமைய சில யோசனைகள்:

- ஃபவுண்டேஷனின் வரலாறு குறித்தும், அந்த அமைப்பின் மூலம் சமூகத்திலும் குடும்பங்களிலும் ஏற்பட்ட மாற்றங்கள் குறித்தும், ரோட்டரி உறுப்பினர்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்துதல்; ரோட்டரியின் பணிகளை சமூக ஊடகங்கள் மூலம் வெளியுலகம் அறியச்செய்தல்; மற்றவர்களுக்கும் தூண்டுதலாக அமையும் வகையில் நிதியுதவி பெறும் திட்டங்கள் குறித்த தகவல்களைப் பதிவிடுதல்.
- பால் ஹாரிஸ் சொசைட்டி போன்ற ஃபவுண்டேஷனின் நிகழ்ச்சிகள், ‘ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினர்’ போன்ற திட்டங்கள் குறித்து எல்லோரும் அறியவும் TRF ஆண்டு நிதிக்கு எல்லா உறுப்பினர்களும் உதவுவதற்கு ஊக்குவித்தல்.
- புதிய கொடையாளர்களையும், பால் ஹாரிஸ் சொசைட்டி உறுப்பினர்களையும் அங்கீகரித்து நன்றி தெரிவித்தல்.
- TRFக்கு முதல் முறையாக நிதி திரட்டி அளிப்போருக்கு நன்றி தெரிவித்தல்.
- TRFக்கு நிதி திரட்டி அளிக்காத ரோட்டரி சங்கங்கள் அளிக்கத் தூண்டுதல்.
- கடந்த ஆண்டு நிதி திரட்டித் தந்து, இந்த ஆண்டு இன்னும் தராதவர்களைத் தொடர்புகொண்டு மீண்டும் பங்களிக்க ஊக்குவித்தல்.
- ரோட்டரி உறுப்பினர்கள் ஆன்லைன் வழியாக நிதி பங்களிப்புக்கு ஊக்குவித்தல்...■



நிகழ்வு தலைவர்
R தீனச்சந்திரன் DGNகளுடன்.

Rotary Institute 2018

# DGNகளுக்கு ஒரு பயிற்சி பட்டறை

புதிய திறன்களைக் கற்க பட்டைத் தீட்டுங்கள், உங்கள் குழுவின் முக்கிய திறன்களை ஒருங்கிணைப்பிற்காக வரிசைப்படுத்துங்கள், உங்கள் சங்கங்களுடன் இருவருக்கும் வெற்றிதரும் சூழலைப் பாருங்கள் மற்றும் சிறந்த நிர்வாகத்திற்கு நடவடிக்கைக்கு முன்னுரிமை கொடுங்கள்,'' என்று RID C பாஸ்கர், மண்டலம் 4, 5 மற்றும் 6Aவிலிருந்து கலந்து கொண்ட 40 DGNகள் சென்னையில் நடைபெற்ற ரோட்டரி இன்ஸ்டிடியூட்டிற்கு முன் நடந்த பயிற்சி கருத்தரங்கில் அறிவுறுத்தினார்.

அவர்கள் பொறுப்பேற்கும் காலத்திற்கு முன் இருக்கும் காலகட்டத்தில், அவர்கள் செய்யக் கூடியவை மற்றும் செய்யக் கூடாதவைகளைப் பட்டியலிட்ட RID C பாஸ்கர், கவர்னர்கள் இரண்டு ஆண்டிற்கு முன்னரே தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள், ஏனென்றால் அது உங்களை நீங்கள் தயார்படுத்திக் கொள்ள போதிய அவகாசம் கொடுக்கும். இந்தக் காலகட்டத்தில் உங்களால், உங்கள் மாவட்ட திட்டங்கள், நடவடிக்கைகளைக் கவனித்து, புரிந்துகொண்டு, உங்கள் வருடத்திற்கான திட்டங்களைத் தீட்டி மேலும் உங்கள் இலக்கைத் தீர்மானிக்க முடியும், என்றார்.

பாஸ்கர் DGNகள் செயலூக்க அணுகுமுறையை கடைப்பிடிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார், மேலும் அவர்கள் ''மாவட்டத்தையும், உறுப்பினர்களையும், அவர்களின் அணுகுமுறையால் அணைத்துச் செல்ல வேண்டும்'' என்றார். அவர்களை, மாவட்ட நிர்வாகிகளை கவனமாகவும், ரோட்டரியின் ஆறு முக்கிய அம்சங்களில் நிரூபித்தவர்களையும், நம்பிக்கையனவர்களையும் தேர்வு செய்ய வேண்டும் என்றார்.

RIDE பரத் பாண்ட்யா குறிக்கோளுடன் இருக்கும் நோக்கம் மட்டுமே நமது எதிர்காலத்தை நிர்ணயிக்கும். நாம், நமது சங்கங்களை துடிப்பானதாக ஆக்க வேண்டும், அதற்காக அவற்றின் பலவீனங்களை அடையாளம் கண்டு, அவற்றைச் சீரமைக்க வேண்டும் என்றார்.

### ரோட்டரியின் புதிய தொலைநோக்கு அறிக்கை

ரோட்டரியின் புதிய தொலைநோக்கு அறிக்கை பற்றி குறிப்பிடும்போது, ஒன்றாக, ஓர் உலகைப் பார்ப்போம், அங்கே மக்கள் ஒன்றிணைந்து,



உலகம் முழுவதிலும், நமது சமூகத்தில், மற்றும் நமக்குள் ஒரு நீடித்த மற்றும் அழிவில்லா மாற்றத்தை உருவாக்குவார்கள்-என்று பாண்ட்யா சொன்னார், “2019 ஜூலையில் இருந்து நமது உறுப்பினர் எண்ணிக்கையை உயர்த்தவும், விரிவாக்கவும், நாம் வித்தியாசமாக மற்றும் மாறுபட்ட கோணத்தில் யோசித்து, புதிய வழிகளை உருவாக்க வேண்டும்.”

RIDE கமல் சாங்க்வி, இந்த அமைப்பை போட்டிக்குறியதாக வைத்துக்கொள்ள, தொடர்ச்சியான பயிற்சி தவிர்க்க முடியாதது என்று குறிப்பிட்டார்.

அதிகமான பயிற்சி அதிக நம்பிக்கையைக் கொடுக்கும். இங்கே, பயிற்சியாளர்கள் மற்றும் வழிகாட்டிகள், சங்கத்தின் பங்களிப்பை ஊக்குவிப்பார்கள், உறுப்பினர்களிடம் அதிக ஆற்றலை நிலைநிறுத்துவார்கள், என்று அவர் கூறினார்.

PRID மைக் வெப், TRFயின் நிகர சொத்துக்கள் ஜூன் மாதம் 1.127 பில்லியின் டாலர்களாக உயர்ந்தது, 2017 ஜூன் மாதத்தில் அது 1.058 பில்லியன் டாலர்களாக இருந்தது என்றார். அவர் 2025ம் ஆண்டில் 2.025 பில்லியன் பெரும் நிதியைத் திரட்டும் நோக்கத்துடன் செயல்படும் TRFயின் பார்வை நினைவுபடுத்தினார், மேலும் இந்த நோக்கத்தை அடைய, ரோட்டரி சங்கங்கள் அறக்கட்டளைக்கு தாராளமாக நன்கொடையாக அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்.

இந்தியாவில் 1.4 லட்சம் ரோட்டரி உறுப்பினர்கள் இருக்கிறார்கள், இவர்களில் வெகு சிலர் செய்யும் தவறுகளால், நாம் மோசமான பெயரைச் சம்பாதித்கிறோம்,'' என்று TRF டிரஸ்ட்டி குலாம் வாகன்வாட்டி எச்சரிக்கை விடுத்தார். ரோட்டரி நிதிகள் ஒரு பொறுப்பான மற்றும் வெளிப்படையான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் கூறினார்.

TRF பங்களிப்பில் அமெரிக்காவிற்கு அடுத்து இரண்டாவது இடத்தில் இந்தியா இருந்தாலும், “இந்த இரண்டு நிலைக்கும் இடத்திற்கும் உள்ள வித்தியாசம் மிக அதிகம், அதைக் குறைக்க வேண்டும்.'' 2017-18ம் ஆண்டில் இந்தியா அறக்கட்டளைக்கு 373 மில்லியன் கொடுத்திருக்கிறது மற்றும் இந்த ஆண்டிற்கு 380மில்லியன் இலக்கை நிர்ணயித்திருக்கிறது, அது 150 மில்லியன் (கேட்ஸ் பவுண்டேஷனின் 1:2 மானியம் உட்பட) போலியோ நிதியாகவும்; 137 மில்லியன் வருடாந்திர நிதியாகவும்; 61.5 மில்லியன் எண்டவ்மெண்ட் ஃபண்ட் நிதியாகவும்; மற்றும் உலகளாவிய மானியங்கள் மற்றும் நேரடி பரிசுகள் மூலமாக 31.5 மில்லியன் நிதியாகவும் இருக்கும், என்கிறார் அவர்.

### ரோட்டரியில் பெண்கள்

நியூசிலாந்தில் இருந்து வந்திருந்த, PDG ரேவின் கிர்கமென் D 9930, சங்கங்கள் பெண் உறுப்பினர்களை ஈர்ப்பதற்காக வருகை, கூட்ட அட்டவணை, உறுப்பினர் கட்டணம் போன்ற பிரச்சினைகளை மாற்றியமைக்க முன்வரவேண்டும் என்று பரிந்துரைத்தார். தென் ஆசிய மண்டலங்கள் (4, 5 மற்றும் 6A) பெண் உறுப்பினர்கள் 10.19% தான் இருக்கிறார்கள், உலகளாவிய 22% ஒப்பிட்டுப்பார்த்தால் (நியூசிலாந்தில் 25% இருக்கிறார்கள்) இந்தப் பாலின விகிதத்தைச் சரிசெய்ய மிகவும் அடிப்படையான வேலைகளைச் செய்ய வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

முன்னதாக, D3232 PDG JB கம்தார் “66% ரோட்டரி உறுப்பினர்கள் அவர்கள் உறுப்பினரான முதல் இரண்டு ஆண்டுகளில் வெளியேறுகிறார்கள், எனவே “வழிகாட்டுதலும் கைபிடித்தும் வைத்திருப்பது மிக முக்கியமானது.'' அட்டவணைபடி, மண்டலம் 4 கடந்த ஐந்து ஆண்டுகளில் அதிகபட்சமாக 107% வளர்ச்சியடைந்திருக்கிறது, மண்டலம் 5 78% வளர்ச்சி, மண்டலம் 6A 24% குறைவாக வளர்ந்தது. கடந்த ரோட்டரி ஆண்டில் வளர்ச்சி மண்டலங்கள் முழுவதும் கணிசமாக குறைந்திருக்கிறது, என்று அவர் குறிப்பிட்டார்.

EMGA சாம் பட்டிபந்தள தடுமாறிக்கொண்டிருக்கிற சங்கங் களை அடையாளம் காண ஒரு திட்டம் வகுக்க வேண்டும் என்று DGNகளை வலியுறுத்தினார். “எல்லா சங்கங்களும் மை ரோட்டரி மற்றும் கிளப் சென்ட்ரலில் அவர்களின் விபரங்களைப் பதிவேற்றுவதை உறுதிப்படுத்துங்கள்,'' என்றார்.

தெற்காசியாவில் 70% குறைவான உறுப்பினர்கள் தான் தக்கவைக்கப்படுகிறார்கள், இந்தப் பிரச்சனையை அணுக வேண்டும் என்று கருத்தரங்குத் தலைவர் R தீனச்சந்திரன் வலியுறுத்தினார். அந்த காலத்தில், DGN காலகட்டங்கள் “தேனிலவு ஆண்டுகள்'' என்று கருதப்பட்டது, அனால் இப்போது, “ரோட்டரி உங்களிடமிருந்து நிறைய எதிர் பார்க்கிறது மற்றும் நீங்கள் தேவைக் கேற்ப நடத்திக் காட்ட வேண்டும்,'' என அவர் கூறினார்.■

# மண்டலம் 4, 5, 6A

| Zone 4 | | |
|---|---|---|
| **Trophy** | **RI District** | **IPDG** |
| Highest Total Contribution to TRF | 3141 | Prafull J Sharma |
| Highest contribution to Annual Fund | 3141 | Prafull J Sharma |
| Highest contribution to Endowment Fund | 3141 | Prafull J Sharma |
| Highest Per Capita Giving to Annual Fund | 3141 | B M Sivarraj |
| Highest contribution to Polio Fund | 3141 | T K Ruby |

| Donor | Trophy | IPDG | District |
|---|---|---|---|
| Nitish Laharry Trophy | Highest Giving to Annual Fund | Prafull J Sharma | 3141 |
| Binota and Kalyan Banerjee Trophy | Highest Giving to Endowment Fund | Suresh Mathew | 3211 |
| Usha and Raja Saboo Trophy | Highest Giving to Polio Fund | Asha Prasanna Kumar | 3190 |
| Usha and Raja Saboo Trophy | Highest Total Contribution to TRF | Prafull J Sharma | 3141 |



IPDG ப்ரஃபுல் சர்மா TRF அறங்காவலர் மைக வெப்பிடமிருந்து விருது பெறுகிறார். RRFC விஜய் ஜலான், TRF அறங்காவலர் குலாம் வஹனவதி, RI தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் RID C பாஸ்கர் அவர்களும் உள்ளனர்.



IPDG T K ரூபி RI தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் RID C பாஸ்கர் அவர்களிடமிருந்து விருது பெறுகிறார்.



IPDG விவேக் குமார் அறங்காவலர் மைக் வெப், RI தலைவர் பாரி ரஸ்ஸின் மற்றும் RID C பாஸ்கர் அவர்களிடமிருந்து விருது பெறுகிறார்.

# — TRF Â ¸ xPÒ

| Zone 5 | | |
|---|---|---|
| **Trophy** | **RI District** | **IPDG** |
| Highest Total Contribution to TRF | 3000 | P Gopalakrishnan |
| Highest contribution to Annual Fund | 3232 | R Srinivasan |
| Highest contribution to Endowment Fund | 3211 | Suresh Mathew |
| Highest Per Capita Giving to Annual Fund | 3232 | R Srinivasan |
| Highest contribution to Polio Fund | 3190 | Asha Prasanna Kumar |

| Zone 6A | | |
|---|---|---|
| **Trophy** | **RI District** | **IPDG** |
| Highest Total Contribution to TRF | 3292 | Sanjay Giri |
| Highest contribution to Annual Fund | 3250 | Vivek Kumar |
| Highest contribution to Endowment Fund | 3291 | Brojo Gopal Kundu |
| Highest Per Capita Giving to Annual Fund | 3250 | Vivek Kumar |

**New inductees to Arch Klumph Society**

3012 J K Gaur and Usha Gaur

3150 Ravindra Reddy and Sarala Devi Marri




IPDG P கோபாலக்கிருஷ்ணன் மற்றும் அவர் மனைவி நீலாவதி TRF அறங்காவலர் மைக் வெப் மற்றும் RI தலைவர் ரஸ்ஸினிடமிருந்து விருது பெறுகிறார்.




IPDG ஆஷா பிரஸன்னக்குமாருக்கு TRF அறங்காவலர் மைக் வெப், RI தலைவர் ரஸ்ஸின் மற்றும் RID C பாஸ்கர் விருது வழங்குகின்றனர்.



IPDG R சீனிவாசனுக்கு RI தலைவர் பாரி ரஸ்ஸின் விருது வழங்குகிறார். TRF அறங்காவலர் மைக் வெப்பும் உள்ளார்.




IPDG ஜவாரிலால் ஜெயின் மற்றும் அவர் மனைவி சுமித்ரா அவர்கள் RI தலைவர் ரஸ்ஸினிடமிருந்து விருது பெறுகின்றனர்.

Rotary PEOPLE OF ACTION

# தீவிபத்துக்குப்பின் மறுவாழ்வு

ஜெய்ஸ்ரீ

*RC கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ் தீ விபத்திலிருந்து பிழைத்தவர்களுக்கு புதிய தைரியத்தையும் உலகத்தை எதிர்நோக்க, புதிய தோற்றத்தையும் கொடுத்து புதிய நம்பிக்கையை அவர்களுக்குள் விதைக்கிறது.*

என் மகள் மகிழ்ச்சியாக சிரிப்பதையும் பார்க்கும் போது, Dr ராஜசபாபதிக்கு நன்றி சொல்ல வேண்டும் என்கிறார் தருமபுரி அனுராதா, ஒரு மாதத்திற்கு முன்பு மறுசீரமைப்பு சிகிச்சை பெற்ற அவரின் மகள் ஈஸ்வரியைப் பற்றி பேசுகிறார். அந்தக் குழந்தையை மருத்துவமனைக்குக் கொண்டு வரும் போது, அவளின் முகம் அடையாளம் தெரியாமல் தீயில் கருகி, முன் நெற்றி வழுக்கையாகவும் விரல்கள் ஒட்டிக் கொண்டும் இருந்தது. 18 மாதக் குழந்தையாக அவள் இருந்த போது தீ விபத்திலிருந்து தப்பிப் பிழைத்தாள். “நிறைய மருத்துவர்கள் என் மகளுக்கு சிகிச்சை அளித்திருக்கிறார்கள். எதிலும், சரியாகவில்லை, ஒரு மாதத்திற்கு முன்பு தான், கடவுள் என்னை இந்த மருத்துவரிடம் அனுப்பிவைத்தார்.”

ஈஸ்வரி தன் அனைத்து வேலைகளுக்கும் மற்றவர்களைச் சார்ந்து இருக்க வேண்டும் என்பதால் 2ஆம் வகுப்பிற்கு பின் படிப்பை பாதியிலேயே நிறுத்திவிட்டாள். கோயம்புத்தூர் மெட்ரோபோலிஸ் ரோட்டரி சங்கத்தின் (RCCM), D 3202, உறுப்பினரான Dr S ராஜசபாபதி, அவளை கோயம்புத்தூரில் உள்ள கங்கா மருத்துவமனைக்கு கொண்டு சென்று தொடர்ச்சியாக ஆறு அறுவைச் சிகிச்சைகளுக்குப் பின்பு தன் முன்னங்கையில் அழுந்தி போயிருந்த விரல்களையும் பிரிக்க முடிந்தது. “தலையில் வழுக்கையாக இருந்த பகுதியையும் இப்போது நாங்கள் குறைத்துவிட்டோம், ஈஸ்வரி மறுபடியும் பள்ளிக்குச் சென்று தன் படிப்பைத் தொடருகிறாள்,’’ என்றார் Dr ராஜசபாபதி.

திட்டப்பணி இயக்குனர் Dr ராஜசபாபதி உடன் இணைந்து, சங்கம் தங்களின் முத்திரை பதிக்கும் திட்டப்பணியான-தீ விபத்துக்குப் பின் மறுவாழ்வு-மூலமாக தீ விபத்திலிருந்து பிழைத்த 395 பேருக்கு மறுவாழ்வு வழங்கியுள்ளனர். 2012ம் ஆண்டு முதல் கோவை கங்கா மருத்துவமனையில் செயல் படுத்தப்படுகிறது. இதுவரை இந்தத் திட்டப்பணியின் மதிப்பு $408,000. நோயாளிகளிடமிருந்து பணம் பெறுவதில்லை, மருத்துவமனை செலவினங்கள் மற்றும் மருந்து மாத்திரைகளுக்கான செலவுகளை சங்கமே கவனித்துக் கொள்கிறது, மேருத்துவமனையும் தன் பங்குக்கு அறுவை சிகிச்சை நிபுணர்களின் கட்டணம் மற்றும் இதர தொழில்முறை கட்டணங்களைத் தள்ளுபடி செய்கிறது.

விகாரமாக சாயல் மாறி, மன அழுத்தத்துடன் போராடுவது, வாழ் வாதாரத்திற்கு சம்பாதிப்பது பெரியவர்களுக்கு சவாலாக இருக்கிறது, என்கிறார் அறுவை சிகிச்சை நிபுணர். ஆனால் சரியான சிகிச்சை மூலமாக விகாரமான தோற்றத்தைக் குணப்படுத்த முடியும் என்று நம்பிக்கையுடன் கூறுகிறார். அறுவைசிகிச்சை மட்டும் போதாது,

*இடதிலிருந்து : தருண் R ஷா, Dr S ராஜசபாபதி, திட்டத் தலைவர் ரமேஷ் வீரராகவன், ஒருங்கிணைப்பாளர் விஜய் குமார், RCCM தலைவர் KK சுக் மற்றும் CJ நாராயணன், கோவை கங்கா மருத்துவமனையில்.*



அதிகப்படியான பொறுமை மற்றும் உற்சாகமும் தேவைப்படுகிறது. மறுசீரமைப்பு அறுவை சிகிச்சைக் குப் பின்பு நோயாளிகள் நல்ல தோற்றத்திற்குத் திரும்புவார்கள், மிக முக்கியமாக ஆக்கப்பூர்வமான வேலைகளைக் கூட தங்கள் கை, கால்களைப் பயன்படுத்தமுடியும்.

இரு முழங்கால்கள், முழங்கை மற்றும் கழுத்து போன்றவற்றில் தசைகள் கடுமையாக இறுகி இருந்த நான்ஸிக்கு (23) ஏற்பட்ட முன்னேற்றங்களை குறிப்பிட்டுச் சொன்னார். இரண்டு வருடமாக துயரங்களில் அழுந்தியிருந்த நான்ஸியை, RC ஊட்டியைச் சேர்ந்த ரொட்டேரியன்கள் பரிந்துரைத்தனர். "நான்கரை மாதங்களுக்குப்பின்பு, தொடர் அறுவைசிகிச்சைகளும் ஒட்டுப்போடுதல் நடவடிக்கைகளும் சேர்ந்து, மீண்டு வருவதற்கு மேலும் வலிமிகுந்த எட்டு வாரங்கள் தேவைப்பட்டது, யாருடைய உதவியும் இல்லாமல் நான்சியால் இப்போது நடக்கமுடிகிறது. இது ஒரு அதிசயம் என்று மக்கள் நினைக்கிறார்கள். ரூ.4.75 லட்சங்கள் செலவானது," என்று சொல்கிறார் அவர்.

அதேமாதிரி தான் கவிதாவின் கதையும், இந்தப் பெண் தன் கணவனாலேயே தீ வைக்கப்பட்டாள் அவள் உயிரைக் காப்பாற்றினர், ஆனால் முகம் மற்றும் கைகள் கடுமையாக மாறிவிட்டது. பல்வேறு நடைமுறைகள் மூலம், கவிதா இப்போது உலகத்தை நம்பிக்கையுடன் எதிர்கொள்கிறாள்.'' அவர்களுக்கு தையல் பயிற்சி கற்றுக்கொடுத்து ஒரு தையல் இயந்திரம் வாங்கிக் கொடுத்திருக்கிறோம். இன்று அவர்கள் நிறைய வாடிக்கையாளர்களை வைத்து பரபரப்பாகச் செயல்படுகிறார் மற்றும் ஒரு குழந்தையை தத்து எடுக்கவும் கூட யோசிக்கிறார்கள்,'' என்று சொல்கிறார் முன்னாள் தலைவர் தருண் ஷா.



*சிகிச்சைக்குப்பின் கவிதா தையல் தொழில் செய்கிறார்.*

### துவக்கப்புள்ளி

மனிதநேயத்துக்கான உலகளாவிய சேவை என்ற விருதைப் பெறுவதற்காக ராஜசபாபதியும் அப்போதைய சங்க தலைவர் வெங்கடேஷும் கொல்கத்தா விமானத்தில் திரும்பும் போது ஆரம்பித்தது. ஒரு சமூக மாற்றத்தை உருவாக்கும் சில அர்த்தமுள்ள திட்டப்பணிகளைச் செய்வதற்கான விவாதம் நடந்தது, தீ விபத்தால் உருக்குலைந்தவர்களுக்கு அறுவை சிகிச்சை செய்ய களத்தில் இறங்கலாம் என மருத்துவர் பரிந்துரைத்தார். "இரண்டு நோயாளிகளும் சிகிச்சையின் முடிவும் எங்கள் உறுப்பினர்களின் ஆதரவை உறுதிப்படுத்தியது. இந்த உன்னதமான தருணத்திற்கு ஒவ்வொரு உறுப்பினரும் ஈடுபடுத்தப்படுகிறார்கள்.

ஆரம்பக்கட்டத்தைச் சமாளிக்க $50,000 மதிப்புள்ள இரண்டு இசை கச்சேரிகள் மற்றும் தொண்டு நிகழ்ச்சியும் உதவி செய்தது. இதை முன்னேடுத்திச் செல்வதற்காக போதுமானளவு கொடையாளிகள் உள்ளனர்,'' என்றார் சங்க தலைவர் KK சுக்.

"நாங்கள் சிகிச்சை அளித்த ஒவ்வொரு நோயாளிக்கும் ஒரு கதை இருக்கிறது. உருமாற்றத்தை குணமாக்குவதால் நோயாளிக்கும் அவருடன் இருப்பவர்களுக்கும் கிடைக்கும் சந்தோஷத்தையும் நாம் பார்க்கும் போது, ரோட்டரியின் சக்தி மற்றும் மாயாஜாலத்தை உணர முடிகிறது,'' என்றார் Dr ராஜசபாபதி. தீவிபத்துக்கு பின் மறுவாழ்வு திட்டப்பணி பிரிட்டிஷ் மெடிக்கல் ஜர்னலின் தெற்காசிய விருதுக்காக பரிந்துரைக்கப்பட்டிருக்கிறது, அந்த விருது கிடைக்கும் என்ற நம்பிக்கையில் இருக்கிறார்.'' விளம்பரப்படுத்துவது நமக்கு மிக முக்கியம். உலகம் முழுவதிலும் உள்ள அதிகபடியான மக்களுக்கு இதைக் கொண்டுபோய் சேர்க்க விரும்புகிறோம்,'' என்கிறார்.■



Jaishree

Dr *ராஜசபாபதி நோயாளியை பரிசோதிக்கிறார்.*
*அருகில் சங்கத் தலைவர்* KK *சுக்.*

# ரோட்டரி மாவட்ட அமைப்புகள் நடத்திய
# அமைதிக்கான மாநாடுகள்

ரோட்டரி செய்திக் குழு

அமைதியின் மூலம் கிடைக்கும் பலன்களை முதலில் நமக்குள்ளேயே காண வேண்டும். அதன் பிறகு உலகம் முழுவதும் அமைதியை ஏற்படுத்துவதற்கு செயல் படுவோம் என்று RIDE Dr பரத் பாண்டியா கேட்டுக் கொண்டார்.

ஒத்திசைவு (Sympho-ny) என்ற தலைப்பில் D 3150 ஏற்பாடு செய்த அமைதிக்கான இரண்டு நாள் மாநாடு ஹைதராபாதில் நடைபெற்றது. 3132, 3160, 3181, 3182 ஆகிய மாவட்டங்கள் இணைந்து மேற்கொண்ட இந்த மாநாட்டில், பாண்டியா சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட அவர், ரோட்டரியின் அமைதி மையங்களின் அவசியத்தை வலியுறுத்தினார்.

RIDE கமல் சங்க்வி ரோட்டரி மேற்கொண்ட சேவைகளும் திட்டங்களும் எப்படி உலகில் பல்வேறு சமுதாயங்கள் இடையில் இணக்கத்தை ஏற்படுத்தின என்று தனது சொந்த அனுபவங்களைக் குறிப்பிட்டுப் பேசினார்.

மாநாட்டின் அனைத்து அமர்வுகளும் ரோட்டரியின் ஆறு முக்கியமான கோட்பாடுகளையும், பல்வேறு சமூகப் பணிகளின் மூலம் உலக அமைதிக்காகச் செயல்பட்டதையும் மையமாகக் கொண்டு நடைபெற்றன. மாநாட்டின் தலைவராக முன்னாள் மாவட்ட ஆளுநர் ஜவஹர் வத்லாமணியும் செயலராக முன்னாள் மாவட்ட ஆளுநர் C சுரேஷும் இருந்தனர்.

### கவனம் செலுத்தும் பகுதிகள்

மாநாட்டில் அடிப்படைக் கல்வி, எழுத்தறிவு தொடர்பான அமர்வுக்கு PRID சேகர் மேத்தா தலைமை வகித்தார்.

ரோட்டரி சங்கங்கள் தங்களது TEACH திட்டத்தின் மூலம் கிராமப்புறத்தின் தோற்றத்தையே மாற்றி விட்டனர் என்றார்.

D 3190 DG சுரேஷ் ஹரி, மாவட்ட முன்னாள் ஆளுநர்கள் பிரசாந்த் தேஷ்முக் (D 3131), ரவி வத்லாமணி (D 3150) ஆகியோரும் அமர்வில் பங்கேற்றனர். அவர்கள் நிதி திரட்டுவதன் முக்கியத்துவத்தையும் கார்ப்பரேட் சமூகப் பங்களிப்புத் திட்டங்கள் குறித்தும் வகுப்பறைகளில் மின்வழிக் கல்வியின் அவசியத்தையும் விவரித்தனர். பள்ளிகளின் கட்டமைப்பை மேம்படுத்து வது குறித்தும் அவர்கள் குறிப்பிட்டனர்.

குடிநீர், சுகாதாரம் குறித்த அமர்வுக்கு PDG ரமேஷ் அகர்வால் தலைமை வகித்தார். பள்ளியில் WinS திட்டம் குறித்து அவர் விளக்கினார். முன்னாள் மாவட்ட ஆளுநர்கள் கணேஷ் பட், ஜோர்ஸன் ஃபெர்னாண்டஸ் ஆகியோர் பேசினர்.

நோய்த் தடுப்பு மற்றும் சிகிச்சை, மகப்பேறு, குழந்தை நலம் ஆகியவை குறித்த அமர்வுக்கு அறக்கட்டளை மற்றும் பெரும்வெகுமதிக்கான ஆலோசகர் (EMGA) சாம் படிபண்ட்லா தலைமை வகித்தார். ரூபெல்லா, தட்டம்மை ஆகிய நோய்கள்




*ரோட்டரி அமைதி மாநாட்டில் தலைவர் ஜவஹர் வத்லமணி, RIDEs கமல் சங்கவி மற்றும் பரத் பாண்டியா, PRID சேகர் மேத்தா மற்றும் DG ரமேஷ் வாங்கலா.*

சவாலாக இருப்பதை அவர் விவரித்தார்.

D 3150 PDGs சரத்பாபு, ரவி வத்லாமணி, D 3160 PDG R. கோபிநாத், D 3190 PDG மதுரா சத்ரபதி, D 3132 PDG சதீபக் போ்ஃபலே, D 3131 DGN ரவி தோட்ரே ஆகியோரும் ரோட்டரியின் பல திட்டப்பணிகள் குறித்து பேசினர்.




PDG *ரவி வத்லாமணி,* PRID *சேகர் மேத்தா,* RIDE *பரத் பாண்டியா மற்றும்* EMGA *சாம் படிபண்ட்லா பள்ளிக்குழந்தைகளுக்க மேஜை-நாற்காலி வழங்கும் விழாவில்.*

**தொடர்புள்ள நிகழ்வுகள்**

தெலுங்கானா மாநிலத்தில் உள்ள 60 பள்ளிகளுக்கு 2,800 மேஜைகள் உலகளாவிய நிதியுதவியில் அளிக்கப்பட்டன. KPR பூங்காவில் அமைதிக்கான நடை மேற் கொள்ளப்பட்டது. அதில் 800 ரோட்டரி, ரோட்டராக்ட், மகளிர் உறுப்பினர்கள் பங்கேற்றனர். இந்த அமைதிக்கான மாநாட்டின் அம்சங்களை மாவட்ட ஆளுநர் ரமேஷ் வங்கலா தொகுத்து அளித்தார். உலக சமுதாயத்தில் உணவு, உடை, உறைவிடம், கல்வி, சுகாதாரம், பொருளாதார மேம்பாடு எட்டப்பட்டுவிட்டால், நிரந்தர அமைதி ஏற்படும் என்றார்.■

---

# பள்ளிக் கல்வியில் ஹிமாச்சலுடன் ரோட்டரி ஒப்பந்தம்

ரோட்டரி செய்தி குழு

மாவட்டங்கள் 3070, 3080 மற்றும் ஹிமாச்சலப் பிரதேச மாநில கல்வித்துறைக்கும் இடையே ஒரு ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டது. சமக்ரா என்ற இந்த ஒப்பந்தத்தின் படி, பள்ளிக் கல்வியை புதுப்பித்து, மேம்படுத்தி அதனுடன் தொடர்புடைய வசதி களையும் மேம்படுத்துவதற்காக உருவாக்கப்பட்டது.

D 3070 கவர்னர் பர்ஜீஷ் சிங்கல் மற்றும் D 3080 DG பிரவீன் சந்தர் கோயலின் சார்பாக, PDG தியான் சந்த் ஆகியோர், மாநில கல்வி அமைச்சர் சுரேஷ் பரத்வாஜ் மற்றும் துறை செயலர் டாக்டர் அருண் ஷர்மா ஆகியோர் முன்னிலையில் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டார்கள். “பள்ளிக் கல்வி மற்றும் அது தொடர்பான பிற வசதிகளை மேம்படுத்தவும் உயர்த்தவும்” இரு மாவட்டங்களும் ஹிமாச்சல அரசுடன் இணைந்து செயல்படும்.




D 3080 PDG *தியான் சந்த் (இடதில்) மற்றும்* D 3070 DG *பர்ஜேஷ் சிங்கல் (வலதில்) ஹிமாச்சல் பிரதேச கல்விதுறை அமைச்சர் சுரேஷ் பரத்வாஜ் மற்றும் செயலர் அருண் சர்மா ஆகியோருடன் ஒப்பந்தம் கையெழுத்திட்டப்பின்.*

ரொட்டேரியன்கள் செயல்படுபவர்கள் என்று அரசாங்கத்தை ஏற்க வைத்த தியான் சந்த் மேற்கொண்ட தொடர் முயற்சியின் விளைவாக, இந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. மற்றும் போலியோ ப்ளஸ் பிரச்சாரத்தில் எங்களுக்கு கிடைத்த வெற்றி எங்கள் முயற்சிகளுக்கு சான்றாகும். என்று திட்ட உடன்படிக்கையாளர்களில் ஒருவரான D 3070 PDG KK தீர் கூறினார்.

இரண்டு மாவட்டங்களிலும் உள்ள ரோட்டரி சங்கங்களும் தங்கள் பகுதிகளில் உள்ள பள்ளிகளை ஆய்வு செய்து, கற்பிக்கும் தரத்தை மேம்படுத்த பரிந்துரைக்கும். மேலும் இந்த கூட்டாண்மை, பள்ளி உள்கட்டமைப்பை தனியார் பள்ளிகளுக்கு நிகராக சீரமைக்கும்.■

# கொஞ்சம் தேநீர், நிறைய நினைவுகள்

சந்தியா ராவ்

*நம் மனத்தின் இறுக்கத்தைத் தளர்த்துவதற்கும், மகிழ்ச்சியால் துள்ளுவதற்கும் ஆங்கில எழுத்தாளர் அலெக்சான்டர் மேக் கால் ஸ்மித்* (Alexander McCall Smith) *எழுதிய பல நாவல்களில் நிறைய இருக்கின்றன. (அலெக்சான்டர் மெக் கால் ஸ்மித் பிரிட்டிஷ் எழுத்தாளர்)*

அது அதிகாலைப் பொழுது. சென்னையில் வானம் மேக மூட்டத்துடன் இருந்தது. எப்போது வேண்டுமானாலும் மழை பெய்யலாம் என்ற சூழல். சென்னையில் சூரியன் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டிவிடும். எனவே, எதையும் உறுதியாகச் சொல்ல முடியாது. இருந்தாலும் காற்று குளிர்ச்சியாக இருந்தது. ஊரே அப்போதுதான் சோம்பல் முறித்துக் கொண்டிருந்தது. அழகான காலைப் பொழுது சூடான ரெட் புஷ் (Red Bush) பிராண்ட் தேநீரை மெல்ல மெல்ல உறிஞ்சிக் குடிப்பதற்கு சரியான தருணம் அது. அதுவும் அலெக்சான்டர் மெக் கால் ஸ்மித் எழுதிய நாவலில் வரும் ரமோட்ஸ்வே என்ற கதாபாத்திரத்தைப் போல தேநீர் அருந்த ஆர்வம்.

ஸ்மித் எழுதிய துப்பறியும் நாவல்கள் முதல் பெண் துப்பறியும் ஏஜென்சி என்ற வரிசையில் இருக்கும். (தமிழில் தேவனின் துப்பறியும் சாம்பு, சுஜாதாவின் கணேஷ்-வஸந்த் போல) அலெக்சான்டர் ஸ்மித் நாவல்களில் வரும் பிரதான கதாபாத்திரம் Mma Precious Ramotswe கதை சம்பவங்கள் ஆப்பிரிக்க நாடான போட்ஸ்வானாவில் நடப்பது போல் எழுதப்பட்டிருக்கும்.

நிஜ வாழ்க்கையிலும் ரமோட்ஸ்வே போன்ற பாத்திரங்கள் உண்டு.

எனது சகோதரி லண்டனிலிருந்து கடந்த மாதம் வந்திருந்தாள். அவள் எனக்காக விசேஷமாகக் கொண்டுவந்தது ரெட் புஷ் தேநீர் பெட்டி. அதன் சிவப்பு வண்ணமும், மண்வாசனையும் எனக்கு ரொம்ப பொருத்தம். அந்த தேநீரை உறிஞ்சும் போதெல்லாம் ஸ்மித் படைத்த மறக்க முடியாத எண்ணற்ற கதா பாத்திரங்களும் கதை நிகழ்ந்த இடங்களும் வருணனைகளும் நினைவுக்கு வரும்.

ஸ்மித் புகழ் பெற்ற சமகால எழுத்தாளரான இயான் ரன்கின் (Ian Rankin) என்பவரையே ஒரு கதாபாத்திரமாக வைத்து 44, ஸ்காட்லாந்து தெரு (44 Scotland Street) என்ற நாவலை எழுதியுள்ளார். இயான் ரன்கினுக்கும் ஏராளமான வாசகர்கள் உண்டு. அவரது நாவல்களும் நிறைய விற்பனை ஆகின்றன. ஸ்மித் நாவலில் வருவதைப் படிப்பது உற்சாகமாகவும் சுவாரஸ்யமாகவும் இருக்கும்.

ஸ்மித் ஜிம்பாப்வே ஆப்பிரிக்க நாட்டில் பிறந்தவர். பிரிட்டன் எடின்பரோவில் சட்டம் படித்தார். எடின்பரோ பல்கலைக்கழகத்தில் மருத்துவச்சட்டத் துறைப் பேராசிரியராகவும் இருந்திருக்கிறார். வட அயர்லாந்து பெல்ஃபாஸ்ட் நகரில் உள்ள குயின்ஸ் பல்கலைக்கழகத்தில் (Queen's University) ஆசிரியராகப் பணியாற்றியபோது ஒரு போட்டியில் பங்கேற்பதற்காக எழுதினார். அதில் வெற்றி பெற்றுவிட்டார். போட்ஸ்வானா பல்கலைக்கழகத்தில் சட்ட ஆசிரியராக இருந்தார். எடின்பரோ பல்கலைக்கழகத்தில் மருத்துவச் சட்டப் பேராசிரியராக இருந்தார். அதனால்தான் அவரது நாவல்களில் அந்த இரு நாடுகளும் அடிக்கடி வருகின்றன. அவற்றின் மீதான அவரது பாசம் நாவல்களில் வெளிப்படுகிறது. ஸ்மித் தற்போது எடின்பரோவில் வசிப்பதாக விக்கிபீடியா கூறுகிறது. புகழ்பெற்ற ஹாரி பாட்டர் நாவல் தொடர்களை எழுதிக் குவித்த J.K. ரவ்லிங் (J K Rowling) வீட்டுக்கு அருகிலேயே ஸ்மித் வசிக்கிறார். நாட்ஸ் அண்ட் கிராஸஸ் (Knots and Crosses), தி ஹாங்கிங் கார்டன் (The Hanging Garden), இன் எ ஹவுஸ் ஆஃப் லைஸ் (In a House of Lies) ஆகிய நாவல்கள் எழுதிய இயான் ரன்கின், பிஹைன்ட் தி சீன்ஸ் அட் தி மியூஸியம் (Behind the Scenes at the Museum), லைஃப் ஆஃப்டர் லைஃப் (Life After Life), எ காட் இன் ரூயின்ஸ் (A God in Ruins), டிரான்ஸ்கிருப்ஷன் (Transcription) நாவல்களை எழுதிய கேத் அட்கின்ஸன் (Kate Atkinson) ஆகியோரும் அருகில் வசிக்கிறார்கள் என்று தகவல்.

மேக் கால் ஸ்மித்தின் பல்வேறு துறைகளின் நாட்டம் அவரது படைப்புகளில் வெளிப்படும். 44, ஸ்காட்லாந்து தெரு என்ற நாவலில் வரும் லிட்டில் பெர்ட்டி (Little Bertie) இசை வகுப்பு நடத்துபவர். இஸபெல் டல்ஹவுஸி (Isabel Dalhousie) தொடர்களில் வரும் ஜமி (Jamie) ஓர் இசை ஆசிரியர். இஸபெல் ஒரு தத்துவஞானி. கதாபாத்திரங்கள் சிக்கலான நிலையில் இருப்பவர்கள், சிக்கலான உறவுகளைக் கொண்டுள்ளவர்கள். சிலர் சூழலை



அலெக்சான்டர் மெக் கால் ஸ்மித்

மதிப்பவர்கள். மற்றவர்கள் நகரில் வசிப்பதை விரும்புவோர்.

மேக் கால் ஸ்மித் நாவல்களில் நிறைய இருக்கின்றன. அவற்றைப் பற்றி சிந்திக்கலாம், யோசிக்கலாம், சில படித்து மகிழலாம். சில சமயம் அவரது கதைகளில் வரும் களன்களில் கதா பாத்திரங்கள் என்ன சொன்னார்கள், என்ன செய்தார்கள், நம்மையும் அலசி ஆராய்வதற்கான சாத்தியமும் உண்டு. கதைகளில் வரும் ஒவ்வொரு கதாபாத்திரமும் (உங்களுக்குப் பிடிக்கும் பட்டியலில் இருக்கிறதா இல்லையா தெரியாது) வாசகருடன் நெருங்கி உரையாடுகின்றனர். கவிதையாகப் பேசுவார்கள். வாழ்ந்த வாழ்க்கையைத் தெளிவாக விவரிப்பார்கள். நாம் உணர்ந்ததையே உணர்ந்தபடி பேசுவார்கள். ஒரு வேளை இதெல்லாம்தான் ஸ்காட்லாந்தில் உள்ள ஹெப்ரிடஸ் என்ற இடத்தில் உள்ள மனித நடமாட்டமே இல்லாத தீவுகளை வாங்கத் தூண்டியிருக்கும் போல

அந்த இடங்களை நிச்சயமாக நான் எதுவும் செய்யப் போவதில்லை. அதை உறுதிப்படுத்துவதற்குத்தான் நான் இறந்த பிறகு அவை எல்லா இடங்களையும் பறவைகள், விலங்குகள், இதர ஜீவராசிகளின் வசிப்பிடமாக சரணாலயமாக மாற்றிவிட வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளேன் என்று வெளிப்படையாகக் கூறினார்.

மேக் கால் ஸ்மித் இன்னும் பல தொடர் நாவல்களை எழுதிக் கொண்டிருக்கிறார்.

பிம்லிகோ என்ற இடத்தில் அடுக்குமாடிக் குடியிருப்பில் வசிப்போர் குறித்த தொடர் நாவல், பொழுதுபோக்குக் கதைகள், ரமோட்ஸ்வே குறித்த குழந்தைகளுக்கான தொடர் நூல்கள் ஆகியவையும் ஹரியெத் பீன் (Harriet Bean), மேக்ஸ் அண்ட் மேடி (Max and Maddy), அகிம்போ (Akimbo), ஸ்கூல் ஷிப் டோபெர்மோரி (School Ship Tobermory) ஆகிய புத்தகங்களும் தயாராகி வருகின்றன. குழந்தைகளுக்கான நாவல்கள், நாவல்களைப் பற்றிய நாவல்கள், கல்வி நூல்கள், கவிதைகள் என ஏராளமாக எழுதிக் குவித்து வருகிறார். ஆசிரியர் தொழிலை விட்டுவிட்டு, முழுநேர எழுத்தாளராக ஆனதில் ஆச்சரியம் என்ன?

ஹார்ப்பர் காலின்ஸ் பதிப்பாளர்கள் ஜேன் ஆஸ்டின் எழுதிய புகழ்பெற்ற ஆறு நாவல்களை தற்கால எழுத்தாளர்களைக் கொண்டு மீண்டும் எழுதுவதற்கு முனைந்தது. இத்திட்டம் தொடக்கத்திலையே கைவிடப்பட்டது. ஆஸ்டினை விஞ்சி யாரால் நாவல் எழுத முடியும்? யார் நாவல் எழுத முன்வருவார்கள்?

ஜேன் ஆஸ்டின் எழுதிய எம்மா (Emma) நாவலை ஸ்மித் எடுத்து எழுதினார். ஆனால், அது சுவையாக இல்லை.

பிரபல பெண் எழுத்தாளர் டெபோரா யஃபி 2015ம் ஆண்டு ஆஸ்டினுக்குத் தோல்விதயா? (The Austen Fiasco?) என்ற தலைப்பில் கட்டுரை எழுதினார். விளையாட்டுத் தனமான புத்தகங்கள் எழுதப்படும் இந்த நாளில் எம்மா நாவலை யாரோ புதுப்பித்து எழுதியிருக்கிறார்கள். அது மூல நூலைப் போல இல்லை என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

எம்மா ஹரியெட்டை நிர்வாணமாக வரைந்திருக்கிறார். ஹார்ட்ஃபீல்டு பணியாளர்களை அதிர வைக்கிறார். ஜான் நைட்லி என்ற புகைப்படக் கலைஞர் இஸபெல்லாவை தன் மோட்டார் சைக்கிளில் கடத்திச் சென்றுவிடுகிறார். இப்படி திருத்தி எழுதப்பட்ட நாவல் ஆஸ்டின் நாவலைப் போல இல்லை. அது போகட்டும், படிப்பதற்குச் சுவையாக இருந்தால், யார் கவலைப்படுகிறார்கள்?

நான் ஓரினச் சேர்க்கை சார்ந்ததாக எம்மாவின் கதையை என்றாவது எழுதப் போகிறேன். மெக் கால் ஸ்மித் ஏமாற்றம் தரும் வகையில் எழுதியுள்ளார். ஆஸ்டின் நூல்களின் கதைக் களன்களைப் பார்க்கும்போது

*உங்களது நூல்கள் எனக்குப் பிடிக்கும் என்று கூறினேன். ஏதோ ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருந்த அவர், அதை வைத்துவிட்டு, சிரித்தார். நீண்ட நேரம் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார்.*




ட்ரோல்லோப் (Trollope), மெக்டெர்மிட் (McDermid) ஆகியோர் ரொம்ப சீரியஸாக எழுதியுள்ளனர். ஆனால், மெக் கால் ஸ்மித் எதற்கும் கவலைப்படாமல் புத்தகம் எழுதியிருக்கிறார் என்று தோன்றுகிறது.

யாரும் அவரது நூல் போர் அடிக்கிறது என்று சொல்ல மாட்டார்கள். அவர் மனித நேயம் மிக்கவர். சில ஆண்டுகளுக்கு முன் வாழ்க்கைக்கான இலக்கியம் (Hindu Lit for Life) என்ற இலக்கிய நிகழ்வுக்கு அவர் வந்திருந்தார். அப்போது அவர் அருகே அமர்ந்த நான், மெல்ல அவர் பக்கம் நகர்ந்து, பேச்சு கொடுப்பதற்காக, மன்னிக்க வேண்டும் சார், உங்களது நூல்கள் எனக்குப் பிடிக்கும் என்று கூறினேன். ஏதோ ஒரு புத்தகம் படித்துக் கொண்டிருந்த அவர், அதை வைத்துவிட்டு, சிரித்தார். நீண்ட நேரம் என்னுடன் பேசிக் கொண்டிருந்தார்.

இந்தக் கட்டுரையை எழுதுவதற்காக வார்த்தையைத் தேடி நான் போராட்டமே நடத்துவேன். ஆனால், அவர் ஒரே மணி நேரத்தில் ஆயிரம் வார்த்தைகளைக் கொண்டுவந்து எழுதுவார். அதன்பின் பசியோடு இருக்கும் வாசகர்களுக்குத் தீனி போட்டுவிடுவார். நான், சார், தயவு செய்து இன்னும் எனக்கு இன்னும் வேண்டும் என்கிறேன்.

*வடிவமைப்பு: S கிருஷ்ணப்ரதீஷ்*



**RC மன்னார்குடி D 2981**
ரோட்டரி உறுப்பினர்கள் மன்னார்குடியில் இருக்கும் மனோ விஷ்வாலியா வயது முதிர்ந்தோர் இல்லத்திற்கு விஜயம் செய்து, அங்குத் தங்கி இருக்கும் வயதானவர்களுடன் உறவாடினார்கள். சங்கத்தின் வருடாந்திர அன்னபூர்ணா தின திட்டத்தின் ஒரு பகுதியாக அங்கிருந்தவர்களுக்கு உணவு வழங்கினார்கள்.

**RC ராசிபுரம் D 2982**
DG நிர்மல் பிரகாஷ் சனர்புதூர் கிராம நிர்வாகத்திற்கு ஒரு வண்டி வழங்கினார். அது இறந்து போனவர்களின் பூத உடலை ஈமச்சடங்குகள் செய்ய இடுகாட்டுக்கு எடுத்து செல்ல பயன்படுத்தப்படும்.






**RC டெல்லி மயூர் விகார் D 3012**
பொது பூங்கா ஒன்றில் கட்டப்பட்ட கழிவறையை கிழக்கு டெல்லி மேயர் பிபின் பிஹாரி சிங், DG சுபாஷ் ஜெயின் மற்றும் PDGகள் ரமேஷ் அகர்வால் மற்றும் ஷரத் ஜெயின் முன்னிலையில் திறந்து வைத்தார்.

**RC மதுரை மிட்டவுன் D 3000**
சங்கம் முன்மொழிந்த லக்ஷ்மி பள்ளி இண்டராக்ட் சங்கம், கேரளா வெள்ள நிவாரணத்திற்காக கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்தார்கள். இந்த நிகழ்வின் மூலம் அவர்கள் ரூபாய் 2.30 இலட்சம் நிதி திரட்டினார்கள்.



# சங்க சேவைகள்

**RC புசாவால் D 3030**
பிரத்யேகமாக ஏற்பாடு செய்யப்பட்ட ஒரு மருத்துவ முகாமில் 50க்கும் மேற்பட்ட வயது முதிர்ந்தோர் பயனடைந்தனர். Rtns Dr நாராயண் அர்விகர் மற்றும் Dr மாயா அர்விகர் தலைமையில் மருத்துவர்கள் நோயாளிகளை பரிசோதித்தார்கள்.



**RC ஹோசியர்பூர் வடக்கு D 3070**
அஜ்ஜோவல் கிராமத்தில் இருக்கும் ஆச்சர்யா சுஷில் முனி அறக்கட்டளை மருத்துவமனை வளாகத்தில் 2500 மரக் கன்றுகளை ரொட்டேரியன்கள் நட்டார்கள். DG பர்ஜேஷ் சிங்கால் மற்றும் ஆச்சர்யா விவேக் முனிஜி சிறப்பு விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள்.



**RC பவுன்டா சாஹிப் D 3080**
ரொட்டேரியன்கள் சாலை பாதுகாப்பு விழிப்புணர்வின் ஒரு பகுதியாக கனரக வாகனங்களுக்கு பிரதிபலிக்கும் ஸ்டிக்கர்கள் ஒட்டினார்கள். ரூபாய் 17000 செலவில் 100க்கும் மேற்பட்ட ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டன.

**RC மொரதாபாத் அச்சீவர்ஸ் D 3100**
இந்த சங்கம் நகரத்தில் இருக்கும் ஸ்ரிஜன் பள்ளியில் Wins திட்டத்தை செயல்படுத்தியது. இந்த பள்ளியின் தேவைகளை தெரிந்து கொள்ள, ஆய்வு நடத்தினார்கள்.






**RC ருத்ராபூர் D 3110**
இந்த சங்கம் ஹாப்பி ஸ்கூல் திட்டத்தின் கீழ், இந்த பள்ளியை புனரமைத்து வகுப்பறைகளுக்கு கம்ப்யூட்டர்கள் வழங்கினார்கள். பள்ளி நிர்வாகம், இந்த நல்ல எண்ணத்திற்காக ரொட்டேரியன்களுக்கு நன்றி தெரிவித்தது.



**RC மௌ நாத் பான்ஜன் D 3120**
மௌ துவக்க பள்ளிக்கு விளையாட்டு சாதனங்கள் வழங்கப்பட்டது மற்றும் மாணவர்களுக்கு புத்தகம் மற்றும் எழுது பொருட்கள் கொடுக்கப்பட்டது.



**RC பாம்பே பே வியு D 3141**
மசாகான் பம்பாய் காது கேளாதவர்கள் மற்றும் வாய் பேச முடியாதவர்களுக்கான பள்ளியில் இருக்கும் குழந்தைகள் 30 பேருக்கு காது கேட்கும் கருவிகள் வழங்கினார்கள். பைகுலா போலீஸ் நிலையத்துடன் சேர்ந்து நல்ல தொடுகை மற்றும் கெட்ட தொடுகை பற்றி ஒரு விழிப்புணர்வு கொடுத்தார்கள், இந்த சங்க உறுப்பினர்கள்.



**RC ஹிராண்டாணி எஸ்டேட் D 3142**
பீவாண்டியில் இருக்கும் இரண்டு பள்ளிகளுக்கு ரூபாய் 14,000 மதிப்பில் கம்ப்யூட்டர் உதவியுடன் படிக்கும் சாதனைகளை சங்க உறுப்பினர், மானோஜ் ஹாரிஸ் சிங்காணி வழங்கினார். எட்டு பார்வையற்ற குழந்தைகளின் ஆண்டு கல்வி தொகையை ஆறு உறுப்பினர்கள் வழங்கினார்கள்.



**RC நெல்லூர் D 3160**
இந்த சங்கம் பிரேசிலில் இருக்கும் RC சா பாலோ பேசியாம்பு D 4610, RC நந்தியால் மற்றும் D 3160, இணைந்து இரண்டு கிராமத்தில் இருக்கும் இரு பள்ளிகளுக்கு இரு வழி பயன்பாடு மேசைகள் வழங்கினார்கள்.



**RC HD கோட்டே D 3181**
சங்க உறுப்பினர்கள், ஒரு அரசுப் பள்ளி மாணவர்களுக்கு மேல்படிப்பு வழிகாட்டல் புத்தகங்களை பரிசாக வழங்கினார்கள். இந்த கைக்கு அடக்கமான புத்தகங்கள் மேல்படிப்பு வழிகாட்டல் மற்றும் அதன் தொடர்பான தகவல்களுடன் மாணவர்களுக்கு உதவியாக இருக்கும்.



# சங்க சேவைகள்

**RC அம்பால்பாடி D 3182**

ரூபாய் 24000 செலவில் SVST துவக்க பள்ளியில் படிக்கும் 40 மாணவர்களுக்கு சீருடைகள் வழங்கப்பட்டது மற்றும் உடுப்பியில் இருக்கும் அஜ்ஜர்காட், அரசு உயர் நிலை பள்ளியில் இருக்கும் கழிவறை ரூபாய் 72000 செலவில் மறு சீரமைக்கப்பட்டது.



**RC காளூர் D 3201**

கேரளா மாநிலத்தில், குட்டநாடு மாவட்டத்தில் இருக்கும் எடத்துவா என்னும் இடத்தில் இருக்கும் ஒரு முகாமிற்கு, ஒரு லாரி நிறைய உணவு பொருள்கள், காலணிகள், போர்வைகள், சுத்தப்படுத்தும் கரைசல்கள் மற்றும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான உடைகள் போன்ற வெள்ள நிவாரணப் பொருட்கள் அனுப்பப்பட்டது.






**RC குவஹாத்தி சிட்டி D 3240**

நகரத்தில் உள்ள ஜல்ராம் பக்த மண்டலில், ஒரு கண் மருத்துவம் மற்றும் கண் புறை கண்டறியும் முகாம் நடத்தப்பட்டது. குழந்தைகளுடன் சேர்த்து சுமார் 120க்கும் மேற்பட்டோர் ஒரு பிரபலமான கண் அறுவை சிகிச்சை நிபுணரால் பரிசோதிக்கப்பட்டார்கள்.



**RC தாமோ D 3261**

நகரத்தின் முக்கிய பகுதிகளான கோவில்கள், பேருந்து நிலையம், முக்கிய கட்டிடங்களை சுற்றி மரக்கன்றுகள் நடப்பட்டது. சங்க உறுப்பினர்கள் பள்ளிகளுக்கு சென்று, குழந்தைகளை, அவர்களது பள்ளியில் மரக்கன்றுகள் நடுவதற்கு ஊக்கப்படுத்தினார்கள்.



**RC கல்கத்தா மிட்டவுன் D 3291**

ரூபாய் 40000 மதிப்பில் நரேந்திரபூரில் இருக்கும் ராம கிருஷ்ணா மிஷன் பார்வையற்ற ஆண்கள் பள்ளிக்கு ஒரு மீன் தொட்டி வழங்கினார்கள். அது இந்த பள்ளியில் இருக்கும் பார்வை கோளாறான மாணவர்களுக்கு தொழில் முறை பயிற்சி கொடுக்க பயன்படும்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்
வடிவமைப்பு: L குணசேகரன்

# ஓர் அற்பத்தனமான விளையாட்டு




TCA ஸ்ரீநிவாசராகவன்

அவர் ஐம்பது ஆண்டுகால நண்பர்தான். இருந்தாலும், போன வருடம் என்னைக் கடுப் பேற்றிவிட்டார். கொஞ்சம் பிடிவாதக் காரர். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்தான் என்று அடித்துச் சொல்கிறவர். அற்புதமான விளையாட்டு வீரர். தான் படித்த கல்லூரி, பல்கலைக்கழகம் சார்பில் டென்னிஸ், டேபிள் டென்னிஸ், கால்பந்து ஆகிய விளையாட்டுகளில் விளையாடியவர். வயதான பிறகு, கோல்ஃப் விளையாட்டில் ஆர்வம் காட்டுகிறார். அதிலும் நன்றாகத் தான் ஆடுகிறார். அத்தோடு இருந்தால் பரவாயில்லை. கோல்ஃப் தான் கடவுள் என்று துதி பாடுகிறார்.

ஒரு நாள் அவரிடம் கோல்ஃப் விளையாட்டு குறித்து சில கருத்து களைக் கூறினேன். அது ஓர் அபத்தமான விளையாட்டு என்பது என் எண்ணம். இது மாதிரி அற்பத்தனமான விளையாட்டு ஏதுமில்லை. அவரிடம், ஒரு முனை வளைந்த குச்சியால் சோம்பேறித்தனமாக ஒரு குட்டிப் பந்தை நெம்பித் தள்ளி ஒரு குழியில் விழச் செய்ய வேண்டும். இதில் என்ன உற்சாகமோ, சுறுசுறுப்போ இருக்கிறது? என்று கேட்டேன்.

---

*ஏன், கேரம் விளையாடக் கூடாதா? கோலிக் குண்டு விளையாடக் கூடாதா? அதுவும் கூட ஒரு காயை, கோலிக் குண்டைக் குழியில் தள்ளும் விளையாட்டுதானே?*

---

ஏன், கேரம் விளையாடக் கூடாதா? கோலிக் குண்டு விளையாடக் கூடாதா? அதுவும் கூட ஒரு காயை, கோலிக் குண்டைக் குழியில் தள்ளும் விளையாட்டுதானே? இன்னும் சொல்லப் போனால், கொஞ்சம் உட்கார்ந்து விளையாடலாமே...? ரம்மியமான சூழல் தேவை என்றால், பூங்காவுக்குச் செல்லலாமே? இப்படி விளையாடுவதைப் போல் பாவலா காட்ட வேண்டுமா? என்று அவரைக் கேள்விக் கணைகளால் துளைத்தேன்.

கிரிக்கெட்டைப் பாருங்கள்! சுமார் 100 கி.மீ. வேகத்தில் ஒரு பந்து வீசப்படுகிறது. விளையாட்டு மைதானத்தில் விழுந்து துள்ளிக் குதிக்கிறது. சில சமயம் பேட்ஸ்மேன் காதைக் கிழிக்கிற மாதிரி வேகமாக பறப்பதும் உண்டு. ஏதாவது படாத இடத்தில் பட்டுவிட்டால்தான் கஷ்டம். அப்படி வீசப்படும் பந்தை சின்ன மட்டையால் அடிக்க வேண்டும். அதில் ரன் எடுக்க வேண்டும். அந்த சவாலைத் தடுப்பதற்கு களத்தில் 11 பேர் இருப்பார்கள். அப்படியெல்லாம் சமாளிப்பதில் ஒரு “த்ரில்” இருக்கிறது. உற்சாகம் இருக்கிறது. அதை விட்டு, ஒரு குழியில் பந்தை நெம்பித் தள்ளுவதில் என்ன இருக்கிறது? பாட்மின்டன் ஆட்டம் கூட பரவாயில்லை. ஷட்டில் காக் எல்லா பகுதிகளிலும் பறக்கும். அதை அடிக்க வேண்டும். அதை விடுங்கள், கில்லி தாண்டு விளையாட்டு கூட உற்சாகமானது. அதில் கில்லியை தண்டத்தால் தட்டிப் பறக்க வைக்க வேண்டும். அதில் கூட வேலை இருக்கிறது. இப்படி எல்லா விளையாட்டுகளிலும் உடம்புக்கு ஏதாவது வேலை இருக்கிறது.

இப்படி என் நண்பரிடம் கூறிவிட்டு, தொடர்ந்தேன், கோல்ஃப் விளையாட்டு ஸ்காட்லாந்தில் ஆடு மாடு மேய்த்துக் கொண்டிருந்தவன் மேய்ப்பதற்காக வைத்திருந்த வளைந்த கழியால் கீழே கிடந்த கற்களைத் தள்ளியதிலிருந்துதான் தோன்றியது. அப்படியானால், எந்த அளவுக்கு போர் அடிக்கும் விளையாட்டு என்பதைப் புரிந்து கொள்ளுங்கள். தட்டணும், நடக்கணும்... தட்டணும்... நடக்கணும்... அவ்வளவு சோம்பேறித்தனமான சலிப்பூட்டும் விளையாட்டு. அப்படியிருக்க, காலில் சக்கரம் மாட்டிக் கொண்டு சுற்றி ஓடியாட வேண்டியவர்கள் எதற்காக ஒரு உலோகக் குச்சியால் தட்டித் தட்டிக் கொண்டு போய், ஒரு சின்ன கொடி வைத்திருக்கும் இடத்தில் குழிக்குள் ஒரு பந்தைப் போட வேண்டும்? அது போகட்டும், விளையாடுபவருடன் பக்கத்திலேயே கோல்ஃப் குச்சிகளை ஓர் அம்புறாத் தூணியில் சுமந்தபடி கூடவே வருகிறாரே அது எதற்காக? இப்படி அபத்தமாக இருக்கிறது இந்த விளையாட்டு!

இந்த விளையாட்டுக்குக் கட்டணம் வேறு செலுத்தவேண்டும். எதற்காக? மேலும், நண்பர்கள் தேவையென்றால், ஃபேஸ்புக், டுவிட்டர் போன்ற சமூக ஊடக தளங்கள் இருக்கிறதே என்று பேசி முடித்தேன்.

என் நண்பர் இதையெல்லாம் பொறுமையாகக் கேட்டுக் கொண்டார். பதில் பேசவில்லை. கோபமடைந்து பொங்கவும் இல்லை. கோல்ஃப் குறித்து ஆஹா ஓஹோ என்று எதையும் பேசவும் இல்லை. என் வாதங்களை முறியடிக்கவும் கருத்து கூறவில்லை.

பொறுமையாக, நிதானமாக அவர் நான் முட்டாள்களுடன் விவாதிப்பதில்லை என்று கூறினார்.

அவ்வளவுதான். இருந்தாலும் எங்களது நட்பு தொடர்கிறது. ஒரே விஷயம் அவர் கோல்ஃப் விளையாட்டு நிகழ்ச்சிகளுக்கு என்னை அழைப்பதேயில்லை. ■

ROTARY SERVICE PROJECTS

# VIDEO CONTEST

2018-19



Calling all **Rotary clubs in Zones 4,5 & 6A** to participate in this contest and win exciting cash prizes.

Club Presidents/Secretaries can submit one video (not more than **three minutes**) of the club's service projects implemented in the year, under The **Rotary Foundation's Six Areas of Focus:**

- **Peace and conflict prevention/ resolution**
- **Disease prevention and treatment**
- **Water and sanitation**
- **Maternal and child health**
- **Basic education and literacy**
- **Economic and community development**

**The contest will be judged by an esteemed panel convened by RID C Basker.**

The **top 3 entries** (from each of the **RI Zones of 4, 5 & 6A** India) will win the following cash awards:

**1st Prize: INR 100,000**

**2nd Prize: INR 50,000**

**3rd Prize: INR 25,000**

Rotary

The last date of submission of videos is **May 31, 2019.**

Video entries may be sent to **rotaryprojectsvideo@gmail.com** or mailed to **Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai - 600 008, Tamil Nadu.**

Alternatively, clubs can upload the video on **YouTube** and share the URL link to the above mail id.

**Please include the following too:**
Club Name and District, Contact Person and Email Id/Phone number, Name of the Video/Project and the URL Link.

Only Hi-res videos will be accepted. Videos can be in the format: **MOV, MP4 (MPEG4), AVI, WMV, FLV, MKV, VOB.**

ADVT

Rotary District 3012

BE THE INSPIRATION
R.I. THEME 2018-19

## FELICITATION DINNER OF RIPN SUSHIL GUPTA & VINITA GUPTA JI ON BEING NOMINATED AS ROTARY INTERNATIONAL PRESIDENT NOMINEE

13th October 2018 at Hotel Andaz, Aerocity, New Delhi



**Subhash Jain AKS**
District Governor 2018-19





## "Inspirit" DISTRICT INTERACT LEADERSHIP ASSEMBLY - 2018

Thursday, 11th October 2018 at G.L. Bajaj Institute of Technology & Management, Greater Noida












## TO ENHANCE ROTARY PUBLIC IMAGE : ORGANISED ROTARY DISTRICT 3012 STALL

from 10th to 20th October 2018 at Ram Lila Ground, Kavi Nagar, Ghaziabad








## ROTARY DISTRICT 3012 PARTICIPATED IN NORTH INDIA CAR RALLY FOR AWARENESS OF "IMMUNIZATION FOR MEASLES AND RUBELLA"

on 14th October 2018 at Gate No.1, Nehru Park Lawns, Chankyapuri, New Delhi



